
சுதேசமித்திரன்
அக் 22-
25
காசு



'கண்டதில்லை கண்டதில்லை
கொலு இந்தமாதிரி'




'இப்படியாப்பட்ட புள்ளேயோட ஈடு குடுக்கறதுன்னு... கைகொள்ளாத வேலே தான் போங்க. பயலேப் பளிச்சுன்னு சுத் தமா வெச்சுக்கணும்னு, எப்பப்பாருங்க, துணி தொவக்கற வேலேதான்...

'நல்ல வேளே, ஸன்லேட்தான் தெனம் காப்பாத்துது: வளப்பமா நுரை... துப்புர வாத் துணி வெளுக்குது தொல்லேயில் லாம. சுத்தமான சோப்புக்கு அடையா ளமே அதானே!'

புது டில்லிவாசி யான ஸ்ரீமதி கம லா வாத்வானி கூறுகிறர்: 'ஸன் லேட்டுக்கு எந்த சோப்பும் ஈடாக வே ஆகாது!'

# ஸன்லேட்

SUNLIGHT SOAP

ஸன்லேட் அருமை -- நம் துணிகளுக்கு நன்மை!

S. 31-X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

1—22-10-61



# பொருளடக்கம்

Vol XXXII. No 38
பிலவ - ஐப்பசி 6, அக். 22,'61

கம்யூனிஸ்டுகளின் கோஷம் 3
வந்ததும் வருவதும் 6
...வாக்கிலே...சுற்றி 7
திருப்பைஞ்ஞீலி—டாக்டர் மா. இராசமாணிக்கனார் 9
இரண்டு பெண்கள்—க. நா. சுப்பிரமண்யம் 13
...பூமும்—ராஜும் நாராயணன் 23
கொடுக்கல்-வாங்கல்—ஆர். ஷண்முகசுந்தரம் 33
நம்பிக்கை என்னும் மூச்சு—டி. கே. பாலச்சந்திரன் 40
பச்சோந்தி—எல்லார்வி 42
குடும்ப பார(த)ம்—எஸ். பெருமாள் 51
மர்ம உலகம்—உமாபதி 53
நல்வாழ்வு போதுமடி—கோமதி சுப்பிரமணியம் 56
ஒளியின் உதயம்—ரா. சுப்புலட்சுமி 66
மனக்கதவு—'சித்ரா' 73
திருவருளை வேண்டுவோம்!—ராஜேந்திரன் 79
அம்மன் சிலை—வேம்பன் 80
கமலியின் கடிதங்கள்—குங்குமம் 93
இதோ யோசனை—கோமதி ஸ்வாமிநாதன் 96

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் வாரப்பதிப்பு — வாழ்க நற்றமிழர்

# கம்யூனிஸ்டுகளின் கோஷம்

காங்கிரஸைத் தவிர, மற்றக் கட்சிகள் அனைத்தும் பிற்போக்கானவை என்று கம்யூனிஸ்டுகளின் தேர்தல் அறிக்கை கோஷம் செய்கிறது. இந்த நற்சாட்சிப் பத்திரத்தைக் கண்டு பொறுப்புள்ள காங்கிரஸ்வாதி எவரும் குதூகலமடைந்துவிடப் போவதில்லை. மக்களின் மதிப்புக்குரிய ஒரு கோஷ்டியிடமிருந்து நற்சாட்சிப் பத்திரம் பெறுவோர்க்குப் பெருமையுண்டு. ஆனால், கம்யூனிஸ்டுகளிடமிருந்து பாராட்டுப் பெறுவது உண்மையில் ஒரு இழுக்கு. ஏனெனில் ஜனநாயகத்திலோ, சொந்த தேச நலத்திற்காக உழைப்பதிலோ அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்பது ஏற்கெனவே பட்டவர்த்தனமான உண்மை. இந்நிலையில் அவர்கள் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் தங்களுக்கு விசேஷ வெற்றி கிடைத்துவிடுமென்ற நம்பிக்கை பிரதிபலிக்கவில்லையாயின், அது முற்றிலும் இயற்கையே. இதற்கு முந்தைய இரு பொதுத் தேர்தல்களில் கிடைத்த அளவு வெற்றி அடுத்த தேர்தலிலும் கிடைத்தால் போதுமென்ற முறையில் அவ்வறிக்கை அமைந்திருக்கிறது.

காங்கிரஸ் தனது ஸோஷலிஸ்டுக் கொள்கைகளை இன்னும் உறுதியுடன் தீவிரமாக நடத்தி வைக்கும்படி செய்வது தனது நோக்கம் என்று கம்யூனிஸ்டுக் கட்சி அறிவுறுத்துகிறது. சோவியத் நாடுகளைப்போல் இங்கும் அரசாங்கமே எல்லா முக்கியத் தொழில்களையும் மேற்கொண்டுவிட்டால் நமது கம்யூனிஸ்டுத் தோழர்களுக்குத் திருப்தியாயிருக்கும். அவர்கள் கோரும் சமுதாய அமைப்பில், பிரஜைகளுக்கு பொருளாதாரம் அல்லது அரசியல் துறைகளில் சிறிதும் சுதந்திரம் இருக்க முடியாது. சோவியத் நாடுகளைப்போல் இங்கும் மக்கள் அரசாங்கத்தின் பரிபூரண அடிமைகளாக வாழ்வதைத் தவிர, வேறு வழியிராது. நமது கம்யூனிஸ்டுகள் இதே மூச்சில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதைப்பற்றியும் பேசுவது நகைப்பு உண்டாக்கும்.

## தொழிலாளர் நலன் பெருக...

தொழிலாளருக்கு சமீப காலத்தில் வைத்திய வசதி, க்ஷேம நிதி போன்ற இனங்களில் ஓரளவு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்வதும், மேனாடுகளி

யிருப்பதுபோல் இன்னும் பல வசதிகள் அவர்களுக்குக் கிடைப்பதும், முக்கியமாக தொழிலாளரின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதைப் பொறுத்தவை என்பதை இந்தியத் தொழிலாளர் மந்திரி ஸ்ரீ நந்தா எடுத்துக் காட்டியுள்ளார். தொழிலாளருக்கு அதிக சௌகரியங்கள் வேண்டுமெனில் அதற்கேற்ப தொழில்கள், அதாவது பண்ட உற்பத்தி பெருகியாக வேண்டும். தொழிலாளர் சங்கங்கள் இதுவரை அவர்களது ஊதிய அதிகரிப்புக்கே போராடி வந்திருக்கின்றன. தொழிலாளரது உற்பத்தித் திறன் அதிகரித்தால்தான், அவர்களது ஊதியத்தைக் கணிசமாக உயர்த்துவதும், அவர்களுக்கு மற்ற பல வசதிகள் ஏற்படுவதும் சாத்தியமென்று ஸ்ரீ நந்தா அறிவுறுத்தியிருப்பது தொழிலாளர் தலைவர்களின் நெஞ்சில் பதிய வேண்டும். உற்பத்தியைப் பெருக்குவதில் தொழிலாளருக்குமட்டுமின்றி நிர்வாகத்தினருக்கும் பங்குண்டு. உண்மையில் அவர்களது கூட்டு முயற்சியின் மூலமே கூடியவரை பண்டங்களை அதிகமாகவும், மலிவாகவும் உற்பத்தி செய்வது சாத்தியமாகும். இம்முயற்சி உருப்பெறுவதற்கான வழி முறைகளில் இரு தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

## அசட்டையின் சிகரம்

பொதுவாக சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளை சரிவரக் கவனிப்பதில்லை என்ற புகார் நெடுநாளையது. ஆனால், குண்டூரிலுள்ள ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரியில் ஏற்பட்டுள்ள நிகழ்ச்சி அனைவரையும் திகைக்கச் செய்யும். அங்கு பிரசவ அறையில் முதல் நாள் பிரசவித்த தாய் நினைவிழந்து படுத்திருக்கையில், அவளருகே தொட்டிலில் இருந்த பச்சிளங் குழந்தையை ஒரு நாய் தூக்கிச் சென்றுவிட்டது. அவ்விடுதிக்கு அந்தச் சமயம் பொறுப்பாளியாயிருந்த வைத்தியர் குழந்தையைக் கவ்விச் சென்ற நாயைத் துரத்தி, குழந்தையை மீட்குமுன், அதன் உடலில் ஏறக்குறைய பாதியை நாய் ஜீரணித்துக்கொண்டுவிட்டது.

நாய் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து பிரசவ அறையிலிருந்த குழந்தையை எடுத்துச் சென்று கடித்துத் தின்னும்வரை அங்குள்ள வைத்தியர், நர்ஸுகள், வாயிற் காப்போர் உள்பட பெருவாரியான சிப்பந்திகள் என்ன செய்துகொண்டிருந்தனர் என்று தெரியவில்லை. பழியை ஒவ்வொருவரும் பிறர் தலையில் சுமத்த முயன்றால் அதில் ஆச்சரியமொன்றுமில்லை. இத்தகைய ஒரு கோரம் இதுவரை ஆஸ்பத்திரியின் வரலாற்றில் கண்டதில்லையென்று அதன் மேலதிகாரி கூறுகிறார். இதைக் கேட்டு யாரும் ஆறுதலடைந்துவிடப் போவதில்லை. தற்போதைய நிகழ்ச்சிக்குப் பொறுப்பாளிகள் யார், பொது ஸ்தாபனங்களில் இத்தகைய அஜாக்கிரதையை, குறிப்பாக கடமையில் அசிரத்தையைத் தவிர்க்க சர்க்கார் இப்போதேனும் உறுதியுடன் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருமா என்பதே பொதுமக்கள் அறிய விரும்புவதெல்லாம்.



## வந்ததும்

அமெரிக்காவில் மூளை வளர்ச்சிக் குறைவுக்கான காரணங்களை ஆராய நிபுணர் குழுவொன்றை ஜனாதிபதி கென்னடி நியமித்துள்ளார்.

—வாஷிங்டன் செய்தி

இந்த ஆராய்ச்சி பலன் தந்து, மற்றைய உலக நாடுகளுக்கெல்லாம் மூளை ஏற்றுமதி செய்யும் அல்லது கடன் கொடுக்கும் அளவுக்கு அமெரிக்காவில் மூளை வளம் பெருகுமென எதிர்பார்க்கிறோம்.

ஃ ஃ ஃ

சர்க்கார் பஸ்கள் 'ஓவர்டேக்' செய்வதைப் போலீசார் ஏன் தடை செய்வதில்லை?

—ஒரு கேள்வி

அந்தப் பஸ்கள் 'ஓவர்லோட்' ஆக ஓடுகிற குட்டை உடைக்க வேண்டியிருக்குமே!

ஃ ஃ ஃ

வடக்கிலிருந்து சரக்குக் கொண்டு வரும் வாகின்கள், திரும்பும் போது காலியாகச் செல்வதால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யத் தென்னாட்டுத் தொழிலதிபர்கள் முன்வரவேண்டும்.

—எஸ். வி. ராமசாமி

ஆபத்துதான்! இனிமேல் டாக்ஸிக்காரர்கள், திரும்பிப் போவதற்கும் சேர்த்து, மீட்டர் காட்டும் தொகையைப்போல இரண்டு மடங்கு பணம் கேட்கக்கூடும்!

ஃ ஃ ஃ

இசை முதலிய கலைத்துறைகளில் பகைமை உணர்ச்சி கூடாது.

—பி. சுப்பராமன்

புன்னாகவராளி பாடுகிற வித்வான், கருடத்வனி ராகத்தைக் கேட்டவுடன் பெட்டிப் பாம்பாவார் என்று எதிர்பார்க்க முடியுமா?

ஃ ஃ ஃ

மனிதனுக்கு ஒரு நம்பிக்கை போன் மற்றொன்றில் நம்பிக்கை வரலாமே தவிர, எதிலும் நம்பிக்கையின்றி இருக்கமுடியாது.

—சி. சுப்ரமண்யம்

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான், வோட்டுரிமை பெற்ற உலக மக்கள், தங்களை ஆளும் கட்சியை அடிக்கடி மாற்றி வருகிறார்கள்!

ஃ ஃ ஃ

அரசியல் தலைவர்கள் உருவங்களைத் தபால் தலையில் வெளியிடுவதுபோல, எழுத்தாளர்கள் உருவங்களையும் வெளியிடலாம் என்ற யோசனை 'நிருபர்கள் கில்டு' ஆண்டுவிழாவில் தெரிவிக்கப்பட்டது.

—சென்னைச் செய்தி

தொடர்ந்து நூற்றுக்கணக்கான கதை, கட்டுரை, கவிதைகளை ஆசிரியரின் வந்தனத்துடன் திரும்பப் பெற்றுக்கொண்ட, அச்சிலேறாத 'எழுத்தாளர்கள்' உருவங்களை, புக் போஸ்டின் கட்டணமான 8 ந. பை. தபால் தலையில் பொறிக்கலாமென யோசனை கூறுகிறோம்!

ஃ ஃ ஃ

யூகலிப்டஸ் மரத்திலிருந்து காகிதம் தயாரிக்கும் முயற்சி வெற்றியடைந்துள்ளது.

—திருவனந்தபுரம் செய்தி

இலக்கியப் பத்திரிகைகள் இந்தக் காகிதத்தை டன் கணக்கில் வாங்கி வைத்துக்கொண்டு சிறுகதைகளையும் நாடக நாவல்களையும் அதில் அச்சடித்து விற்றால், வாசகர்கள், தலைவலி மாத்திரைகளைத் தேடிப்போக வேண்டியதில்லை!

ஃ ஃ ஃ

'எங்கள் இறுதிச் சடங்கை நாங்களே நடத்திக் கொள்வது போல எங்கள் நிலை இருக்கிறது' என்று நிலஉச்சவரம்புச் சட்டம்பற்றி மதுரை நிலப்பிரபு ஒருவர் மேல் சபையில் கூறினார்.

—சென்னைச் செய்தி

ஆஹா! சோகத்தின் உச்ச வரம்புக்கே போய்விட்டாரே அவர்!

## வராததும்



# காற்று வாக்கிலே...

## இதுவும் ஒரு வெற்றி

நாட்டின் நலிவுகள் நீங்க, மக்கள் வாழ்வு மலர்ந்திட ஐந்தாண்டுத்திட்டங்கள் தீட்டப்பட்டன. மக்கள் தொகையைத் தவிர மற்ற துறைகளிலெல்லாம், உற்பத்தியைப் பெருக்குவதே நோக்கம். 'உற்பத்தி செய், அல்லது உன் அழிவைத் தேடிக் கொள்' என்று பாரதப் பிரதமர் ஒரு முறை வன்மையாக எச்சரித்தார். உற்பத்தியைப் பெருக்குவதில் பல துறைகளில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருப்பதாக நமது அரிய அமைச்சர்கள் அடிக்கடி ஆர்ப்பரிப்பதுண்டு. புள்ளி விவரங்களை அள்ளி வீசுவார்கள். ஆனால் சமீபத்தில் மேல் சட்டசபையில் தமிழ்நாட்டின் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி விவாதம் நடந்தபோது சில அங்கத்தினர்கள் நமது விதைப் பண்ணைகள் குறித்து ஏளனமாகப் பேசினர். மந்திரி கொதித்தெழவில்லை. மிகவும் அடக்க ஒடுக்கமாகப் பதிலளித்தார். காரணம் என்ன?

விவசாயத் துறையில் உற்பத்தியைப் பெருக்க உறுதிகொண்டிருக்கிறோம். விளைபொருள் உற்பத்தியைப் பெருக்க விவசாயிகள் பொறுக்கு விதைகளைப் பயன்படுத்துவதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்து ஏராளமான விதைப் பண்ணைகளை ஆரம்பித்தது. விவசாய அபிவிருத்திபற்றி எந்த மந்திரி எங்கே பேசினாலும் இதுபற்றிய புள்ளி விவரங்களைக் கூறாமல் இருப்பதில்லை. இரண்டாவது திட்ட கால முடிவுக்குள் நாட்டில் நாலாயிரம் விதைப் பண்ணைகள் நிறுவப்பட்டனவாம். மூன்றாவது திட்ட ஆரம்ப காலத்திலேயே மேலும் எண்ணூறு விதைப் பண்ணைகள் நிறுவ உத்தேசமாம்.

இத்துறையில் ஏட்டளவில் மகத்தான அபிவிருத்தி கண்டபோதிலும் உருவான பலன் காணவில்லை என்பதைத் திட்டக் கமிஷனின் மதிப்பீடு ஸ்தாபனம் சமீபத்தில் எடுத்துரைத்தது. போதாக் குறைக்குச் சென்னை சட்டசபையின் தணிக்கைக் கமிட்டியும் தற்போது கண்டனக் குரல் எழுப்பியுள்ளது. சென்னை மாநிலத்தில் விதைப் பண்ணைகள் செயல்பட்டுவரும் லட்சணத்தை அது அம்பலப்படுத்தியுள்ளது. 1956 முதல் 1959 வரை மாநில சர்க்கார் 172 விதைப்பண்ணைகள் துவக்கியது. ஆனால் 1958-ஆம் வருஷம் முடிவடைவதற்கு முன்னரே 51 விதைப் பண்ணைகளை மூட நேர்ந்தது. எதிர்பார்த்தபடி லாபமின்றி அவற்றால் நஷ்டமே ஏற்பட்டது. அதிகாரிகள் வேறு பல சாக்குப் போக்குகள் கூறினர். அந்த விதைப் பண்ணைகளில் பாசன வசதி போதுமானதாயில்லை; ஸ்தல மக்கள் போதிய அளவு ஒத்துழைக்கவில்லை; பண்ணைகளில் நிலத்தின் தரம் தகுந்ததாயில்லை என்றெல்லாம் கதைத்தனர். இவையெல்லாம் நொண்டி சால்ஜாப்புகள் என்று தணிக்கைக் கமிட்டி கூறியுள்ளது. பண்ணைகள் நிறுவ நிலங்களைத் தேர்ந்தெடுத்த போது அதிகாரிகள் போதிய கவனம் செலுத்தியிருக்கலாம் என்று சுட்டிக் காட்டியிருக்கிறது. எப்படிப் போனாலென்ன? லட்சக்கணக்கில் பணம் நஷ்டமானால் என்ன? ஏட்டளவில், புள்ளிக்

கணக்கு அளவில் திட்டம் வெற்றிகரமே!

இந்த லட்சணத்திலும் விதைப் பண்ணைகளைப் பொறுத்தவரை தமிழ் நாடு மற்ற மாநிலங்களைவிட மிகவும் தேவலை என்று மந்திரி திருப்திப்படுகிறார். நாட்டில் ராஜ்ய அரசாங்கங்கள் நடத்தும் விதைப் பண்ணைகளில் நூற்றுக்குத் தொண்ணூறு நஷ்டத்தில் இயங்குவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதுவன்றோ வெற்றி! நமது அமைச்சர்களுக்கும், பெரிய அதிகாரிகளுக்கும் கீதையில் உள்ள ஒரு உபதேச மொழி நன்றாகத் தெரியும். பிரதி பலனை எதிர்பாராது கடமையைச் செய்ய வேண்டும் என்று கண்ணன் காட்டிய வழியைப் பொது மக்களுக்கு அடிக்கடி உபதேசம் செய்கிறார்கள். திட்ட அமுலில் அதே போல் காரியங்களைச் செய்கிறார்களா?

ஃ ஃ ஃ

என்ன இருந்தாலும் நமது மாநில அரசின் யோசனையொன்றை, மத்திய அரசாங்க மந்திரியொருவர், அதுவும் 'குட்டி மந்திரி' யொருவர், உருப்படாது என்று சொன்னால் அது நமக்கெல்லாம் ரொம்ப அவமானமாகத்தான் இருக்கிறது. கிராமங்களில் பணிபுரிய குறுகிய காலப் பயிற்சி வைத்தியர்கள் திட்டமொன்றை நம் தமிழ்நாட்டு அரசு யோசித்துள்ளதல்லவா? இந்த அரைகுறை வைத்தியர்கள் திட்டம் சிலாக்யமானதல்ல என்று மத்திய சமுதாய நல வளர்ச்சி மந்திரி துணிந்து கூறி விட்டார். இத்தகைய ஏற்பாட்டினால் கிராம வைத்திய வசதிப் பிரச்னையைத் தீர்க்க முடியாது என்று அவர் தெரிவித்தார். ஆனால் இதுதான் மாநில அரசாங்கத்தின் நோக்கம் என்று மத்திய மந்திரிக்கு நிச்சயம் தெரியுமா? மேல் சட்டசபையில் மெம்பர் ஒருவர் குறிப்பிட்டதுபோல் கிராமங்களில் ஜனத் தொகையைக் கட்டுப்படுத்துவதே அரசாங்கத்தின் அவா. அதற்கு அரைகுறை டாக்டர்கள் திட்டத்தைவிடச் சிறந்த மார்க்கமுண்டா?

...ஊர் சுற்றி

★

## அட்டைப்பட விளக்கம்:




## சிலைவடித்து...

திருமகளும் கலைமகளும்
தேவியுமா மகேஸ்வரியும்
அனுதினமும் மனிதரெலாம்
அருள்வேட்கும் பரம்பொருள்!
மூவுலகும் ஒன்பதுநாள்
முன்னிரவில் பூசனையால்
தேவிபரா சக்தியென
தெய்வதங்கள் மூன்றினையும்
பாவமெலாம் போக்கியெமைப்
பரம்பொருள்நீ வாழ்விப்பாய்!
செவிக்கினிய தேவிபுகழ்
செம்மொழியி லோதியிட்டு
வழிபடுமிப் புரட்டாசி
வாழ்வின்ப நிலவிரவு
திருமகளே சீதையெனத்
திருமாலே ராமனென
உருவெடுத்து உலகியலை
உள்ளபடி காட்டிமக்கள்
ஒருமையுடன் உய்வதற்கு
ஒளியீந்தார் மானிடத்தார்
பெருமையுறச் சிலைவடித்துப்
பெற்றியெலாம் பெற்றுய்வார்.

—ஆரார்வி.



# திருப்பைஞ்ஞீலி

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

திருப்பைஞ்ஞீலி பாடல் பெற்ற இடங்களில் ஒன்று. இது திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கில் ஏறத்தாழப் பதினொரு கல் தொலைவில் உள்ளது. இத்தலத்தில் உள்ள சிவன் கோவிலில் பசியவாழை மரம் இருக்கின்றது. வாழை வகைகளுள் பைஞ்ஞீலி என்பதும் ஒன்று. பசியவாழை என்பது அதன் பொருள். கோவிலில் உள்ள வாழை மரத்தின் இலை இறைவனுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் மிகுந்த பசியுடன் இத்தலத்திற்கு வந்தபொழுது சிவபெருமான் கட்டமுது கொடுத்தார் என்பது வரலாறு.

## கல்வெட்டுக்கள்

இக்கோவிலில் 38 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை கி. பி. 12-ஆம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு முடிய நாடாண்ட மன்னர்கள் காலத்தில் உண்டானவை. அவற்றில் குறிக்கப்பட்டுள்ள மன்னர்களின் பெயர்களும் அவர்தம் காலங்களும் கீழே காண்க:

| | |
|---|---|
| விக்கிரம சோழன் | கி. பி. 1122—1135 |
| குலோத்துங்கன் 3 | கி. பி. 1178—1218 |
| இராசராசன் 3 | கி. பி. 1216—1246 |
| சுந்தரபாண்டியன் | கி. பி. 1216—1238 |
| இராசேந்திரன் 3 | கி. பி. 1246—1279 |
| வீரசோமேசுவரன் (இராசேந்திரன் காலத்தவன்)—ஒய்சள அரசன் | |
| குலசேகர பாண்டியன் | கி. பி. 1268—1311 |
| வேங்கடபதிராயர் | கி. பி. 1592— |
| ஸ்ரீரங்கராயர் | கி. பி. 1693— |

## நிலதானம்

இக்கோவிலுக்கு அரசர், அரசியர், அலுவலாளர் அகம்படிப்பெண்டு எனப் பலரும் நிலதானம் செய்துள்ளனர். அவர்கள் தமிழகத்துப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

சேலம் மாவட்டத்தில் ஆற்றூர்க் கூற்றத்தில் ஆரகளூர் என்பது ஒரு பதி. அது ஒரு கோட்டையைப் பெற்றிருந்த நகரம். அங்கு ஒரு சிற்றரசன் ஆண்டு வந்தான். அவன் சோழர்களுக்கு அடங்கியவன். அவனது அரண்மனையிலிருந்த பணிப்பெண் (அகம்படிப்பெண்டு) நம்பாண்டாள் என்பவள். அவள் தாயின் பெயர் பெரியநாய்ச்சி என்பது. நம்பாண்டாள் சைவசமய குரவர் மூவர் அல்லது நால்வர் சிலைகளைத் திருப்பைஞ்ஞீலிக் கோவிலில் வைத்தாள்; அவற்றின் வழிபாட்டுச் செலவுக்காக நிலதானம் செய்தாள். இது மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் நடைபெற்றது.

திருப்பைஞ்ஞீலி உடையார் படையலுக்காக இராசராச வளநாட்டு வடவழிநாட்டு நெல்வேலியில் ஒரு பகுதி நிலம் விடப்பட்டது. சுந்தர பாண்டியன் காலத்தில் அவன் மைத்துனனை அழகிய பெருமாள் வேண்டுகோளின்படி இராசராச வளநாட்டு மீப்பிலாறு என்னும் பகுதியைச் சேர்ந்த செந்தாமரைக் கண்ணநல்லூர் என்னும் சிற்றூர் 'சுந்தர பாண்டியன் சந்தி'யின் செலவுக்கு வரியிலி தேவதானமாக விடப்பட்டது. சுந்தர பாண்டியன் செலவில் நடைபெறும் சிறப்புப் பூசையே 'சுந்தர



பாண்டியன் சந்தி' என்பது. இங்ஙனம் விடவேண்டும் என்ற ஆணை சுந்தர பாண்டியனால் பிறப்பிக்கப்பட்டது. சுந்தர பாண்டியன் திருவரங்கத்திலிருந்த தன் அரண்மனையில் 'மழவராயன்' என்ற அரியணையில் இருந்த பொழுது இக்கட்டளையைப் பிறப்பித்தான்.

விக்கிரம சோழன் திருப்பைஞ்ஞீலிக் கோவிலில் ஒரு சிவலிங்கத்தை நிறுவினான். அது விக்கிரம சோழீச்சரம் உடையான் எனப்பட்டது. அதற்கு நிலங்கள் விடப்பட்டன. அவ்வேந்தன் திருவெள்ளறை, மூவாயிரநல்லூர், மண்பாறை என்ற சிற்றூர்களிலிருந்த நிலங்களைத் திருப்பைஞ்ஞீலி உடைய நாயனார்க்குத் தேவதானமாக விட்டான். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வெங்கானத்தம் என்னும் சிற்றூரில் இருந்த தேவதான நிலங்களின் வரி தள்ளப்பட்டது. 'கோதண்டராகவன் சந்தி' என்ற சிறப்புப் பூசைக்காகக் கன்னியூர் தேவதானமாக விடப்பட்டது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் இரவிவர்மன் குலசேகரன் என்ற சேர வேந்தன் பெயரால் 'குலசேகரன் சந்தி' என்ற சிறப்புப் பூசை நடைபெறக் களனிநாட்டு நெற்குப்பை என்னும் சிற்றூர் வரியிலி தேவதானமாக விடப்பட்டது. சாம்பிராணி, கற்பூரம் முதலிய நறுமணப் புகைப் பொருள்களை எரிக்கத் தண்பை என்னும் சிற்றூர் கோவிலுக்கு விடப்பட்டது.

திருமஞ்சனப் பெருவழி என்னும் தெருவை அமைக்கத் தொடையூர்ச் சபையார் கோவிலுக்கு நிலத்தை விற்றனர். அத்தெருவின் இரண்டு பக்கங்களிலும் தென்னை மரங்கள் பயிராக்கப்பட்டன. சுந்தர பாண்டியன் காலத்தில் 'கலியுகராமன் சந்தி' என்ற (அரசன் பெயரால் அமைந்த) சிறப்புப் பூசைக்காக வெங்கானத்தம். குன்றத்தூர், வேங்கைமன்றம் என்னும் சிற்றூர்களின் வரிகள் வழங்கப்பட்டன. மேலும் செப்பாலைக்குடி என்ற தேவதான கிராமத்தின் ஒரு பகுதி வரியும் இதற்காக வழங்கப்பெற்றது.

கோவிலின் இரண்டாம் திருச்சுற்றில் திருநடை மாளிகையின் கிழக்குப் பக்கத்தில் உய்யக்கொண்டான் சோழப் பிள்ளை என்பவன் உய்யக் கொண்ட நாயனார் என்ற சிவலிங்கத்தை நிறுவினான்; அதன் பூசைக்காகவும் படையலுக்காகவும் நிலம் வாங்கிக் கோவிலுக்கு விட்டான். அப்பெருமகனே, கோவிலில் பத்து விளக்குகள் எரிக்கவும் ஏற்பாடு செய்தான். மலைமண்டிலத்துக் குதிரைச் செட்டியான புகழன், திருத்தால மணவாளன் என்பவன் திருத்தாலீசுவர முடைய நாயனார் என்ற பெயரில் ஒரு சிவலிங்கத்தைக் கோவிலில் வைத்தான். அதன் பூசைக்கும் படையலுக்கும் நிலத்தையும் பணத்தையும் வழங்கினான்.

சாரங்கராயர் காலத்தில் கோவில் தேவரடியார்க்கு நிலம் உரிமையாக்கப்பட்டது.

சுந்தர பாண்டியன் பிறந்த மூல நட்சத்திரத்தில் சிறப்புப் பூசையும் படையலும் நிகழ்த்தப் புடகம் என்ற சிற்றூர் தேவதானமாக விடப்பட்டது. கோவிலுக்கு எழுநிலைக்கோபுரம் கட்டப் பெரிய கள்ளிக்குடி என்னும் சிற்றூர் தானமாக விடப்பட்டது.



## பிற தானங்கள்

பாண்டியனை வென்கண்ட சோழபுரத்து எண்ணெய் வாணிகர் இரண்டு செக்குகளைக் கோவிலுக்கு வழங்கினர். ஒரு நந்தவனம் வளர்ப்பதற்காகத் தேவதான கிராமங்கள் பலவற்றிலிருந்தும் உதவி செய்யப்பட்டது. கோவிலில் பெரிய நாட்டான் திருமாளிகையும், பெரிய நாட்டான் திருக்கோபுரமும் கட்டிமுடிக்க நாட்டார், நகரத்தார், பிரம்ம தேயக்குடிகள் முதலியோர் பொருள் வழங்க ஒப்புக்கொண்டனர். இம்முயற்சி குலசேகர பாண்டியன் காலத்தில் எடுக்கப்பட்டது. ஒய்சளன் வீரசோமேசுரனும் அவன் மனைவியும் ஒரு மடத்தைக் கட்டினர்.



## சிறப்புச் செய்திகள்

பாச்சில் என்ற சிற்றூரில் இருந்த திருமேற்றளியுடைய நாயனார் கோவில் அதிகாரிகள் அக்கோவில் நிலத்தைத் திருப்பைஞ்ஞீலியுடைய நாயனார் கோவிலுக்கு விற்றுவந்த தொகையைத் தங்கள் கோவிலில் இருந்த திருமண்டபத்தையும் நடுமண்டபத்தையும் பழுது பார்க்கச் செலவிட்டனர். சிறுசாத்த மங்கலம் ஊரார் மூவர் தங்கள் நிலங்களைக் கோவிலுக்கு அடமானமாக வைத்துக் கடன் வாங்கித் தாங்கள் கட்ட வேண்டிய வரிகளைக் கட்டினர்.

கோவிலின் நாற்பத்தொண்ணாயிரவன் திருமாளிகையில் உருத்திர மாகேசுவரர்கள் கூடிக் கோவில் மனைகளையும், நிலங்களையும் விற்க ஏற்பாடு செய்தனர். வேங்கடபதிராயர் காலத்தும் திருப்பைஞ்ஞீலியிலும், சுற்றுப்புற ஊர்களிலும் வரிக் கொடுமையால் பாதிக்கப்பட்டவர் இடம் பெயர்ந்து சென்றனர். அரசர் வரிச் சலுகை அளித்து அவர்களை மீண்டும் குடியேறச் செய்தார்.

திருப்பைஞ்ஞீலிக் கோவிலுக்கு இராசராச வளநாட்டு—வட வழிநாட்டு நெல்வேலி என்னும் ஊரின் ஒரு பகுதி நிலம் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கொடுக்கப்பட்டது என்று கல்வெட்டுக் கூறுகின்றது. இந்த நெல்வேலி என்னும் ஊர் வரலாற்றுப் புகழ் பெற்றது. முதல் விக்ரமாதித்த சாளுக்கியன் முதலாம் பரமேசுவர வர்மனை (பல்லவனை) வென்று உறையூர் வரை வந்து தங்கி இருந்தான்; எதிர்ப்பின்றிப் பல்லவ நாட்டினுள் நுழைந்து அஞ்சாமல் பாண்டிய நாட்டைத் தாக்கினான். அப்பொழுது மங்கையர்க்கரசியின் கணவனான பாண்டியன் நெடுமாறன் பெரும் படையுடன் சாளுக்கியனை எதிர்த்தான். போர் கடுமையாக நடைபெற்றது. இறுதியில் இந்த நெல்வேலி என்னும் இடத்தில் நடந்த கொடிய போரில் சாளுக்கியன் முற்றிலும் தோல்வியுற்றான்; பின்பு நடந்த பெருவளநல்லூர்ப் போரில் முதலாம் பரமேசுவர வர்மன் சாளுக்கியனை முற்றிலும் முறியடித்தான். இந்த நெல்வேலிப் போரையே பின்வந்த சுந்தரர் நெடுமாறனைப் பாராட்டும் பொழுது,

'நிறைக்கொண்ட சிந்தையால்
நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன்
அடியார்க்கும் அடியேன்'

என்று பாடுவாராயினர்.

பூந்துறைநாட்டு மங்கலம் என்னும் ஊரைச்சேர்ந்த கருங்கோயன் சேரசிங்க தேவன் என்பவன் ஒரு நிலத்தை வாங்கி இறைவன் பெயரால் கோவிலுக்குத் தானமாக வழங்கினான். இங்ஙனம் குறிப்பிட்ட ஒரு கடவுளின் பெயரால் நிலம் வழங்குதல் 'திருநாமத்துக் காணி' எனப்பட்டது.

'சுந்தர பாண்டிய தேவரின் மண்டல முதலியான 'மழவராயன்' என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. திருப்பைஞ்ஞீலி, அதனை அடுத்துள்ள திருப்பாச்சில், சிறிது சேய்மையிலுள்ள திருமழபாடி முதலிய ஊர்களிலுள்ள நிலங்கள் மழநாடு, மழவர்நாடு என்றும் வழங்கப்பட்டது. அந்நாட்டுச் சிற்றரசர் மழவராயர் எனப்பட்டனர். மழவர் சிறந்த போர் வீரர்; அஞ்சாநெஞ்சினர். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் ஞானசம்பந்தர் மழவர் தலைவனது மகளைப் பிடித்திருந்த முயலகன் என்ற நோயைத் தீர்த்தார் என்பது பெரிய புராணம் கூறும் செய்தியாகும். அம்மழவர் மரபினர் பிற்காலச் சோழர் காலத்தில் அரசாங்க உயர் அலுவலராக விளங்கினர் என்பது மேலே குறிக்கப்பட்ட கல்வெட்டுக்களால் தெரிகின்றது.

### மக்கட் பெயர்கள்

காலாதிச் சங்கரன், அழகன், சோழக்கோனார், அழகிய பெருமாள், இருங்கோயன், சேரசிங்க தேவன், அமுதன் காளமேகம், உய்யக்கொண்டான் சோழப் பிள்ளை, அபிஷேகச் சொக்கனார், சம்பந்தாண்டார், புகழன் திருத்தால மணவாளன் என்பன ஆண்பாற் பெயர்கள், நம்பாண்டாள், பெரிய நாச்சி என்பன பெண்பாற் பெயர்கள்.



வீட்டுக்காரி:—எங்களுக்குக் கல்யாணமான புதிதில் நான் தினமும் ஒரு பாட்டு பாடித்தான் என் கணவரை எழுப்புவது வழக்கம்.

சிநேகிதி:—இப்போது எப்படி?

வீட்டுக்காரி:—மூன்று மாதம் கழித்து அவரே ஒரு அலாரம் கடிகாரம் வாங்கி வந்துவிட்டார்.

# இரண்டு பெண்கள்

க.நா.சுப்ரமண்யம்

## 15. கிழவரின் வற்புறுத்தல்

போலீஸ் அமளி நடந்து எல்லோரா விடுதி இரண்டொரு நாட்களுக்குள்ளாகவே தன்னுடைய பழைய அமைதியையும் போக்கையும் பெற்று விட்டது. யார் கள்ள நோட்டு அடித்தால் என்ன? யார் அகப்பட்டுக்கொண்டால் என்ன? யார் அகப்பட்டுக் கொள்ளா விட்டால் என்ன? விடுதி வாழ்க்கை வழக்கம் போலவே அதன் வேகத்தில் யாரையும் தொட்டுத் தொந்தரவு செய்யாமல் போய்க்கொண்டிருந்தது!

மானேஜர்தான் சில நாட்களுக்குப் பிறகும் அந்தப் போலீசார் விஷயம் பற்றிப் பேசினார். நாலைந்து நாட்களுக்குள்ளாகவே தாங்கள் சம்பந்தப்படாத அந்த விஷயத்தை எல்லோரா விடுதிவாழ் மக்கள் தங்கள் நினைவிலிருந்து நழுவவிட்டு விட்டார்கள். மானேஜர் நழுவ விடு முன்— எல்லோரா ஆரம்பித்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆவதற்கு முன் நடந்த ஒரு சம்பவத்தை நினைவுபடுத்திக்கொண்டு சொன்னார்: 'விடுதி ஆரம்பித்து மூன்று வருஷம்தான் இருக்கும். ஒரு சமயம் மிகவும் துயரமான ஒரு விஷயம் நடந்து விட்டது. அப்புறம் போலீஸ் அது இது என்று அமர்க்களப்பட்டது. ஆனால்...

'என்ன விஷயம் அது?' என்று விசாரித்தார் ஜோசியர். அவருடன் காபி சாப்பிடக் கிளம்பியிருந்த குஞ்சிதபாதத்துக்கு அதுபற்றி எதுவும் கேட்கப் பிரியப்படாவிட்டாலும் தப்பித்துக் கொண்டு போவது சிரமமாக இருந்தது.

மானேஜர் ஒரு சிட்டிகைப் பொடியை எடுத்துச்சாவகாசமாக உறிஞ்சி விட்டுக் கதா காலட்சேபம் செய்பவர் பாணியில் தொண்டையைக் கனைத்துக் கொண்டு சொல்லலுற்றார்: 'அப்போது நமது விடுதியிலே பின் பக்கத்து அறைகளில் அவ்வளவாக வசதிகள் அமைக்கப்பெறவில்லை. ரூமுக்கு ஒரு ரூபாய் தான் வாடகை. இப்போ மூன்று நாலு வாங்குகிற ரூமுக்குத் தான். ஒரு நாள் இரவு தனியாக வந்த ஒருவன் மிகவும் அமைதியாக வந்து ஒரு ரூம் எடுத்துக் கொண்டான். இரண்டு நாள் வாடி

கையை அட்வான்சாகத் தந்து விட்டான்.'

'உம்' என்றார் ஜோசியர், குழந்தைகள் கதை கேட்கும் சுவாரசியத்தைப்போல முகத்தை வைத்துக்கொண்டு.

'மறு நாள் காலையில் பத்து மணியாகியும் அவன் வெளியே வரவில்லை. பையன்கள் என்னிடம் வந்து சொன்னதும் நான்தான் கதவைத் தட்டினேன். பதிலில்லை. மேல் ஜன்னல் வழியாக உள்ளே பார்க்கச் சொன்னேன். பார்த்த நாயர்பையன் அலறி அடித்துக்கொண்டு கீழே விழுந்ததிலிருந்தே விஷயம் வெளியாகி விட்டது. முதல் நாள் வந்து இரண்டு நாள் தங்குவதாக அட்வான்ஸ் தந்த ஆசாமி உத்தரத்திலிருந்து ஒரு அங்கவஸ்திரத்தில் விழி பிதுங்கத் தொங்கிக் கொண்டிருந்தான்....'

'அப்புறம்...'

'அப்புறம் என்ன? போலீஸ் வந்தது. ஜபர்தஸ்து அமர்க்களம் எல்லாம்தான்... ஆசாமி வீட்டிலே பெண்டாட்டியோடு சண்டை போட்டுக்கொண்டு வந்து எல்லோரா விடுதியிலே தூக்குப் போட்டுக்கொண்டு விட்டான்... ஒரு வாரம் அமர்க்களப்பட்டது. நாலாயிரம் ரூபாய் விளம்பரத்துக்குச் செலவழித்திருந்தால்கூட அவ்வளவு பிரமாதமாகப் பெயர் பத்திரிகைகளில் அடிபட்டிராது' என்றார் மானேஜர்!

'விளம்பரம்தான் என்றாலும் தவறான விளம்பரம் அது' என்றான் குஞ்சிதபாம்.

'பெயர் பிரசித்தமாகி விட்டது. நாளா வட்டத்தில் எதனால் பிரசித்தமாகியது என்பது ஜனங்களுக்கு மறந்து விட்டது. பொது ஜனங்களுக்கு எப்பவுமே நினைவு சக்தி மிகவும் குறைவுதான்' என்றார் மானேஜர்.

'வாருமையா ஜோசியரே! இன்னும் கால் மணி கழித்துப் போனால் நம் ஹோட்டலில் காபி நன்றாக இராது' என்று ஜோசியரை அழைத்துக்கொண்டு கிளம்பினான் குஞ்சிதபாதம். அவனுக்கு இது ஒரு கெட்ட பழக்கம். எந்த மூதாதையரின் குடிப் பழக்கத்திலிருந்து வந்த தன்மையோ அது! வடிவேலு உடன் வராவிட்டால் அவன் காபி சாப்பிடக் கிளம்ப மாட்டான். ஏழுமலை இருந்தபோது அடிக்கடி அவனுடன் ஏழுமலை வருவான். கிழவர் வந்த பிறகு சில சமயம் கிழவர் அவனுடன் வருவார். அவர் வந்தால் காபிக்குச் சில்லரை தர அவனை அனுமதிக்க மாட்டார். வேறு ஒருவரும் அகப்படா விட்டால் ஜோசியருடன் போவான். இன்று, இப்போது அடிக்கடி நேர்ந்ததுபோல, ஜோசியர்தான் அவனுடன் வரவேண்டியதாக இருந்தது.

ஹோட்டலில் இரண்டு கப் சூடான காபியை வைத்துக் கொண்டு உட்கார்ந்த பின்தான் அது விஷயமே குஞ்சிதபாதத்தின் மனத்தில் உதித்து: 'இந்தக் கள்ள நூறு ரூபாய் நோட்டுக்கள் விஷயமாகப் பத்திரிகைகளில் ஒரு செய்தியும் வரவேயில்லையே!' என்றான் அவன் காபியை உறிஞ்சிக் கொண்டே.

அதுபற்றி ஏற்கெனவே சிந்தித்து வைத்திருந்தவர்போல் 'எப்படி வரும்?' என்றார் ஜோசியர்.

நிமிர்ந்து பார்த்த ஒன்றுமறியாத குஞ்சிதபாதத்துக்குத் தன்னுடைய அறிவின் உச்சியிலிருந்து 'ஐயோ பாவம்! ஒன்றும் அறியாதவன்' என்கிற குரலில் உபதேசம் செய்தார் ஜோசியர்! 'ஏழுமலைச் சின்ன மீன். பெரிய மீன்களைப் பிடிக்கப் போலீஸ் இலாகா வலை வீசியிருக்கிறது என்பது நிச்சயம். ஏழுமலை விஷயமாக நம்மையும் நமது பெயர்களையும் போலீசார் இடைவிடாமல் கண்காணித்து வருகிறார்கள் என்பதும் நிச்சயம்...'

'எப்படி தெரியும் உங்களுக்கு?'

'நேரடியாகப் பார்த்துத் தெரிந்து கொண்ட விஷயமல்ல இது. ஊகித்து, போலீஸ் முறைகளை அறிந்தவன் என்பதனால் தெரிந்து கொண்ட விஷயம். கள்ள நோட்டுக்கள் எங்கேயோ, யாராலோ அச்சடிக்கப்பட்டு ஏழுமலைப் போன்றவர்கள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. ஏழுமலைப் போன்ற விநியோகஸ்தர்கள் பலர் இருப்பார்கள். ஏழுமலையைப் பற்றிப் பிரஸ்தாபித்துப் பிரசாரம் பண்ணி உடனடியாக அமர்க்களப்படுத்தி விட்டால், பெரிய மீன்கள் எல்லாம் உஷாராகி விடும். விரித்த வலையிலிருந்து தப்பிவிடும். ஏழுமலை தப்பித்துக்கொண்டாலும் பெரிய மீன்கள், கள்ள நோட்டுத் தலைவர்கள் சிக்க வேண்டும் என்றுதான் போலீஸ் இலாகா சாமர்த்தியமாக வேலை செய்கிறது.'

'ஏது! ஏது! போலீஸ் வழிகளைப் பிரமாதமாக அறிந்து வைந்திருக்கிறீர்களே!'

'எனக்கு ஜோசியம் மட்டும்தான் வரும் என்பதில்லை' என்று தற்பெருமையாகக் கூறிக்கொண்டார் ஜோசியர்.

'கூட்டுறவும் வரும்போல இருக்கிறது' என்று போலீஸ் அதிகாரி கோவிந்தன் சொன்னதை



'இந்தாப்பா! கொலுவெல்லாம் கழிச்சு வா, இப்ப எல்லாத் துணிகளும் கொலுப்படிகள் மேலே போட்டு வச்சிருக்கு. எடுக்க முடியாது."

"!...!"

நினைத்துப் பார்த்தவனைச் சொன்னான் குஞ்சிதபாதம்.

'கூட்டுறவு இலாகாவிலே நான் வேலை பார்த்தபோது...' என்று தொடங்கிய ஜோசியரைக் குறுக்கிட்டுக் குஞ்சிதபாதம் 'நீங்கள் கல்வி இலாகாவில் கொஞ்ச நாள் இருந்ததாகச் சொல்லவில்லை?...' என்று கேட்டான்.

'இரண்டு இலாகாவிலுமே இருந்தேன்' என்று ஒப்புக்கொண்டார் ஜோசியர். 'உலக அனுபவம் இருந்தால்தான் ஜோசியனாக ஒருவன் வெற்றி பெற முடியும்.'

'அந்தக் காலம் எனக்குப் பூஜ்யம்' என்றான் குஞ்சிதபாதம்.

'நம்மோடு ஒரு வருஷம் இருந்தால்...'

'உமது பேச்சு வந்துவிடும். செயல்களுக்கெல்லாம் போவது



ங்கே?' என்று குஞ்சிதபாதம் சொன்னதைத் தனக்குப் பெருமையான விஷயமாக எடுத்துக் கொள்ள உத்தேசித்த ஜோசியர் பதில் சொல்லு முன் பக்கத்துத் தெரு ஷாப்புக் கடை செட்டியார் அவரைத் தேடி வந்து விட்டார்.

'என்ன ஐயா ஜோசியரே! க்ஷவர பிளேடு செண்டு, அத்தர், ஊதுவத்தி, சோப்பு, பவுடர் என்று வாங்கி மாதம் ஆறுகப் போவுது. இன்னும் காசு தராமே அந்தப் பக்கம் வராமே இருக்கிறீர்களே? கோமுட்டிச் செட்டியார் காசு கேட்டுவிடப் போரு சென்னு தலைக் காட்டாமே வேறு வழியாகப் போகிறீங்கபோலே இருக்கு...இன்னிக்கி...'



'செட்டியாரே! கோபம் வேண்டாம். அடுத்த வாரம் பணம் கொணர்ந்து தந்து விடறேன்' என்ருர் ஜோசியர் கெஞ்சுதலாகத் தப்ப வேறு வழியில்லை என்று கண்ட பிறகு!

'பணத்துக்கு இப்படி மாதக் கணக்கா நாலு பேரு சால்சாப்பு சொல்லிக்கிட்டே வந்தால் நான் நாலு மாசத்திலே கடையை மூட வேண்டியதுதான்.'

'எத்தனை ஐயா பணம் தர வேண்டும்?' என்று விசாரித்த குஞ்சிதபாதத்துக்கு 'எழுபத்தி நாலு ரூபாய் பதிநாலு அணு பாக்கிங்க. மொத்தம் வாங்கினது எழுபத்தி ஒன்பது பதிஞலு. அதிலே அஞ்சு ரூபா வல்லிசாகக் கொடுத்திட்டாரு' என்று பதில் அளித்தார் செட்டியார்.

குஞ்சிதபாதத்திடம் அச்சமயம் எழுபது சில்லரைப் பணம் இல்லை. இருந்திருந்தால் ஐயோ பாவம் என்று தந்தும் இருப்பான். செட்டியார் பேசிக் கொண்டே போக, ஜோசியர் பதில் சொல்ல மாட்டாமல் திரு திரு வென்று விழிக்க

ஹோட்டலில் சற்று விரஸமாகவே பேச்சு வளர்ந்துகொண்டிருந்த சமயத்தில் சேலத்துக் கிழவர் வந்து சேர்ந்தார். வந்தவர் விஷயத்தைப் புரிந்துகொண்டு, ஜோசியர் குஞ்சிதபாதத்துக்கு நண்பர் என்கிற அளவில் உதவுவது என்று தீர்மானித்தவராக ஒரு நூறு ரூபா நோட்டைத் தன் மடியிலிருந்து எடுத்துச் செட்டியார் கையில் வைத்தார். 'பாக்கியை ஜோசியரிடம் தந்துவிடும் உடனே' என்ருர். செட்டியார் அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. சில்லரை பாக்கியை ஜோசியரிடம் தந்துவிட்டு உடனே போய்விட்டார். அவரைப் போலவே ஜோசியரும் மௌனம் சாதித்ததுதான் குஞ்சிதபாதத்துக்கும் பிடிக்கவில்லை. 'கிழவருக்கு நன்றியாவது சொல்லும் ஐயா! இக்கட்டான நிலைமையில் காப்பாற்றி விட்டாரே!' என்ருன்.




தகப்பஞர் குயில்:—பால்ய விவாகம் பண்ணக்கூடாதுன்னு நான் ஆயிரம் தடவை முட்டிண்டேனே! கேட்டியா? குயிலாக்கும்னு நினேச்சு அந்தப் பெண்ணே உன் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணி வெச்சயே! இப்ப அந்தப் பெண் "காக்காயா" நிக்கறதே! என்னு பண்ணித் தொலைக்கிறது?

தான் பெருமையாகப் பேசிக்கொண்டிருந்ததும் அதையொட்டி நடந்தச் சம்பவமும் ஜோசியரை என்னவோ செய்தன. ஏதோ ஒப்புக்குக் கிழவருக்கு நன்றி சொன்னுர்: 'ஒரு வாரத்தில் பணத்தைத் திருப்பி விடுகிறேன்' என்ருர். 'செட்டியார் அயோக்கியப் பயல். ஒன்றுக்கு இரண்டாக விலே வைத்து விற்றுவிட்டு...' என்று முனகினுர். 'நான் வரட்டுமா! அவசரமா மவுண்ட்ரோடில் வேலேயிருக்கிறது. வரேன் குஞ்சிதபாதம்' என்று விடை பெற்றுக் கொண்டு திரும்பிப் பார்க்காமலே நடையைக் கட்டினுர்.

'பாவம்!' என்ருர் கிழவர்.

'செண்டு, சோப்பு, க்ஷவரக் கத்தி எல்லாமே விலே அதிகம் தான். செட்டியார் கடனுக்குத் தருகிறபோது வசூலாகாமல் போனுலும் போய்விடுமே என்று ஒண்ணுக்கு நான்காக விலே போட்டிருப்பார். மொத்தத்தில் எது எப்படியானுலும் செட்டியாருக்குத்தான் லாபம்.'

'லாப நஷ்டக் கணக்கு இந்த அளவில் முடிந்து விட்டது என்று பார்க்க நீயும் தானும் யார் சொல்லு?' என்ருர் கிழவர். 'இப்போ ஒரு முக்கியமான விஷயமாகத்தான் உன்னேத் தேடிக்கிட்டு வந்தேன்' என்ருர்.

அவர் குரலிலும் முகத்திலும் பேச்சிலும் கூட இருந்த கலவரத்தையும் குழப்பத்தையும் அப்போதுதான் கவனித்தான் குஞ்சிதபாதம். 'என்ன?' என்ருன் பதட்டமாக.

'உன்னேத் தேடிக்கிட்டு ஒரு ஆள் வந்தது...'

'என்னேத் தேடிக்கொண்டா?'



'ஆமாம்; என் மூத்தப் பெண்ணின் புருஷன் வீட்டிலிருந்து அவசரமாக ரகசியக் கடிதம் கொண்டு வந்திருக்கிருன் ஒருவன்...'

'எங்கே அவன்?'

'அவனேப் போகச் சொல்லி விட்டு நான் வாங்கியாந்தேன் கடுதாசியை...'

'எங்கே?' என்று பதட்டத்துடனேயே கையைத் தட்டினுன் குஞ்சிதபாதம். அது ஏழுமலே விஷயமாக இருக்கும். ஏழுமலேயிடமிருந்தே ஏதாவது தகவல் வந்தாலும் வந்திருக்கலாம் என்று எண்ணினுன் அவன். கிழவர் தந்தக் கடிதத்தை—அவர் அதைப் பிரித்துப் பார்க்கவில்லே— நடுங்கும் கரங்களுடன்தான் பிரித்துப் பார்த்தான் குஞ்சிதபாதம். நல்லவேளே; ஏழுமலேயிடமிருந்தும் வரவில்லே கடிதம்— அவனேப் பற்றியும் இல்லே. அட்வகேட் வேங்கடாசலபதியிடமிருந்து வந்திருந்தது. ஒரு முக்கிய விஷயமாக அவனேப் பார்க்க வேண்டும் என்று அவர் விரும்புவதாக அக்கடிதம் தெரிவித்தது. அவசரம் என்றும் வற்புறுத்தியது.

பேச்சே பேசாமல் கடிதத்தைக் கிழவரிடம் தந்தான் குஞ்சிதபாதம். படித்துப் பார்த்தவர் 'பெண் விஷயம் என்ன என்று தெரிந்து கொண்டு வா' என்ருர்.

'என்னேத் தன் வீட்டுக்கு வராதே என்று துரத்தியவரைத் தேடிக்கொண்டு நான் போவானேன்?'

'அப்படியல்ல குஞ்சிதம்' என்று குழந்தைக்குச் சொல்வதுபோலச் சொன்னுர் கிழவர்: 'யார் நமக்குத் தப்புச் செய்தாலும் அதை மனத்தில் வைக்கவே கூடாது. மன்னித்து மறந்து விட வேண்டும். அப்போதான் நமது சுமை குறையும். நமக்கு இழைக்கப்படுகிற தவறுகள் அநீதிகளே எல்லாம் நாம் சுமப்பது என்று இருந்துவிட்டால், சுமை தாளாமலேயே தீர்ந்து விடுவோம்.'



கிழவரை நிமிர்ந்து பார்த்தான் குஞ்சிதபாதம். கிழவர் தனக்கிழைக்கப்பட்ட எத்தனேயோ தீங்குகளேயும் மறந்து மன்னித்து விட்டுத்தான் தன் பெண்களுக்கு மேலும் மேலும் செய்யத் தயாராக இருந்தார். அவர் முன் தான் எம்மாத்திரம் என்று எண்ணினுன் குஞ்சிதபாதம். அவரே அந்த அட்வகேட் தனக்கிழைத்தத் தீங்குகளே மறந்து விட்ட மாதிரித் தோன்றியது. தான் அதைப் போற்றிப் பாராட்டுவானேன் என்று எண்ணினுன். 'போய் விஷயம் என்ன என்று கேட்டு வரேன்' என்ருன்.

'எனக்கு ஒரு சந்தேகம்' என்றார் கிழவர். பக்கத்தில் யாரும் இருந்து ஒட்டுக் கேட்கவில்லையே என்று கவனித்துக்கொண்டார். சுற்று முற்றும் பார்த்தார்: 'இது ஏழுமலை விஷயம் அல்ல என்று நீ தீர்மானித்து விட்டதாகத் தெரிகிறது. இதுவும் ஏழுமலை விஷயமாகவே இருக்கலாம்...'

'நான்... ஏழுமலை... நீங்கள் சொல்வது புரியவில்லையே!' என்று தடுமாறினான் குஞ்சிதபாதம்.

'நீ பரபரப்புடன் கடிதத்தை இது ஏழுமலை விஷயமாக இருக்குமே என்று பிரித்தாய்.'

'அது எப்படித் தெரிந்தது உங்களுக்கு...'

'எனக்கா? உனக்கு வேறு எதைப் பற்றியும் இப்பச் சத்தியாகக் கவலையில்லை என்று எனக்குத் தெரியாதா?'

குஞ்சிதபாதம் பதில் சொல்லவில்லை. கிழவரே தொடர்ந்து சொன்னார்: 'போலீஸ் சோதனையையோ கள்ள நோட்டுகள்பற்றி அவர்களுடைய கண்டுபிடிப்புகளையோ பத்திரிகைகளில்கூட வெளிவராமல் அடக்கி விட்டது போலீஸ். அது விஷயம் பராபரியாக அட்வகேட்காதிலும் விழுந்திருக்கும். அதுபற்றி விசாரித்து நேரடியாகத் தெரிந்து கொள்ளத்தான் உன்னைக் கூப்பிட்டனுப்பியிருப்பார் அட்வகேட்.'

'அவருக்கும் எல்லோரா விடுதியில்கண்டுப்பிடிக்கப்பட்டக்கள்ள நோட்டுக்களுக்கும் என்ன சம்பந்தம்?' என்றான் குஞ்சிதபாதம்.

'ஏதாவது இருந்ததானால்... என் பெண்தானே கஷ்டப்படுவாள்?'

கிழவரையே உற்றுப் பார்த்தான் குஞ்சிதபாதம். அந்தப் பெரிய விஷயத்திலும்கூட அவர் தன் பெண்ணின் நினைவாகவே இருந்தார் என்பதைக் காண அவனுக்கு ஆச்சரியமாகவே இருந்தது. அதுவும் எப்படிப்பட்ட பெண்? ஒரு நாள், ஒரு வேளை கூட அவரை வைத்து ஆதரித்து உபசரித்து உணவு தராத பெண். கிட்டக்கூட அண்ட விடாத பெண். தான் பெற்றெடுத்த குழந்தைக் குட்டிகளைத் தாத்தாவை நெருங்க விடாத பெண். கீழ்ச்சாதி என்று தகப்பனைப் புகுந்த வீட்டுக்காரர்கள் இகழக் கேட்டுக்கொண்டிருந்த—நாள் பூராவும் கேட்டுக்கொண்டு செயல் ஒன்றிலும் ஈடுபடாதிருந்த—பெண்.

ஆனால் உயர்ந்த ஜாதி என்றும் கெடுபிடியாகவும் சர்வாதிகாரமாகவும் இருந்த அந்த அட்வகேட் வேங்கடாசலம் கள்ள நோட்டு விஷயத்தில் சம்பந்தப்பட்டிருப்பதா என்ன? எந்தப் பெரிய இடத்தில் என்ன இருக்குமோ— யார் சொல்ல இயலும்? கிழவர் சொன்னது வெறும் யூகமே தவிர வேறு அல்ல. சந்தர்ப்பவாதத்தால் ஏற்பட்டதொரு யுக்தி. அவ்வளவுதான்.

'போய்ப் பார்த்து விட்டு வா என்று சொல்லுகிறீர்களா?' என்று கேட்டான் குஞ்சிதபாதம். அவர் விஷயம் அது. அவர் சொல்படியே கேட்பது என்று தீர்மானம் அவனுக்கு.

'விஷயத்தைத் தெரிந்து கொண்டு வா' என்றார் கிழவர்.

'மாலையில் போகிறேன்.'

'ஏன்; இப்பவே போய் வாயேன். இன்று சனிக்கிழமை





தானே? கல்லூரியும் கிடையாதே. இன்னொரு கப் காபி சாப்பிடு. இப்படியே கடிதம் வந்த சூட்டோடு போய் வா. விஷயத்தை அறிந்து கொண்டு விட்டால் நிம்மதியாக இருக்கும்' என்றார் கிழவர்.

'அட்வகேட் இதிலெல்லாம் சம்பந்தப்பட்டிருந்தாரானால் நம்மிடம் மனம் திறந்து பேசி விடுவாரா? ஏதாவது விஷயத்தைச் சொல்லி விடுவாரா!'

'அவர் சொல்வதிலிருந்து சொல்லாததை அறிந்துகொள்ள வேண்டியதுதான்.'

'அதற்கு எனக்குச் சாமர்த்தியம் அவ்வளவாகப் போதாது' என்றான் குஞ்சிதபாதம்.

'உனக்கா?' என்றார் கிழவர் அதில் நம்பிக்கையற்றவர்போல. 'நீ போய் வா. விஷயம் தானாகவே வெளியாகிவிடும்.'

கிழவரின் வற்புறுத்தலின் பேரில் சற்றுத் தயக்கத்துடனேதான் குஞ்சிதபாதம் அட்வகேட் வேங்கடாசலத்தின் பங்களாவுக்குக் கிளம்பினான். அவர் அதிலெல்லாம் சம்பந்தப்பட்டிருப்பார் என்று எண்ண வேண்டிய அவசியம் இல்லை. அநேகமாக சம்பந்தப்பட்டிருக்க மாட்டார் என்பது நிச்சயம். ஆனால்... எதற்காக அவர் அவனைக் கூப்பிட்டனுப்பியிருக்க வேண்டும்? என்ன விஷயம் இருந்தது அவனிடம் பேச அவருக்கு?

பேபி டாக்சி பிடித்துக்கொண்டு அவன் அட்வகேட் வேங்கடாசலத்தின் வீட்டுக்குப் போகும் வழியெல்லாம், ஒருவிதமான தீர்மானத்துக்கும் வரமாட்டாமல் தவித்துக்கொண்டுதான் போனான். என்ன விஷயம் பற்றி அவசரமாக, ரகசியமாக அவனுடன் பேச வேண்டும் என்று அவர்— அவனைத் தன் வீட்டுக்கு வராதே என்று சில தினங்களுக்கு முன் விரட்டியடித்த அவர்—கூப்பிட்டனுப்பியிருக்கிறார்?

அட்வகேட் வேங்கடாசலம் அவர் வீட்டிலேதான் முன்னறையில் இருந்தார். அவன் தன் பெயரைச் சொல்லி அனுப்பியதும் உடனேயே உள்ளே வரச் சொன்னார். எழுந்து கிழத்தனத்துடன் நடந்து இரண்டடி முன் வந்து 'வா அப்பா குஞ்சிதபாதம்; வா. உன்னை அன்று வராதே என்று விரட்டினேன். இன்று...' என்றார்.

அதற்குள் அவருடைய வீட்டிற்குள்ளிருந்து பதினெட்டு வயதிருக்கக்கூடிய ஒரு அழகிய பெண் வந்தாள். 'அம்மா மரகதம். குஞ்சிதபாதத்துக்குக் காபி கொண்டு வரச் சொல். இது என் பேத்தி— மரகதம். காலேஜில் பீ. ஏ. ஆனர்ஸ் கடைசி வருஷம் படிக்கிறாள்' என்றார்.

கை கூப்பி 'நமஸ்தே' என்றான் குஞ்சிதபாதம்.

பெண்ணும் 'நமஸ்தே' என்றாள்.

காபி வருவதற்குள் மேலே என்ன என்று சிந்தித்தான் குஞ்சிதபாதம். தான் உட்கார்ந்துகொண்டு 'உட்கார்' என்று அட்வகேட் வேறு ஒரு ஆசனத்தைக் காட்டினார்.

(தொடரும்)

# உள்ளும் புறமும்



**ராஜம் நாராயணன்**

எனக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டது. இன்பப் பூரிப்பாலும், தோழிகளின் கேலிகளாலும், இனம் தெரியாத ஒருவித பரபரப்பாலும் திக்குமுக்காடினேன் நான். அம்மாவின் நிறைவையும் சந்தோஷத்தையும் சொல்லவே முடியாது. மக்களின் நிறைவிலேயும் களிப்பிலேயும் தானே தாய்மார்களின் சந்தோஷமும் இன்பமும் இருக்கிறது.

திவாகர்! எவ்வளவு அழகான பெயர். பெயரைப்போலவே உருவத்திலும் நிகரற்றவர் எனக்குக் கணவராக வரப் போகிறவர். படிப்பிலும் பணத்திலும்கூட அவர் உயர்ந்தவர்தான்.

மாகாணத்திலேயே எம். பீ. பீஎஸ்.ஸில் முதல்வராகத் தேறியவர். திரண்ட சொத்திற்குரிய சொந்தக்காரர். விதவைத் தாயாரையும் ஒரு தம்பியையும் தவிர வேறு சொந்தக்காரர்களும் யாரும் இல்லை அவருக்கு.

அன்று பெண் பார்க்க வந்த அவரது அழகு முகம் என் உள்ளத்தில் அழுத்தமாகப் பதிந்திருந்தது. நல்ல சிவப்பல்லாவிட்டாலும் கண்ணுக்கு இனிய தோற்றம். ஆறடி உயரம். அதற்கேற்ற பருமன். ஆண்மையின் அழகையும், கம்பீரத்தையும் எடுத்துக்காட்டும் அகன்ற மார்பு. செழிப்பான தோள்கள். வட்டவடிவமான பரந்த முகம். அதில் அறிவையும் ஆற்றலையும் எடுத்துக்காட்டும் விழிகள். அழகுக்கு அழகு செய்வதுபோல் தங்க பிரேம் போட்ட மெல்லிய மூக்குக் கண்ணாடி. சற்று குறுகிய நெற்றி. சிற்பி செதுக்கியதைப்போல் நீண்ட கூரிய அழகிய மூக்கு. கருகரு என்று வளர்ந்த அடர்த்தியான கிராப்பு வலதுபுறம் வகிடு எடுத்து அலை அலையாக வாரி விடப்பட்டிருந்தது. அந்தச் சாக்லெட் கலர் டுவீட் பாண்டும் இளம் நீல நிற நைலான் ஸ்லாக்

ளும் அவருக்கே என்று உண்டானதைப்போல் அவ்வளவு அழகாகவும் கச்சிதமாகவும் அமைந்திருந்தது. அவருடன் வந்திருந்த அவர் தாயார் சற்றுக் கர்வக்காரி என்று முதல் பார்வையிலேயே தெரிந்துவிட்டது.

கணவனை இழந்தவளானாலும், வைரத் தோடும், மூன்று வடம் சங்கிலியும், முழங்கையளவு தங்க வளைகளும் அணிந்திருந்தாள். கெட்டி ஜரிகைப்போட்டபச்சைக் கலர் காஞ்சீபுரம் சேலையும் வெள்ளை ரவிக்கையும் அணிந்திருந்தாள். தேவைக்குமீறி ஒரு வார்த்தைக்கூடப் பேசவில்லை. தனயனின் படிப்பிலும் தன் செல்வத்திலும் சொல்ல முடியாத பெருமை அவளுக்கு. அது நியாயம்தானே. அள்ளி அள்ளிச் செலவு செய்தாலும் குறையாத செல்வம். அழகும் அறிவும் மிக்க இரு செல்வர்கள். தாயை நீங்கி நில் என்று சொல்லாத உத்தம புத்திரர்கள். தாய்ச் சொல் மிக்கதோர் மந்திரமில்லையென்று நினைப்பவர்கள். மூத்தவர் டாக்டர். இளையவன் இஞ்சினீயர். அந்தத் தாய் பெருமையும், கர்வமும் அடைவதில் வியப்போ விந்தையோ ஒன்றும் இல்லையே.

பெண் பார்க்கும் படலம் முடிந்து அவர்கள் போனவுடனேயே அம்மா அங்கலாய்க்க ஆரம்பித்துவிட்டாள். 'அந்த அம்மாள் மிகுந்த அழுத்தக்காரியாக இருக்கிறாளே. வாய் திறந்தால் முத்துக்கொழித்துவிடுமா என்ன? கலகலவென்று நாலு வார்த்தை பேசமாட்டாளோ ஒரு பொம்மனாட்டி. நாளைக்குக் கல்யாணமானால் நம் நிர்மலாவைப் படுத்தாமல் இருக்க வேண்டுமே. கபடு சூது அறியாத வெகுளிப் பெண்ணாச்சே நம் குழந்தை' என்று கவலையுடன் கூறினாள்.

அம்மாவின் சொல்லைக் கேட்டு கலகலவென்று நகைத்தார் அப்பா. 'ஜனகம், நீமிகவும் மோசமாக இருக்கிறாயே. அந்த அம்மாளைப் பார்த்தா நிர்மலாவை அங்குக் கொடுக்கிறோம். பையனைப் பார்த்துத்தானே. பிள்ளை கண்ணுக்கு லட்சணமாக இருக்கிறான். நிறைய பணம் இருக்கிறது. அடக்கமும், பண்பும் நிறைந்தவன். நம் நிர்மலாவை கண்ணின் கருமணிபோல் காப்பாற்றுவான். நீ வீணாக வேண்டாததையெல்லாம் நினைத்துக் கொண்டு தத்துபித்தென்று பேசாதே' என்று அம்மாவை அடக்கினார்.

என் மனம் என்னைப் பார்த்து விட்டுப் போன ஆணழகர் மேலேயே லயித்தது. நாட்கள் ஒன்றன்பின் ஒன்றாக நகர்ந்தன. இன்ப கனவுகளிலேயும், திவாகரனது அழகு உருவத்திலேயும் லயித்தே நான் நாட்களைக் கடத்தி வந்தேன்.

வீடு நிறைய உறவினர்களும் நண்பர்களும் வந்து குழுமிவிட்டார்கள். பழங்களும், விதம்விதமான காய்கறிகளும், மளிகை சாமான்களும், பூவும் மணமுமாக வீடு நிறைந்திருந்தன.

பித்தளை, வெண்கல, வெள்ளி, எவர்சில்வர் பாத்திரங்களைத் தினுசு தினுசாக வாங்கிக் குவித்திருந்தாள் அம்மா. பணக்கார சம்பந்திகள் அல்லவா? அவர்களுக்குத் தகுந்தபடி சீர்செய்நேர்த்தி செய்ய வேண்டாமோ.

விதம் விதமான நகைகள் எனக்காக வாங்கப்பட்டன. நான் இவ்வுலகத்திலேயே இருக்கவில்லை. இத்தனைக்கும் விவாகம் என்றால்



வெறுத்தவள்தான் நான். எஸ். எஸ். எல். ஸி. தேறியவுடனேயே அதாவது என் பதினைந்தாவது வயதிலேயே, பெண்ணை மாப்பிள்ளையுடன் காண வேண்டும் என்று ஒற்றைக் காலால் நின்றாள் அம்மா. அவள் பழைய காலத்து மனுஷி. எட்டு வயதிலேயே, விவரம் அறியாத பருவத்திலேயே திருமணமாகி, பதினெட்டு முழம் புடவையும், மஞ்சள் கயிறும் காலில் மெட்டியுமாக நின்றவள் அவள். தன்னைப்போல் இல்லாவிட்டாலும் பருவம் வந்தவுடனாவது பெண்ணைக் குடும்பஸ்தியாக்க வேண்டும் என்ற ஆசை பெற்றவளுக்கு. ஆனால் நான் அதற்கு இணங்கவில்லை. கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்ற பின்பே திருமணம் செய்துகொள்வேன் என்று பிடிவாதம் பிடித்தேன். என் தந்தையும் என் விருப்பத்தை ஆமோதித்தார். அவருக்கு மகனுக்கு மகனாகவும் மகளுக்கு மகளாகவும் பிறந்தவளல்லவா நான்?

அம்மாவுக்கு எங்கள் தீர்மானம் பிடிக்கவேயில்லை. 'நன்றாயிருக்கு அவளுடன் சேர்ந்துகொண்டு நீங்கள் கூத்தடிப்பது! பெண்களுக்குப் பட்டமும் பதவியும் எதற்கு? அந்தக் காலத்தில் நாங்கள் எல்லாம் படித்தோமா? பட்டம் பெற்றோமா? இப்பொழுது என்ன குறை எங்களுக்கு? வயது வந்த பெண்ணைக் காலா காலத்தில் ஒருவன் கையில் பிடித்துக் கொடுக்காமல் காலேஜில் சேர்ப்பதாம், பட்டம் பெறுவதாம்' என்று பொல பொலவென்று கொட்டினாள். அப்பா ஏதோ சிரித்துக்கொண்டே அவளுக்குச் சமாதானம் கூறிவிட்டார் என்றாலும் ஒரே ஆத்திரம் அம்மாவுக்கு. முணுமுணுப்பும், சிடுசிடுப்பு



"நான் என்னுடைய ஐந்து பெண்களுக்கும் கல்யாணம் செய்ததால்தான் இந்நிலையை எய்தினேன். இதோ பார்த்தாயா? வரதட்சணை தடை மசோதா வந்துவிட்டது! இனி, என்னுடைய ஒன்பது பெண்களுக்கும் திருமணம் செய்ய கிருகஸ்தாஸ்ரமம் செல்கிறேன். நீ வேறு குருவை நாடி நற்கதி பெறுவாய்!"

"குருவே! நவ கன்னிகைகளில் எனக்கும் ஒன்று அளித்துவிடுங்கள்!"

மாகவே வளைய வந்தாள். ஆனால் வீட்டில் ஒருவரும் அவள் கோபத்தைச் சட்டை செய்யவேயில்லை.

விவாகமே செய்துகொள்ளப் போவதில்லை என்றிருந்த நான் திவாகரது அழகிய தோற்றத்தையும், கம்பீர உருவத்தையும், ஆழ்ந்த அறிவையும் கண்டபிறகு முடிவை மாற்றிக்கொண்டேன். என் அம்மாவுக்கு அதில் எவ்வளவு சந்தோஷம் என்று சொல்ல முடியாது. அப்பாவுக்கும் என் விவாகத்தில் மிகுந்த உற்சாகம். பெண்கள் என்றுமே தனித்து வாழ முடியாது. அவர்களுக்கு ஒரு ஆண்துணை தேவை. மலையிலிருந்து ஒழுகும் ஆறு குதூகல

மும் களிப்புமாக தன்னிச்சைப்படி எவ்வளவு தூரம் ஓடினாலும் கடைசியில் அது சமுத்திரத்துடன் கலக்கும்பொழுதுதான் நிறைவு பெறுகிறது. என்னதான் செழிப்பும் பசுமையுமாக வளர்ந்தாலும் தனக்குப் படருவதற்கு ஒரு கொழுக் கொம்பைத்தானே கொடிகள் நாடுகின்றன. அதைப்போல் தக்க பருவமும், வளர்ச்சியும், அறிவும் அடைந்த பிறகு பெண்கள் தனக்கு உகந்தவனுடன் இல்வாழ்க்கை நடத்தினால்தான் பெண்மை நிறைவு பெறும் என்று நினைப்பவர் என் தந்தை.

இன்னும் நான்கு நாட்களே இருந்தன என் கழுத்தில் தாலி ஏறுவதற்கு. நான் என் அறையில் உட்கார்ந்து ஏதோ புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன். பெயருக்குக் கையில் புத்தகம் இருந்ததே தவிர, என் கருத்தும் மனமும் திவாகருடன் நடத்த போகும் இல்வாழ்க்கையில் லயித்திருந்தன. என் தந்தையும் தாயும் ஏதோ சாமான் வாங்கக் கடைத்தெருவுக்குப் போயிருந்தனர். உறவினர் பட்டாளம் ஊர் பார்க்கவும், பீச்சு, சினிமா என்றும் சென்றிருந்தது. வீட்டில் சமையல்காரர்களும், வேலைக்காரியையும் தவிர வேறு யாரும் இல்லை.

ஏதோ இன்பக் கனவில் ஆழ்ந்திருந்த என்னை 'ஸார்! போஸ்ட்' என்ற குரல் இவ்வுலகத்திற்குக் கொண்டு வந்தது. வேலைக்காரி கொண்டுவந்த கடித உறையைப் பார்த்ததும் நான் திடுக்கிட்டேன். ஏனெனில் எனக்குக் கடிதம் போடக்கூடியவர்கள் யாரும் இல்லை. குண்டு குண்டான அழகிய எழுத்தைப் பார்த்ததும் அது ஒரு பெண்ணின் கையெழுத்து என்று தெரிந்துகொண்டுவிட



லாம். எனக்கு யார் இருக்கிறார்கள் கடிதம் எழுத என்று நினைத்தபடி ஆர்வமும் பரபரப்புமாகக் கடிதத்தைப் பிரித்தேன்.

அன்பார்ந்த சகோதரி,

முன்பின் தெரியாத உங்களை சகோதரி என்று அழைப்பதில் தவறொன்றுமில்லையென்று நினைக்கிறேன். நீங்கள் இன்னும் நாலைந்து நாட்களில் மிஸஸ் திவாகரன் ஆகப் போகிறீர்கள் என்ற தகவல் எனக்கு நேற்றுத்தான் தெரிந்தது. நீங்கள் திவாகரனது மனைவியாவதற்குமுன்பே இதை உங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியவளாக இருப்பதால் இக்கடிதம் எழுதுகிறேன்.

சகோதரி, நான் கூறுவது முற்றிலும் உண்மை. உங்களை இன்னும் நான்கு நாட்களில் மணக்கப் போகும் திவாகர், எனது காதலர். நான் இந்தப் பெரிய ஆஸ்பத்திரியில் பணிபுரியும் ஒரு சாதாரண நர்ஸ்.

நானும் மெடிகல் காலேஜ் மாணவரான திவாகரும் இரண்டு வருடத்திற்கு முன்பு சந்தித்தோம். முதலில் மிகவும் சாதாரணமாகப் பழகிய நாங்கள் நாளடைவில் இணைபிரியாத காதலர்களாகிவிட்டோம். கடைசியில் தன் தாயின் சொல்லைத் தட்ட முடியாமல் திவாகர் என்னை மறந்து உங்களைக் கைப்பிடிக்க நிச்சயித்துவிட்டார். சகோதரி, சொல்வதற்கே நாணமாக இருக்கிறது. நான் இப்பொழுது நான்கு மாத கர்ப்பவதி. திவாகர் என்னை வஞ்சித்துவிட்டார். அதற்காக எனக்கு அவர்மேல் அணுவளவாவது கோபம் கிடையாது. திவாகர் நல்லவர்தான். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அவரை அப்படிச் செய்யும்படி ஆக்கிவிட்டது. பணமும், பண்டமும், சீரும் சிறப்புமாக அழகிய பெண் மனைவியாக வர இருக்கும்பொழுது இந்த ஏழையை அவர் மறந்துவிட்டார். போனால் போகிறது. அதற்காக எனக்கு அவர்மேல் வருத்தமோ கோபமோ கிடையாது. இவ்வளவு சீக்கிரம் மனம் மாறும் பச்சோந்திக் குணம் உடைய திவாகரை இனிமேல் நான் மணக்கவும் போவதில்லை. என் வயிற்றில் வளரும் அவருடைய குழந்தை ஒன்றே இனிமேல் எனக்கு ஆறுதலும் இன்பமும் நல்கப் போதுமானது.

சகோதரி நிர்மலா, இவ்வளவும் எதற்காக உங்களுக்குக்கூறினேன் என்றால், தூய்மையும் நிர்மலமுமான நீங்கள் களங்கமும் தன்னலமும்மிக்கத்திவாகருக்கு ஏற்றவளல்ல என்ற நினைப்பால்தான். ஆரம்பத்தில் கூறியபடி நீங்கள் எனக்கு முன்பின் அறியாதவரல்ல. உங்களை எனக்கு முன்பே தெரியும் என் சகோதரி ஷீலா மூலம். பீ. எஸ்ஸி. கடைசி வருடம் படிக்கும்பொழுது திடீரென்று மாரடைப்பால் இறந்துவிட்டாளே ஷீலா. அவள் என் தங்கை. அவள் உங்களைப்பற்றி நிறைய கூறியிருக்கிறாள். அவள் மறைவுக்குப் பிறகு உங்களையே என் சகோதரியாக நினைக்கிறேன். ஆனால் என் வேலையும், சூழ்நிலையும் உங்களை நேரில் பார்க்கச் சந்தர்ப்பம் அளிக்கவில்லை. நேற்று யதேச்சையாக நீங்கள்தான் திவாகரது வருங்கால மனைவி என்று அறிந்ததும் இந்தக் கடிதத்தை எழுதினேன், நீங்கள் என் தங்கை என்ற நினைப்பில்.



மனைவி:—எங்கே இவ்வளவு காசு செலவழித்து போட்ட ஸ்வெட்டர் வீணாகிவிடப் போகிறதே என்று பயந்தேன் கொஞ்சம் இதுமாதிரி சுருட்டி விட்டுக்கொண்டால் அளவு சரியாகத்தான் இருக்கிறது

திவாகரது சுபாவத்தை உங்களுக்குத் தெரியப்படுத்தினேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. இதற்குமேல் உங்களுக்கு விருப்பமானால் தாராளமாக நீங்கள் அவரை மணக்கலாம். நான் இவ்வளவுக்குமேல் அவரிடம் வரவும் போவதில்லை. அவரைக் காதலனாக நினைக்கவும் போவதில்லை. உங்கள் விருப்பம்போல் நீங்கள் செய்துகொள்ளலாம்.

இப்படிக்கு
**லீலா.**

இந்தக் கடிதத்தைப் படித்ததும் எனக்கு எப்படி இருந்திருக்கும்? லீலாவை நான் பார்த்ததே கிடையாது. ஆனால் அவள் சகோதரி ஷீலாவை நான் நன்கு அறிவேன். தனக்குத் தன் சகோதரிதான் படிக்க உதவி புரிகிறாள் என்றும் அவள் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் பணி புரிவதாக

வும் தங்களுக்குத் தாய் தந்தை ஒருவரும் கிடையாது என்றும் தங்கள் சொந்த ஊர் கள்ளிக் கோட்டை என்றும் ஷைலா என்னிடம் பல முறை கூறியிருக்கிறாள். ஆனால் என்ன காரணமோ ஒரு முறைகூட ஷைலா தன் சகோதரியை எனக்கு அறிமுகப் படுத்தவில்லை. பி. எஸ்ஸி. கடைசி வருடம் படிக்கும்பொழுது திடீரென்று இறந்துவிட்டாள் ஷைலா. அப்பொழுதுகூட லைலாவை எனக்குப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.



அப்பா வந்ததும் கடிதத்தை நான் அவரிடம் கொடுத்தேன். படித்துப் பார்த்த அப்பா நெற்றிக் கண் திறந்த உக்கிரமூர்த்தியாகக் காட்சியளித்தார். தாம்தூம் என்று குதித்தார். வாயில் வந்தபடி திவாகரைத் திட்டினார்.

விவரமறிந்த அம்மாவோ தன் இயல்புபடி பொலபொலவென்று கொட்டித் தீர்த்தாள். 'என்னடி இது. அநியாயமாக இருக்கிறதே! இவ்வளவு தூரம் கோடித்து ஊரெல்லாம் டாம் டாம்



என்று கொட்டிக்கோஷித்த பிறகு கல்யாணத்தை நிறுத்தலாமாடி? ஆப்பைத் தூக்கிலிருந்து அண்டா வரையில் நான் வாங்கிவிட்டேனேடி. பந்தல் காலிலிருந்து படுக்கும் கட்டில்வரையில் எல்லாம் தயாராகிவிட்டதே. இவ்வளவு தூரம் ஆன பிறகு ஏதோ ஒரு வேலையற்ற பெண் சொல்கிறாள் என்று கல்யாணத்தை நிறுத்தலாமா? ஆண்கள் கல்யாணத்திற்கு முன்பு தவறி நடந்தால்



அது பீரமாத தப்பு ஒன்றுமில்லை. இவ்வளவு படித்தப் பிள்ளை, பணக்காரப் பிள்ளை, நமக்குக் கிடைத்த பிறகு வேண்டாம் என்று எப்படியடி கூறுவது? அறிந்தவர் தெரிந்தவர் எல்லோருக்கும் அழைப்பிதழ் அனுப்பியாகிவிட்டதே' என்று புலம்ப ஆரம்பித்துவிட்டாள்.

அப்பாவுக்கு ஒரே கோபம். 'சே சே! கொஞ்சம் வாயை மூடிக்கொண்டு இருக்கமாட்டாயா? இழவு நடந்த வீடுபோல் ஏன் ஓலமிடுகிறாய்?' என்று அதட்டினார்.

மறு நாளே, லைலாவின் கடிதம் எவ்வளவு தூரம் உண்மை என்று அறிந்து வர சென்னை சென்றார் அப்பா. நானும் லைலாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் அவருடன் பிடிவாதமாகக் கிளம்பினேன். அம்மா வழக்கம்போல் ஆயிரம் ஆட்சேபணைகள் சொன்னாள் என்றாலும் வழக்கம்போல் அதைச் சட்டை செய்யாமல் நாங்கள் கிளம்பிவிட்டோம்.

மிக எளிதில் லைலாவைக் கண்டுபிடித்துவிட்டோம். அங்கு விசாரித்ததில் லைலாவும் திவாகரும் உண்மையாகவே காதலித்தவர்கள் என்று தெரிய வந்தது.

மிக்க அன்புடன் லைலாஎன்னைத் தன் விடுதியறைக்கு அழைத்தாள். விருப்பம் இல்லாவிட்டாலும், லைலாவின் வற்புறுத்தலால் அப்பாவும் என்னுடன் வந்தார். மிகவும் அடக்கமாகவும் அமைதியாகவும் காட்சியளித்தாள் பேதை லைலா. அவள் முகத்தில் பிரதிபலித்தது சோகமா, ஏமாற்றமா, துக்கமா என்று அறிய முடியவில்லை என்றால். லைலாவும், திவாகருமாகப் பல கோணங்களில் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை எனக்குக் காண்பித்தாள்.

எனக்குச் சொல்ல முடியாத கோபமும் ஆத்திரமும் வந்தது திவாகர்மீது. சே சே! அவரும் ஒரு மனிதரா? நேர்மையும் ஆண்மையும் அற்ற கோழை. ஆனால் என்ன திமிரும் தைரியமும் அகம்பாவமும் இருந்தால் இப்படிச் செய்திருப்பார்? ஆசை மொழி பல கூறி அபலை லீலாவைக் காதலித்து ஏமாற்றிய அவர், நாளை கைப்பிடித்த என்னைக் கைவிட்டுக் கண் கலங்க வைக்கமாட்டார் என்பது என்ன நிச்சயம்? பெண்களைத் தனது இச்சைக்குப் பலியாகும் அப்பாவிகள் என்று நினைத்தாரோ அகம்பாவம் பிடித்தவர். லீலா கூறினாள்: 'நிர்மலா, திவாகரது மனம் எனக்குத் தெரிந்துவிட்டது. திரண்ட சொத்தையும், தனது தாயையும் விட்டு வர மனமில்லை அவருக்கு. என் பொருட்டுத் தன் அன்புத் தாயை இழக்க விரும்பவில்லை அவர். ஆனால் அதை அவர் முன்னமேயே அறிந்து என்னைப் படுகுழியில் தள்ளியிருக்க வேண்டாம். ஆனால் தவறு முற்றிலும் அவரதல்ல. எனக்கும் அதில் பங்கு உண்டு. அவரது முழு மனமும் தெரியாமல் அவர் அழகிலும் அன்பு வார்த்தையிலும் மயங்கி விட்டேன். அதற்குத் தகுந்த தண்டனையும் அடைந்து விட்டேன். என்ன இருந்தாலும் என் உள்ளத்தையும் உடம்பையும் நான் அவருக்குப் பறிகொடுத்து விட்டேன். அந்த நினைவிலேயே என் மீதி வாழ் நாட்களையும் கழித்துவிடுவேன். என் வயிற்றுப் பிழைப்புக்கு என் தொழில் இருக்கிறது.

'திவாகரைக் குறை கூறுவதற்கு ஒன்றுமில்லை. தன் தாய் சொற்படி நடந்தார் அவர். ஒரு மகன் எப்படி நடக்க வேண்டுமோ அப்படித்தான் அவர் நடந்திருக்கிறார். பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த அன்னையை மதிக்க வேண்டியதுதானே ஒரு உத்தம மகனின் முதல் கடமை. ஆனால் அதை முதலிலேயே என்னிடம் தெரிவித்திருந்தால் நானும் கொஞ்சம் கருத்தாக இருந்திருப்பேன். என்ன செய்வது? இதுதான் என் விதி', என்று கூறுகையிலேயே கண்களில் குளம்போல் நீர் தேங்கிவிட்டது. பக்குவமாக அதைத் துடைத்துக்கொண்டு சிரித்த முகத்துடன் எங்களுக்கு விடையளித்தாள் அந்தப் பெண்.

எவ்வளவு உயர்ந்த பண்பு லீலாவுக்கு! அவளல்லவோ பெண்? பெண்மையின் தியாகத்திற்கும் கற்பிற்கும் எடுத்துக் காட்டல்லவா லீலா?

குறித்த நாளில் என் திருமணம் நடக்கவில்லை. வந்திருந்த விருந்தினர்களும் உறவினர்களும் தத்தம் ஊருக்குத் திரும்பிவிட்டனர். நாங்கள் முன் பணமாகச் சம்பந்திகளிடம் கொடுத்திருந்த இரண்டாயிரம் ரூபாயையும் திவாகரனது தாய் மாமன் கொண்டு வந்து தந்துவிட்டார். ஊர் முழுவதும் வம்பும், வதந்தியும் கிளம்பிவிட்டது.

அடுத்த மாதமே தந்தையின் விடா முயற்சியால் எனக்குத் திருமணம் மிகவும் சிறப்பாக நடந்தது. என் கணவர் சேது மிகவும் நல்லவர். திவாகரைப்போல் அழகு நிரம்பியவர் அல்ல என்றாலும் பண்பும் பெருந்தன்மையும் நிறைந்தவர். திவாகரைப்போல் என் கணவர் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவரல்ல என்றாலும் இரக்கமும் மனிதத் தன்மையும் உள்ளவர். எம். எஸ்ஸி. பட்டம் பெற்று பம்பாயில் நல்ல வேலையில் இருந்தார். வயது வந்த தந்தை மட்டும்தான் என் கணவரின் – சுற்றத்தார் எல்லாம். என் மாமனாரும் எங்களுடன்தான் வசித்து வந்தார்.

ஆறு மாதம் உருண்டோடிவிட்டது. நர்ஸ் லீலாவுக்கு அழகிய ஆண் குழந்தை பிறந்து இரண்டு மாதமாகிவிட்டது. இப்பொழுது லீலா கள்ளிக்கோட்டையில் பணி புரிந்து வருகிறாள். வாரம் தவறினாலும் தவறும். லீலாவிடமிருந்து அன்பும் பாசமும் ததும்பும் கடிதம் வரத் தவறாது.




அன்று தபாலில் வந்திருந்த வாடாமல்லிகைப் பத்திரிகையில் வெளியாகியிருந்த திருமணப் போட்டோக்களை மேலெழுந்தவாரியாகப் பார்த்த நான் திடுக்கிட்டேன். சிரித்த முகமும், மலர் மாலையுமாகத் திவாகர் கல்யாணக்கோலத்தில் நின்றிருந்தார். அதற்குக் கீழே டாக்டர் திவாகர் எம். பி., பி. எஸ்.ஸிற்கும் செல்வி உஷாவுக்கும் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தது என்று எழுதியிருந்தது.

பாவம்! உஷா என்ற அந்த அப்பாவிப் பெண். திவாகரின் உண்மையான சுபாவம் அறியாமல் ஆயிரம் மனக்கோட்டைகளுடனும் இன்பக் கனவுகளுடனும், திவாகர் தூய்மையானவன் என்று நினைத்து அவனைக் கணவனாக வரித்த அந்த இளம் பெண்ணின்மேல் அனுதாபப்படாமல் இருக்க முடியவில்லை என்னால். அதே சமயத்தில் அந்தப் பேதைப் பெண் லீலாவின்மீது, திவாகரைக் காதலித்த ஒரே குற்றத்திற்காக சமுதாயத்தால், களங்கமடைந்தவள் என்று தூற்றப்பட்டுக் கல்யாணம் ஆகாமலேயே வாழா வெட்டியாக வாழ்க்கை நடத்தும் அந்தப் பண்புச் சிகரத்தின்மீது, தியாகச் சுடர்மீது இரக்கமும் உயர்வும் உண்டாயிற்று.









## 10

'ஜமீன்தாருடைய 'சாந்தி குஞ்சம்' தீக்கிரையாகி நாலைந்து நாளாகின்றன. தீப்பிடித்து எரிந்து போனதற்கடையாளமாக இன்னும் சில சின்னங்கள் தெரிகின்றன. வேலைக்காரர்கள் தங்கியிருந்த இரண்டொரு அறைகள் மட்டும் எரிந்து போகாமல் மிஞ்சி இருக்கின்றன. அதில்தான் ஜீவானந்தன் வசித்து வருகிறான். ஜன்னல் வழியாகப் பார்த்தால் எதிரில் பாருயு நதியின் வெள்ளப் பெருக்குத் தெரிகிறது. காலை நேரம். வெள்ளப்பெருக்கைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்துகொண்டிருக்கிறான் ஜீவானந்தன். மிகவும் சாந்தமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறான். இரவு வருத்திய நோயின் வேதனையால் ஏற்பட்ட சலிப்பு முகத்தில் படர்ந்திருக்கிறது. பிரபுல்லா வருகிறான்.)

பிரபுல்லா:—இன்று உடம்பு எப்படி இருக்கிறது?

ஜீவானந்தன்:—நன்றாக இருக்கிறது.

பிரபு:—நெடுநாளைய பழக்கமல்லவா? மருந்துக்காகக் கொஞ்சம்...

ஜீவா:—(சிரித்து) மருந்துதான் இருக்கிறதே! வேண்டாம் பிரபுல்! நான் சாராயம் குடிக்கமாட்டேன்.

பிரபு:—நேற்று இரவு நாங்களெல்லாம் பீதி அடைந்துவிட்டோம். வலியினால் உங்கள் உடல் விறுவிறுத்துவிட்டது.

ஜீவா:—அதற்காக உடலைச் சூடாக்கிக் கொள்ளச் சொல்கிறாயா?

பிரபு:—எங்கு இருதயம் நின்று விடுமோ என்று வல்லப டாக்டர் பயப்படுகிறார்.

ஜீவா:—இருதயம் திடீரென்று நின்று விடுமா?

பிரபு:—இதற்குத்தான் கொஞ்சம்...

ஜீவா:—(தன் இருதயத்தைச் சுட்டிக் காட்டிக்கொண்டு) அப்பா! இந்தக் கட்டை எத்தனையோ துன்பப்பட்டிருக்கிறது. அப்போதொன்றும் இருதயம் நின்றுவிடவில்லை. திடீரென்று ஒரு நாள் அது நின்றுவிட்டால்கூட அதை மன்னித்துவிட வேண்டியதுதான்.

பிரபு:—எவ்வளவு பிடிவாதமுள்ள மனிதராக இருக்கிறீர்கள் அண்ணா! இவ்வளவு பிடிவாதமும் இத்தனை நாள் எங்கு ஒளிந்து கொண்டிருந்தது?

ஜீவா:—நீ பருப்புச் சாதம் சாப்பிட போவதாகச் சொன்னாயே; அது எவ்வளவு தூரத்திலிருக்கிறது?

பிரபு:—தப்புத்தான் அண்ணா! நீங்கள் குணமடைந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

ஜீவா:—எனக்குக் குணமான பிறகா? சரி, நான் கவலை இல்லாமலிருக்கிறேன்.

(தாராதாசும் கோவில் பூஜாரியும் வருதல்.)

தாராதாஸ்:—கோவில் தட்டுக்களும் செம்புகளும் கிடைக்கவில்லை.

ஜீவா:—கிடைக்காவிட்டால் விலை கொடுத்து வாங்கிக் கொள்ளுங்கள்.

(கவலையுடன் ஏக்கௌடி வருகிறான்)

ஏக்கௌடி:—(உரக்க) இது சர்தார் வேலைதான். அவனும் அவனது இரண்டு கூட்டாளிகளும் அன்று இரவு இங்குச் சுற்றிக் கொண்டிருந்ததாகத் தகவல் கிடைத்திருக்கிறது. போலிசுக்குத் தகவல் கொடுத்துவிட்டேன். அவர்களும் வந்துவிடுவார்கள். எல்லாப் பயல்களையும் அந்தமானுக்கு அனுப்பாவிட்டால் என் பெயர் ஏக்கௌடி நந்தி அல்ல!

ஜீவா:—(சிரித்தபடி) அப்படியானால் நீயும் அவர்களோடு போகவேண்டியிருக்கும் ஏக்கௌடி! ஜமீன்தார் குமாஸ்தாவாக இருந்துகொண்டு நீ எத்தனை பேர் வீடுகளை எரித்திருக்கிறாய் என்பதும் எனக்குத் தெரியும். அவர்கள் தீ வைத்ததை யாரும் பார்க்கவில்லை. சந்தேகத்தின்மீது அவர்களுக்குத் தண்டனை கிடைத்தால் பழைய குற்றத்திற்காக உனக்கும் தண்டனை கிடைக்க வேண்டியது தானே?

ஏக்:—(பலவந்தமாகச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு) எஜமானர்தான் எனக்குத் தாயும் தகப்பனும். நாங்கள் ஏழு தலைமுறையாக சமூகத்தில் ஊழியம் புரிகிறோம். எஜமானர் உத்தரவிட்டால் தூக்குமேடைகூட ஏறத் தயார்.

ஜீவா:—எரிந்து போனது திரும்பி வரப் போவதில்லை. இதற்காகப் போலீசில் புகார் செய்து வீண் தொந்தரவுகளை விலைக்கு வாங்கிக் கொள்ளப் போகிறாயா ஏக்கௌடி?

பூஜாரி:—உங்களிடம் பிராது சொல்ல மேஸ்திரி வந்திருக்கிறார்.

ஜீவா:—எதைப்பற்றிப் பிராது?

பூஜாரி:—கோவில் ரிப்பேர் செய்ததில் அவருக்கு நஷ்டம் ஏற்பட்டது. கடைசியில் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. அப்போது நானும் இருந்தேன்.

ஜீவா:—ஏன் இன்னும் கொடுக்கவில்லை.

பூஜாரி:—(தாராதாசைச் சுட்டிக் காட்டி) சொன்னவரிடம் போய் வசூல் செய்து கொள் என்று சொல்கிறார்.

(ஜீவானந்தன் கோபத்துடன் தாராதாசைப் பார்க்கிறான்)

தாராதாஸ்:—அதிகமான தொகை...

ஜீவா:—அதிகமான தொகையைத் தான் கொடுத்துவிட வேண்டும்.

தாரா:—செலவு சரியாகச் செய்யப்பட்டதா என்று தெரியவேண்டாமா?

ஜீவா:—இதோ பாருங்கள் தாராதாஸ்! இந்தக் கெட்ட புத்தியை விட்டு விடுங்கள். ஷோடசி விஷயத்தில் உசிதமா இல்லையா என்று நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. சொல்லிவிட்டுப் போனதைப் போய்ச் செய்யுங்கள். (பூஜாரியிடம்) மேஸ்திரி நிற்கிறானா?

பூஜாரி:—ஆம் எஜமான்!

ஜீவா:—சரி, வா. நானே வந்து கணக்குத் தீர்த்துவிட்டு வருகிறேன்.

(ஜீவானந்தன், பிரபுல்லா, தாராதாஸ், பூஜாரி முதலானவர்கள் போகிறார்கள். ஏக்கௌடி மட்டும் அங்கேயே இருக்கிறான். அப்போது ஜனார்த்தனராயும் சிரோமணியாரும் வருகிறார்கள்)

ஜனார்த்தனராய்:—பாபு எங்கே போய் விட்டார்?

ஏக்கௌடி:—(எரிச்சலுடன்) யாருக்குத் தெரியும்?

ஜனார்:—என்னப்பா இது? ஆளைப் பார்த்தாலும் தோற்றம் சரியில்லை. பேச்சும் சரியில்லையே! தாராதாசை அடிக்க முன்வந்தார். என்னை சிறைக்கு அனுப்பப் போகிறார்.

சிரோமணி:—இதெல்லாம் குடியின் மகத்துவம். எஜமானர் வருவாரா?

ஏக்கௌடி:—உங்களுக்குத் தெரியுமா ராய் சாகிப்? சாகரைச் சந்தேகத்தின் மீது போலீசுக்குப் பிடித்துக்கொடுக்கமுடியாது.



ஜனார்:—சந்தேகம் என்னப்பா? அவன் தானே தீ வைத்தான்!

ஏக்:—நீங்களும் சொல்லிப் பாருங்கள்!

ஜனார்:—சொல்லித்தானே ஆகவேண்டும். இல்லாவிட்டால் குடும்பத்தோடு எரிந்து சாம்பலாக வேண்டியதுதான். ஷோடசியை விலக்கியதிற்கு நானும் தானே காரணம்?

சிரோ:—என்னைப் பற்றி என்னசொல்கிறார்கள்?

ஜனார்:—இவ்வளவு பெரிய ஜமீன்தார் மாளிகையையே நெருப்பு வைத்துக் கொளுத்திவிட்டார்கள். அவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்?

ஏக்கௌடி:—நானும் அதைப் பற்றித் தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

ஜனார்:—பின்னால் யோசித்துக் கொள்ளலாம். சீக்கிரமாக இதற்கு ஒரு ஏற்பாடு செய். இங்கு அவர்களுக்கு உதவி கிடைத்ததானால் அப்புறம் நாம் ஊரில் குடியிருக்க முடியாது.

சிரோ:—இவர்கள் யார் சொன்னாலும் கேட்கமாட்டார்கள். கொள்ளைக்காரர்கள் அல்லவா? கொலைகூடச் செய்வார்கள்! (நடுங்குகிறார்.)

ஜனார்:—வீடு மட்டும் அல்ல. எனக்கு வைக்கோல் போர்கள் எத்தனையோ இருக்கின்றன. அவை எல்லாம்...

சிரோ:—ஏம்பா? நான் கொஞ்ச நாளைக்கு வெளியூர் போய் இருந்துவிட்டு வரட்டுமா?

ஜனார்:—நான் என்ன செய்யட்டும்? நான் போனால் எல்லாம் நாசமாகிவிடுமே!

ஏக்கௌடி:—பலத்த காவலுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

ஜனார்:—வைத்திருக்கிறேன். நீங்களும்தான் காவல் வைத்திருந்தீர்கள்!

ஏக்கௌடி:—இன்னொரு விஷயம் தெரியுமா? நேற்றுக் குடியானவர்களை வரும் கோர்ட்டில் போய் வழக்குத் தொடுத்துவிட்டு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய புகாரைக் கேட்டுவிட்டு நிலத்தை நேரில் வந்து பார்ப்பதற்கு கலெக்டர் வரப்போகிறாராம்.

ஜனார்:—என்னப்பா இது? சண்டிகட்டில் இருந்துகொண்டு எனக்கும் ஜமீன்தாருக்கும் எதிராக வழக்குத் தொடுப்பதா?



"அவளைப் பாருடி! அசல் டான்ஸ் பொம்மை மாதிரி கழுத்தை ஆட்டிண்டு ஆட்டிண்டுபோறா. எங்கே போறுடி அவள்?"

'அவள் கொலுவுக்கு அழைக்கப்போறாளாக்கும்."

ஏக்கௌடி:—என்ன துணிச்சல் பார்த்தீர்களா? அரைப் பட்டினிக்காரப் பயல்கள்! குளிர்கால இரவில் உட்கார்ந்துகொண்டே காலத்தைக் கழிக்கும் பயல்கள்! நாய் நரிபோலச் செத்தலையும் பயல்கள்!...

ஜனார்:—விதை தானியத்துக்கு நம் வீட்டு வாசலில் உயிரைவிடும் பயல்கள்...

ஏக்கௌடி:—அந்தப் பயல்களுக்குக் கோர்ட்டுக்குப் போய் வழக்குப் போடப் பணம் ஏது? இவர்களுக்கு இந்த யோசனை சொல்லிக் கொடுத்தது யாராயிருக்கும்?

ஜனார்:—இந்த ஜில்லாக் கோர்ட்டுத் தானே இந்தப் பயல்கள் கண்டது. அதுக்கு மேலே ஹைகோர்ட் இருக்கிறது. அங்கே ஜீவானந்த சௌத்திரியும் ஜனார்த்தனராயும் போகாமல் விட



மாட்டார்கள் என்பது இந்த நாய்களுக்குத் தெரியவில்லையே?

ஏக்கௌடி:—உங்களுக்கும் பணத்துக்கும் பஞ்சமா? மாப்பிள்ளை பாரிஸ்டர். இன்னும் எத்தனையோ சிநேகிதர்கள். நீங்கள் எதற்குக் கவலைப்பட வேண்டும்?

ஜனார்:—இல்லை ஏக்கௌடி! நிலம் விற்பனை செய்யும் விஷயம் மட்டும் அல்ல.

ஏக்கௌடி:—அது தெரியும். இந்தப் பயல்கள் கலெக்டருடைய அனுதாபத்தைச் சம்பாதித்திருப்பார்களா?

ஜனார்:—சொல்ல முடியாது. இதைப் பற்றி ஜமீன்தாரிடம் சொல். நான் போகிறேன்.

ஏக்கௌடி:—சரி, இதற்குள் நானும் ஒரு காரியத்தை முடித்து விடுகிறேன்.

(மூவரும் போகிறார்கள். ஜீவானந்தனும் பிரபுல்லாவும் வருகிறார்கள்.)

ஜீவா:—முடியாது பிரபுல். அது நடக்காது. வயல் தண்ணீரை வெளியேற்ற வாய்க்கால் வெட்டப் பணமில்லாதபோது வீடு ரிப்பேர் செய்ய முடியுமா?

பிரபு:—சரி, நீங்கள் ஊருக்குத் திரும்பிப் போங்கள்.

ஜீவா:—முடியாது.

பிரபு:—ஏன் முடியாது? இந்த வீட்டில் எப்படி இருப்பீர்கள்?

ஜீவா:—இப்போது இருப்பதுபோலத் தான். இதைப் பொறுத்துக் கொள்ளலாம். மனிதன் எத்தனையோ விஷயங்களைப் பொறுத்துக் கொள்ளவேண்டும் பிரபுல்!

பிரபு:—பொறுத்துக் கொள்வதற்கும் ஒரு எல்லை இருக்கிறது அண்ணா! உங்கள் உடம்பு [illegible] மோசமாகிவிட்



டது. மழை காலம் ஆரம்பமாகப் போகிறது. இந்த இடிந்துபோன வீட்டிலே இருந்துகொண்டு உடம்பைப் பாதுகாக்க முடியுமா? தயவு செய்து ஊருக்குப் புறப்படுங்கள்.

ஜீவா:—(சிரித்தபடி) இந்த உடம்பைப் பற்றி இன்னொரு நாளைக்குக் கவலைப்பட்டுக் கொள்ளலாம் அப்பா! குடியானவர்கள் வருஷா வருஷம் பணத்தைக் கொட்டிக் கொடுத்துவிட்டுச் சாகிறார்கள். அந்தச் சாவைத் தடுப்பதற்காக ஜமீன்தார் செத்துப்போனால் நல்லதுதான்.

(ஜனார்த்தன் வேகமாக வருகிறார்.)

ஜனார்:—எஜமானரே உத்தரவிட்டு...

ஜீவா:—என்ன உத்தரவு ராய் சாகிப்?

ஜனார்:—என் குளத்தைச் சேர்ந்த நிலத்தின் வேலியைப் பிடுங்கிவிட்டு அதைக் கோவில் நிலத்தோடு சேர்த்து விட்டீர்களே?

ஜீவா:—அந்த இடத்தைப் பற்றிச் சொல்கிறீர்களா? அது கோவில் பசுக் கொட்டடி ஆச்சே!

ஜனார்:—அது எனக்குத் தெரியாது...

ஜீவா:—ரொம்ப நாளாகி விட்டதல்லவா? எத்தனையோ காரியங்களில் ஈடுபட்டிருப்பதால் அதை மறந்திருப்பீர்கள்.

ஜனார்:—(கோபத்தை அடக்கிக் கொண்டு) இவைகளை எல்லாம் செய்யும் முன் எஜமானர் என்னிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம்.

ஜீவா:—கொஞ்சம் முன் பின்னாகத் தகவல் தெரிந்தால்தான் என்ன கெட்டுப்போச்சு? ஒன்றும் மனத்தில் வைத்துக் கொள்ளாதீர்கள்!

ஜனார்:—முதலில் தெரிவித்திருந்தால் தகராறுக்கே இடமில்லை.

ஜீவா:—இப்போதுகூடத் தகராறு செய்வது உசிதமல்ல ராய் சாகிப்! பைரவிகளால் கோவில் சொத்து பெரும்பாலும் கைமாறிப் போயிருக்கிறது.




இப்போது அவைகளை எல்லாம் திரும்ப அடைய வேண்டும்.

ஜனா:—(வரண்ட சிரிப்புடன்) இதை விட நல்ல காரியம் வேறு என்ன இருக்கமுடியும்? ஒரு காலத்தில் கிராமம் முழுவதுமே கோவில் வசம்தானிருந்ததாம். ஆனால் இப்போது...

ஜீவா:—ஜமீன்தார் வயிற்றுக்குள் போய்விட்டதா? அது போனதுதான். ஆனால் அதையும் மீட்பதில் எவ்வித தடையும் ஏற்படாது. கோவில் தஸ்தாவேஜுகள், சாலை விவரங்கள் எல்லாம் பெரிய வக்கீலுக்கு அனுப்பியிருக்கிறேன். நான் தனியாக என்ன செய்ய முடியும்? இந்தக் காரியத்தில் நீங்களும் பூரண உதவி செய்யவேண்டும்.

ஜனா:—செய்யாமல் விடுவோமா? நாங்கள் எப்போதும் எஜமானர் ஊழியர்கள் தான்...

(ஜனார்த்தன் போகிறார். ஜீவானந்தன் புன்சிரிப்புடன் அவர் போவதையே பார்த்துக் கொண்டிருக்கிறான்.)

பிரபு:—அண்ணா! நீங்கள் என்ன இங்கு ஒரு பெரிய காண்டத்தையே ஆரம்பித்து விடுவீர்கள் போலிருக்கிறதே!

ஜீவா:—அப்படியானால் அது நல்ல விஷயம்தான்.



பிரபு:—இலங்கைக்கு வெளியிலிருந்து கொண்டு செய்வதுதான் நல்லது. இலங்கையில் வசிப்பவர்களுக்கு இது மகிழ்ச்சியை அளிக்காதே! வந்ததிலிருந்து கிராமத்திலுள்ளவர்களிடம் எல்லாம் சண்டை போட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். இது அவசியமுமில்லை. கௌரவமுமல்ல. எவ்வளவோ காரியம் செய்து விட்டீர்கள். அமைதியாக ஊர் போய்ச் சேரலாம் வாருங்கள்.

ஜீவா:—நேரம் கிடைத்ததும் புறப்பட்டுவிடுவேன்.

பிரபு:—சரி; அப்போதே போகலாம். எப்படியோ உங்களுக்குப் போவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் இருக்கிறது என்பது தெரிகிறது. ஆனால் நான் எப்போது போவேன் என்பதுதான் தெரியவில்லையே?

(ஏக்கௌடி வருகிறான்.)

ஏக்கௌடி:—மேஸ்திரி நின்று கொண்டிருக்கிறான். ஏரி எங்கு அமைப்பது என்று கேட்கிறான்.

ஜீவா:—பிரபுல்லா! நாம் போய் பார்த்துவரலாம் வருகிறாயா?

பிரபு:—வாருங்கள்!

(ஜீவானந்தன் பிரபுல்லாவை அழைத்துக் கொண்டு வெளியில் போகிறான். அடுத்த பக்கத்திலிருந்து சிரோமணியும் ஜனார்த்தன ராயும் வருகிறார்கள்.)

ஜனா:—பாபு எங்குப் போய்விட்டார் ஏக்கௌடி?

ஏக்கௌடி:—மேஸ்திரி வேலையைப் பார்த்துவரப் போயிருக்கிறார்கள். வயலுக்குள் தண்ணீர் வராமல் தடுக்க ஒரு கரை போடுகிறார்கள் அல்லவா?

ஜனா:—பைத்தியக்கார மனிதன்!

சிரோ:—குடிவெறி விகாரமெடுத்திருக்கிறது.

ஏக்கௌடி:—இந்தச் சமயத்தில் கலெக்டர் நிலங்களை நேரில் பார்வையிட வரப்போகிறார். அவர்களுக்குச் செலவுக்குப் பணம் யார் கொடுக்கிறார்களோ தெரியவில்லை. எஜமானரைச் சாட்சி போட்டார்களானால் இவர் ஒன்றையும் மறைக்கமாட்டார். போலி தஸ்தாவேஜ் தயார் செய்ததுமுதல் சொல்லிவிடுவார்.

ஜனா:—(சிரித்தபடி) எனக்கு வயது எவ்வளவு ஆகிறது தெரியுமா ஏக்கௌடி? சண்டிகட் ஜனார்த்தனராயை இந்தப் பித்தலாட்டக்காரன் ஒன்றும் செய்துவிட முடியாது. ஆனால் ஏதாவது ஒரு வழி செய்தாக வேண்டும். எல்லாம் உன் கையில்தானிருக்கிறது.

ஏக்கௌடி:—உண்மையாகச் சொல்கிறேன்...

ஜனா:—உண்மைதான் சொல்லுவாய்! ஏக்கௌடி எப்போதுதான் பொய் சொல்லியிருக்கிறான்? அதிருக்கட்டும். எனக்குப் போனால் எவ்வளவு போய்விடும்? ஒரு நூறு ஏகரா போகலாம். ஆனால் உன் எஜமானருக்கு எவ்வளவு போகும் என்பதைச் சரியாகக் கணக்கிட்டுச் சொல்லிவிடு. கண்ணில் எண்ணெய் விட்டுக்கொண்டு பார்க்கச் சொல். அதற்கப்புறம் வேண்டுமானால் என்னைச் சாக்க வைக்கலாம்.

ஏக்கௌடி:—நிலங்களைப் பற்றிய விஷயம் மட்டும் அல்ல ராய்சாகிப்! பொய் தஸ்தாவேஜ் தயாரித்த குற்றம் இருக்கிறதே! அவரைக் கேட்டால் அனைத்தையும் ஒளிக்காமல் சொல்லிவிடுவார்.

ஜனா:—இதற்கென்ன காரணம்? ஜெயிலுக்கு அனுப்பலாம் என்றுதானே? ஜனார்த்தனராய் மட்டும் தனியாகப் போகமாட்டான் ஏக்கௌடி! உங்கள் எஜமானரையும் விட்டுவிடமாட்டார்கள் என்பதையும் சொல்லிவிடு.

ஏக்கௌடி:—அதை நீங்களே சொல்லுங்கள்.

ஜனா:—சொல்லத்தான் போகிறேன். நல்லவிதமாகச் சொல்லப் போகிறேன். கலெக்டர் முன் ஒத்துக்கொள்வது வேடிக்கையல்ல. கைக்கு விலங்குப் போட்டுக்கொள்ள வேண்டும்.

ஏக்கௌடி:—அது உங்களுக்கும் அவருக்கும்தான் தெரியும்.

ஜனா:—உங்களுக்கு? திருவாளர் ஏக்கௌடி நந்திக்குத் தெரியாதா? வீடு எரிந்தபோதே இதில் ஏதோ சூது இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். ஆனால் ஜனார்த்தனராயை ஏமாளி என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். நிர்மலைத் தடுத்து வைத்திருக்கிறேன். அவன் உங்களுக்கும் புத்தி கற்பிப்பான்.

ஏக்கௌடி:—என்மீது வீணாகக் கோபப்படுகிறீர்கள். எனக்குத் தெரிந்தவிஷயங்களை எல்லாம் உங்களுக்குத் தெரிவித்துக் கொண்டுதானிருக்கிறேன். நம்பிக்கை இல்லை என்றால் ஜமீன்தார் வயல் பக்கம்தான் போயிருக்கிறார். கேட்டுப் பாருங்கள்.

ஜனா:—இதோ போகிறேன். சிரோமணி, வாருங்கள்.

சிரோ:—எதற்காகப் பயப்பட வேண்டும்? வா போவோம். (இரண்டடி சென்று பின் வாங்கி) அதிகமாகக் குடித்துவிட்டுப் போயிருக்கிறானா?

ஏக்கௌடி:—இப்போது குடிப்பதில்லையே! (மெதுவாக) போகவேண்டியதில்லை. அவரே வருகிறார்.

(ஜீவானந்தனும் பிரபுல்லாவும் வருகிறார்கள்)

(அடுத்த இதழில் முடியும்)

PAKCO



நீடித்து உழைக்கும்
க்ருட் ஆயில் எஞ்சின்கள்
5/6 H. P., 8/9 H. P. & 10/11 H. P. களில் கிடைக்கும்.
அதிக சக்தி உள்ள எஞ்சின்களுக்கும் விண்ணப்பிக்கலாம்.
ஆர்ம்ஸ்டிராங் சிட்லி இங்கிலீஷ் டீசல் எஞ்சின்களுக்கு ஸ்பேர் பாகங்கள் எப்பொழுதும் ஸ்டாக்கிலிருந்து கிடைக்கும்.
சென்னை, ஆந்திரா, மைசூர் & கேரள ராஜ்யங்களுக்கு ஏஜண்டுகள்:
K. S. ஷிவ்ஜி அண்ட் கோ.
தபால் பெட்டி நெ. 5.
178/179, பிராட்வே, சென்னை-1.
போன்: 3617. தந்தி: 'லாம்ப்' Estd 1903

# நம்பிக்கை என்னும் மூச்சு

டி. கே. பாலச்சந்திரன்

என் வாழ்க்கையில் இரண்டு சுப்பிரமணியங்களை மறக்க முடியாது. ஒருவர் திருவனந்தபுரம் பி. சுப்பிரமணியம். இன்னொருவர் டைரக்டர் கே. சுப்பிரமணியம்.

பள்ளிக்கூடத்தில் நான் படித்து வந்த பொழுதே என்னை டைரக்டர் சுப்பிரமணியத்தினிடம் சொல்லிச் சினிமாவில் சேர ஸ்ரீ பி. சுப்ரமணியம் எனக்கு வழி காட்டினார். என்னுடைய பன்னிரெண்டாவதுவயதிலே 'மலையாளப் பிரகலாதா' என்ற மலையாளப் படத்திலே நான் நடித்தேன். ஆனால் அதற்குப் பிறகு என்னுடைய இரண்டும் கெட்டான் வயது காரணமாகச் சினிமா உலகம் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை! நவாப் டி. எஸ். ராஜமாணிக்கத்தின் நாடகக் கம்பெனியில் பெண் வேடம் போடும்படி நேர்ந்தது!

சென்னைக்கு வந்து பல நடனக் குழுக்களில் உடம்பை வில்லாக வளைத்து நடனங்கள் ஆடிப் படாத பாடெல்லாம் பட்டு மீண்டும் சினிமாவிலே எனக்குரிய தகுதியைப்பெற எவ்வளவோ காலமாயிற்று.

அன்று சினிமாவில் நான் சேரக் காரணமாக இருந்தாரோ அந்த பி. சுப்பிரமணியம் காரணமாக இருந்தாரோ அவர் சொந்தமாகத் தயாரித்திருக்கும் 'யார் மணமகன்?' என்ற தமிழ்ப் படத்திலே என்னையே இரு வேடக் கதாநாயகனாக்கியது பெருமையாக இருந்தது. முதலில் அதற்குரிய கதாநாயகன் யார் என்று சொல்லாமல் சென்னையிலிருந்து மற்ற நடிகர் நடிகைகளை எல்லாம் வரவழைத்துப் படமாக்கிக்கொண்டு போனார்.

திடீரென்று ஒரு நாள், 'பாலச்சந்தர், நீதான் இந்தப் படத்துக்குக் கதாநாயகன்!' என்று அறிவித்து என்னைத் திக்குமுக்காட வைத்தார்.

இரட்டை வேட நடிப்பு என்றதும் 'அபூர்வ சகோதரர்'களில் அதற்கு வழிகாட்டிய ஸ்ரீ எம். கே. ராதா அவர்களின் நினைவு எனக்கு வந்தது. அவரைப்போன்றவர்கள் ஏற்கெனவே அபாரமாக நடித்து இரட்டை வேட நடிப்புக்குத் தனிச் சிறப்பைத் தேடி வைத்திருக்கிறார்களே? என் நடிப்பு எப்படி அமையுமோ என்னும் அச்சம் எழுந்தது. ஆனால் அதுபற்றி யோசிக்க வேண்டிய படத் தயாரிப்பாளர் சற்றும் தயங்காமல் என்னைத் தேர்வு செய்திருக்கும்போது நான் பாடுபட்டு நடிக்க வேண்டியதுதானே?

பொறுப்போடு 'யார் மணமக'னில் இருவிதத் தோற்றங்களுடன் நடித்தேன். என் நடிப்பில் என்னைவிடப் படத் தயாரிப்பாளருக்குப் பரம திருப்தி!

ஆர்வமும் துடிதுடிப்பும் நிறைந்த உணர்ச்சி மிகுந்த பாத்திரங்களில் நடிக்கவேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் தமிழ் மார்க்கெட்டுக்குள் ஆசையோடு நுழையும் என்னைச் சிலர் தவறாகப் புரிந்துகொண்டு மலையாளப் படவுலகுக்கே தள்ளுகிறார்கள்! நவாப் நாடகக் கம்பெனியில் வெண்சாமரம் வீசுகிற வேடத்திலிருந்து போடாத வேஷங்களே பாக்கி இல்லை!

இருந்தாலும் ஏனோ எனக்குரிய சரியான சந்தர்ப்பம் தமிழ்ப் படங்களில் இன்னும் வாய்க்கமாட்டேன் என்கிறது!

சிலர், 'பாலச்சந்தரா? அவன் நாடகக் கம்பெனியிலே பெண் வேடம் போட்டவனாயிற்றே!' என்று ஒதுங்கிப் போகிறார்கள்.

இன்னும் சிலர் என்னைக் கம்யூனிஸ்ட் என்று கருதி அப்படிப்பட்ட கொள்கைகளுக்குத் தகுதியாக்கிவிடுகிறார்கள்!

உண்மையில் எப்படிப்பட்ட வேடம் தந்தாலும் விருப்பு வெறுப்பின்றி நடிக்கத் துடித்துக்கொண்டுதானிருக்கிறேன். கம்யூனிசக் கொள்கையில் எனக்கு ஈடுபாடு உண்டு. அதற்கும் சினிமாவில் வேடம் போடுவதற்கும் சம்பந்தமில்லை. அந்த அரசியல் முழக்கங்களை நான் ஸ்டுடியோ அறைகளிலே வைத்துக்கொள்ளுவதில்லை. அதிலெல்லாம் எனக்கு ஒரு பிடிவாதம் இருக்குமானால் 'லவகுசா' என்ற படத்திலே நாரதராக நடித்து வருவேனா?

தென்னாட்டுப் படவுலகிலே திரும்பத் திரும்பச் சில கதாநாயக நடிகர்களே இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு நடுவே மலையாளத்திலிருந்து ஒரு பிரேம் நஸீர், கன்னட நாட்டிலிருந்து உதயகுமார், கல்யாண்குமார் ஆகியோர் வந்தார்கள். ஆனால் சென்னைக்கு நான் வந்து பல ஆண்டுகளாகிவிட்டன! இன்னும் நான் தமிழ்ப் படங்களிலே சரிவரப் பயன்படவில்லை!

குறை எங்கே இருக்கிறது என்றுதான் இன்று சிந்தித்து வருகிறேன். தமிழ் வசனங்களுக்கு உயிரும் உணர்ச்சியும் உருவமும் தந்து ஏற்றுக்கொண்ட பாத்திரமாக மாறி நடிக்க இன்று தயாராகவே இருக்கிறேன். ஆனால் இன்னும் என் உள்ளம் புகைந்து கொண்டுதானிருக்கிறது.



எனக்கேற்ற வேடம், எனக்கேற்ற படம் வருமா, அதில் சிறு பகுதியில் புகுந்து புறப்பட்டாலும் 'யார் அந்த இளைஞன்? உணர்ச்சித் துடிப்போடு பொரிந்து தள்ளினானே?' என்று படம் பார்க்கிறவர்கள் கேட்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஆனால் மலையாளத்திலிருந்து தமிழ்ப் படம் எடுக்கிற நல்ல உள்ளமும் அன்புமுள்ள ஒருவர் தான் 'வா பாலச்சந்திரா!' என்று அன்போடு அழைக்கிறார். இங்கே— எவரும் அழைக்கக் காணோம்!

இளமையோடும் துடிப்போடும் ஆர்வத்தோடும் தமிழ்ப் படங்களிலே நடிக்க விரும்புகிறேனே; அதுதான் தவறுபோல இருக்கிறது!

காலம்வரும் வரையில் என் நம்பிக்கை நெஞ்சின் மூச்சாகவே தானிருந்துவரும்!

'ஆலோலம் என்று கூவினாள்...' என்று உல்லாசமாகப் பாட்டை முணுமுணுத்துக் கொண்டே வந்து படி ஏறினான் சங்கரன்·



# பச்சோந்தி

எல்லார்வி

'என்னடா பழி! வள்ளி படம் பார்த்து விட்டு வருகிறாயா?' என்று உரிமையோடு அவன் தோளில் கை போட்டான், அவனுடைய வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த ரங்கதுரை·

'சேசே! அந்தப் படத்திற்கெல்லாம் நான் போவேனடா?'

'பின் எங்கே போய் விட்டுச் சாவகாசமாக வருகிறாய்?'

'கூட்டம் ஒன்றில் பேசி விட்டு வருகிறேன்' என்றபடி மேலே சென்று தன் அறைக் கதவைத் திறந்தான் சங்கரன்·

'என்ன கூட்டமோ, என்ன பேச்சோ!'

'அதில் உள்ள சுவை உனக்கு என்னடா தெரியும்?'

'உண்மைதான்· கல்லைக் கடிப்பதில் எனக்குச் சுவை தெரியாது!'

'கல்லைக் கும்பிடுவதிலேதான் நீ சுவை காண்பாய்· கல்லில் ஒன்றும் இல்லை என்பதில் நான் சுவை காண்கிறேன்!' என்று பெரிதாகச் சிரித்தான் சங்கரன்·

'எப்படியாவது தொலைந்து போ· பிரயாணம் என்ன சேதி?'

'அதோ பார்; பெட்டிப் படுக்கை எல்லாம் ரெடி!'

'அப்படியானால் நான் போய் என் சாமான்களோடு டாக்சியில் வந்து விடவா?'

'ஓ!...' என்று நீட்டினான் சங்கரன். ரங்கதுரை வேகமாகக் கீழே இறங்கிச் சென்றான்.

சங்கரன் தன்னைக் கண்ணாடியில் பார்த்து மகிழ்ந்துகொண்டான்· 'இன்றைய பேச்சு ஏ ஒன்!' என்று தன்னைத் தானே பாராட்டிக் கொண்டான்·

ரங்கதுரை டாக்சியில் வந்தான்· சங்கரன் அறையைப் பூட்டிக் கொண்டு பெட்டிப் படுக்கைகளுடன் வந்து டாக்சியில் ஏறிக் கொண்டான். டாக்சி ரயில் நிலையத்திற்குப் பறந்தது.

ஃ ஃ ஃ

ரங்கதுரையும் சங்கரனும் கல்லூரி நண்பர்கள்· ரங்கதுரை பணக்காரன்; பெற்றோரும் சுற்றமும் உடையவன்· சங்கரன் ஏழை; திக்கற்றவன்· அழகும் அறிவும் நிறைந்த அவனிடம் ரங்கதுரைக்கு எல்லையற்ற அன்பு· செலவின்றிப் படித்த அவனுடைய சில்லறைச் செலவினங்களை ரங்கதுரை வலிய ஏற்றுக்கொண்டிருந்தான்· அவனுடைய அறிவில் அத்தனை மயக்கம்·



எல்லாம் சரிதான்; ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் நண்பர்கள் இருவரும் இரு துருவங்களாக இருந்தனர்· ரங்கதுரை இறை வழிபாடுகளில் அளவற்ற ஈடு

மாடு உடையவன்; சங்கரன் அந்த அம்சத்தில் அவனுக்கு நேர் எதிரிடை. கடவுள் இல்லை என்று வாதிப்பவன். தனி வாதம் மட்டும் அல்ல; அதற்கென்று அவனுக்குச் சில நண்பர்கள், சங்கம், கட்சி, கூட்டம் எல்லாம் உண்டு. கொள்கைகளில் முரண்பாடு உடைய அவர்கள் ஒருவர் போக்கில் மற்றவர் குறுக்கிடாமல் நெருக்கமான நட்புடையவர்களாக இருந்தார்கள். இதைக் கண்டு எல்லாருமே ஆச்சரியப்பட்டார்கள்.

சங்கரனைத் தன் ஊருக்கு வர வேண்டும் என்று ஒவ்வொரு விடுமுறையின்போதும் ரங்கதுரை வற்புறுத்திக்கொண்டேயிருந்தான்; சங்கரனும் ஏதாவது காரணங் கூறி மறுத்துக்கொண்டேயிருந்தான். அடிக்கடி நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொள்ளாமல் எங்கோ இருக்கிற கிராமத்தில் போய்ச் சில காலம் அடைந்து கிடக்க அவனுக்கு மனமில்லை. 'மேலும் ரங்கதுரை வீட்டினர் அவனைப்போல் இருப்பார்களா? கொள்கை சம்பந்தமாக ஏதாவது மனக்கசப்பு நேர்ந்து விடுமோ!' என்றெல்லாம் எண்ணி அவன் தயங்கினான். அதைப் புரிந்துகொண்ட ரங்கதுரை தக்க ஆறுதல்கள் கூறி அவனை வற்புறுத்தினான். ஆயிரம் நிபந்தனைகளுடன் சங்கரன் இணங்கினான். இருவரும் பயணப்பட்டனர்.

ரெயில் மார்க்கத்தில் தென்பட்ட கிராமியச் சூழலின் இனிய காட்சிகள் சங்கரன் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தன. நிலையத்தில் பண்ணை வண்டி காத்துக்கொண்டிருந்தது. பசிய சூழலின் நடுவே உயர்தர வண்டியிலே பயணம் செய்தபோது சங்கரன் தேவலோகத்தில் சஞ்சரிப்பது போலவே உணர்ந்தான். ஆனால்...

வண்டி கிராமத்தை அணுகிய போது காது செவிடுபடும்படி எழுந்தத் தாரை, தப்பட்டை, எக்காளம் முதலியவற்றின் ஒலியைக் கேட்டதும் அவன் திடுக்கிட்டான். அது என்ன ஒலி என்று வினவியபோது வண்டிக்காரன் சொன்ன பதில் அவனுக்குப் பிடிக்கவில்லை: 'கிராமத்தில் திருவிழா!'

'ரங்கதுரையின் தகப்பனார் கிராமத்தின் பெரியதனக்காரர். விழா அவர் தலைமையிலேதான் நடைபெறும். அந்த வீடே ஆலயம்போல் விளங்குமே...' இப்படி ஓடிற்று சங்கரனின் நினைவு.

'தோட்டத்திலே விடுதி ஒன்று இருப்பதாகச் சொன்னாய் அல்லவா?' என்று ரங்கதுரையிடம் கேட்டான்.

'நீ அங்கே தங்கலாம் என்று தானே கேட்கிறாய்?'

'அடா!... உயிர் நட்பு என்றால் இதுதான்!' என்று ரங்கதுரையின் முதுகிலே தட்டினான் சங்கரன்.

'இப்போது நேரே வீட்டுக்கே போய்விடுவோம். மாலையில் நீ விடுதிக்கு வந்து விடலாம். சாப்பாட்டு வேளைக்கு ஆள் அனுப்புகிறேன்; அவ்வப்போது வீட்டுக்கு வந்தால் போதும்.'

ரங்கதுரையின் அன்பை எண்ணிச் சங்கரன் மகிழ்ந்தான். வண்டி வீட்டின் முன் நின்றது. வரவேற்பு, இன்சொல், உபசாரம் யாவும் முறைப்படி நிகழ்ந்தன. ஆயினும் சங்கரனுக்கு அங்கே இருப்புக் கொள்ளவில்லை. ரங்கதுரையின் தந்தை, தாய், அத்தை முதலியோரின் பூஜை, பாராயணம் முதலிய வழிபாடுகள் அவனுக்கு வேதனையை அளித்தன. மாலையில் அவன் விடுதியை அடைந்தான்.

நிறைந்து ஓடும் ஆறும், சலசலக்கும் ஓடை, குளம், ஏரி முதலியனவும், திரும்புமிடமெங்கும் தென்படும் தென்னந்தோப்பு, வாழைத்தோட்டம் ஆகியனவும் மற்றுமுள்ள இயற்கை வளப்புகளும் சங்கரன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. நண்பனோடு காலையிலும் மாலையிலும் பல இடங்களுக்குப் போய் உலவி வந்து இன்பம் கண்டான். சில வேளைகளில் ரங்கதுரை வர நேரம் ஆகும். தகப்பனாருக்குக் கட்டுப்பட்ட அவன் அவர் ஏவும் பணிகளை நிறைவேற்ற எங்காவது போவான். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் சிறிது நேரம் காத்திருந்து விட்டுத் தனியே புறப்பட்டு விடுவான் சங்கரன்.




மூன்றும் நாள் மாலை. ரங்கதுரை வரவில்லை. சங்கரன் வெளியே கிளம்பினான். அந்த ஊரின் பகுதிகள் அநேகமாக அவனுக்குப் பிடிபட்டிருந்தன. ஒவ்வொரு வேளையிலும் வெவ்வேறு திசைகளில் போய் வருவதை அவன் விரும்பினான். அதன்படி இப்போது கோயில் பக்கமாகச் சென்றான். அவன் வந்த அன்று திருவிழாவின் இறுதி நாள். இப்போது ஊரிலேயே மக்கள் நடமாட்டம் குறைவு. கோவிலடியில் சந்தடியே இல்லை.

கருவாழைக்கரை மாரியம்மன் கண்கண்ட தெய்வம் என்பது அந்த வட்டாரங்களில் உள்ளவர்

களின் நம்பிக்கை. நோய் நொடி வந்தால் வேண்டிக்கொள்வார்கள்; பின்னர் வந்து பிரார்த்தனையை நிறைவேற்றுவார்கள். மக்களின் நம்பிக்கை பழுது போகாதபடி மாரியம்மனும் அருள் பாலித்து வந்தாள். நாளுக்கு நாள் மக்கள் நம்பிக்கை பெரிய அளவில் வளர்ந்து கொண்டே போயிற்று. கூன், குருடு, செவிடு, நொண்டி, முடம் முதலிய குறைபாடுகளுக்குக்கூட மக்கள் வேண்டுதல் செய்து கொண்டு வந்து பிரார்த்தனையை நிறைவேற்றலானார்கள். ஆண்டு தோறும் திருவிழாக் காலத்தில் அந்தச் சிறிய ஊர் 'ஜே ஜே' என்று இருக்கும்; திருவிழா முடிந்த பின் அமைதியில் தோய்ந்து விடும்.

சங்கரன், கோயிலின் பக்கமாகப் போக வேண்டும் என்று போனானேயன்றிக் கோயிலுக்குப் போக வேண்டும் என்று போகவில்லை. குளக்கரையில் அவன் நடந்துகொண்டிருந்தபோது அருகே உள்ள குறுக்குச் சந்திலிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டது. பெண் உருவம்; அழகே வடிவானவள்.

சங்கரன் ஒரு கணம் திகைத்து நின்றுவிட்டான். பகட்டு உடைகளிலும் பவுடர் மேக்-அப்பிலும் மின்னும் பட்டணத்து அழகிகளைப் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போயிருந்த அவன் கண்களுக்கு இந்தப் பட்டிக்காட்டுப் பெண் முற்றும் புது விருந்தாகக் காட்சி தந்தாள்.

கடைந்தெடுத்தாற் போன்ற அவயவங்களுடன் தந்தச் சிலை உயிர் பெற்று நடமாடுவதுபோல் அவள் அழகாக நடந்து வந்தாள். பருவத்தின் செழிப்பும் போஷணையின் கொழிப்பும் அவள் மேனியிலே பளபளப்பை ஊட்டியிருந்தன. ஒரு கையில் பூக்கூடையும் மறு கையில் எண்ணெய்க் கிண்ணமுமாக வந்த அவள் கோயிலை நோக்கி நடந்தாள். அந்தி மயங்கும் அந்த நேரம் அவளை வனமோகினியாய் அவன் கண்ணில் சித்திரித்தது.

தற்செயலாக அவள் திரும்பினாள். சங்கரனைப் பார்த்தாள். அவன் தன்னையே இமையாது நோக்குவதைக் கண்டாள். நாணம் தலைகவிழச் செய்தது. சிறிது தூரம் சென்றாள். தலை நிமிர்ந்து பார்த்தாள். இன்னமும் அவன் தன்னையே நோக்குவதை உணர்ந்தாள். கோயில் வாயிலை அடைந்தாள். உள்ளே செல்லும் தறுவாயில் மீண்டும் திரும்பிப் பார்த்தாள். என்ன வியப்பு! அவன் நின்ற இடத்திலேயே சிலையாய் நின்றிருந்தான். கண்கள் அவளிடமிருந்து மீளவே இல்லை. அவள் தடுமாறிய நிலையில் உள்ளே சென்றாள்.

உருவம் மறைந்ததும் சங்கரன் குருடுபோல் ஆனான். வழி தடுமாறியவன்போல் நடந்தான். எங்கே போவது? கோயிலுக்குள் செல்வதா? ஊறிப்போன கொள்கை அனுமதிக்கவில்லை. அங்கேயே நின்றிருப்பதும் சரியில்லை. யாராவது பார்த்தால் ஏதாவது நினைப்பார்கள். விடுதிக்கே திரும்பினான். அங்கே ரங்கதுரை அவனுக்காகக் காத்திருந்தான்.

இரவெல்லாம் சங்கரன் தூக்கமின்றிப் புரண்டு கொண்டு கிடந்தான். அவள் நினைவே நினைவு. அவள் கனவே கனவு. விடிகிற வேளையில் சிறிதே கண்ணயர்ந்தான்.

மறு நாள். பகல் பொழுது பெருந்தொல்லையாக இருந்தது சங்கரனுக்கு. மாலை வந்தது. முன்னதாகவே புறப்பட்டு விட்டான், ரங்கதுரை வந்து வளைத்துக் கொண்டுவிடப் போகிறானே என்று.

முதல் நாளைய அதே நேரம். அவள் வந்தாள். வருகிறபோதே அவள் கண்கள் அவனைத் தேடியதை அவன் கண்டான். அவனைப் பார்த்ததும் அவள் மகிழ்ச்சி பெற்றதையும் அவன் உணர்ந்தான். தேன் குடித்த நரியானான்.

அவள் கோயிலுக்குள் சென்றாள்— திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே. அவன் ஒரு கணம் யோசித்தான்; மறு கணம் விடுவிடென்று நடந்து கோயிலுக்குள் சென்றான். சந்நிதியில் அவள் நின்று கை கூப்பிக் கண்மூடித் தியானத்தில் இருந்தாள்; கரகர வென்று கண்ணீர் பொழிந்தாள். அவனும் சிறிது தூரத்தில் நின்று கரங் கூப்பி அம்பிகையை வழிபட்டான்.

அவள் கண்ணைத் திறந்தாள். அருகே அவனைக் கண்டாள். கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். முகமண்டலத்திலே குதூகல உணர்வு சுடர்விட்டது. மெல்ல நடந்து பிராகாரத்தை வலம் வரத் தொடங்கினாள். அவனும் அவளைப் பின்பற்றினான். ஆனால்... வேறு யாரோ சிலர் அப்போது அங்கே வந்தனர், தரிசனத்தை முன்னிட்டு.

அவள் ஆலயத்தினின்றும் வெளியேறினாள். பின்னோடு வந்த சங்கரன் திடுக்கிடும்படி அவன் தோளில் கை விழுந்தது. திரும்பிப் பார்த்தான்— ரங்கதுரை.




உயர்திரு மானேஜர் அவர்களுக்கு,

எதிர்பாராதவிதமாகக் கொலு படிக்கட்டுகளின் ஒரு பக்கத்தைத் தாங்கிக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டுமாதலால் இந்த நவராத்திரி பத்து நாட்களுக்கும் லீவு கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்; கிளார்க் கிருஷ்ணசாமி, பஞ்சாமிர்தம் அண்டு கம்பெனி,

'ஆச்சரியம் என்றால் இது தான் ஆச்சரியம்! எங்கள் ஊர் மாரியம்மன் சக்தியுள்ள தெய் வம்தான்!'

'சந்தேகம் என்ன? என்னையே மாற்றி...'

'உன்னை மாற்றியது மாரியம் மனு, கோமதியா?'

சங்கரன் சட்டென்று அவன் கையைப் பற்றிக் கொண்டான்.

'உனக்கு அவளைத் தெரியுமா?'
'தெரியாது.'
'கோமதி என்றாயே?'
'பேர் தெரியும்.'
'அது மட்டும் எப்படி?'
'இந்த ஊர் மணியகாரரின் அக்கா பெண்.'
'வேறு விவரம்?'
'என் அம்மாவைக் கேட்டுச் சொல்கிறேன். ஆனால்...'
'ஆனால்?'
'அவள் தெய்வத்தை வழிபடு பவள் ஆயிற்றே?'

'நானும் அவள் வழியைப் பின் பற்றுகிறேன்!'

'வருங்காலமாக ஏன் பேசு கிறாய்? இப்போதேதான்...'

'வழிபட்டு விட்டேனே! சக்தி யுள்ள தெய்வம் அப்பா!'
'உன் கட்சி?... கொள்கை?...'
'ஆ!... அதெல்லாம் சும்மா.'
'அப்படியானால் வா போக லாம்.'

இருவரும் வீட்டை அடைந் தார்கள்; உணவு கொண்டார்கள். சங்கரன் ரங்கதுரையின் தந்தை யோடு கூடத்தில் பேசிக்கொண் டிருந்தான். ரங்கதுரை உள்ளே தன் தாயினிடம் உரையாடிக் கொண்டிருந்தான். சங்கரன் அதைக் கவனித்தான்.

'நல்ல பெண், பாவம்; வைசூரி யிலே நாக்கை இழுத்து விட்ட தாம். பிறவி ஊமைபோல் இருக் கிறாள். மகமாயிதான் கோமதிக் குப் பேசும் சக்தியைக் கொடுக்க வேண்டும்'—

தாயின் பேச்சைக் கேட்டதும் ரங்கதுரைக்குச் சப்பிட்டுப் போய்விட்டது. பேச்சை சுருக்க மாக முடித்துக்கொண்டு கூடத் திற்கு வந்தான். அங்கே சங்கர னைக் காணவில்லை. தந்தையிடம் விசாரித்தான். 'என்னவோ, திடீ ரென்று இவ்வூர் மணியகாரரைப் பற்றியும் அவர் குடும்பத்தைப் பற்றியும் கேட்டான். சொன் னேன். திடீரென்று எழுந்து போய்விட்டான்' என்றார் அவர்.

'சரிதான்' என்று தலை அசை த்த ரங்கதுரை, 'இனி இதில் ஒளிவு மறைவு என்ன?' என்று எண்ணியவன்போல் தகப்பனார், தாயார் இருவரிடமும் சங்கர னைப் பற்றியும், அவன் கோம தியை விரும்பியது பற்றியும் அடியோடு சொன்னான். அவர்கள் 'ஐயோ பாவம்' என்று அங்க லாய்த்தனர்.

ரங்கதுரை விடுதிக்குப் படுக் கச் சென்றான். அங்கேயும் சங்க ரன் இல்லை. பெட்டிப் படுக்கை களையும் காணவில்லை. தோட்டக் காரனைக் கேட்டதற்கு, 'அவசர மாக ஊருக்குப் போகிறேன்' என்று சங்கரன் சொல்லிச் சென்றதாகத் தெரிவித்தான்.
'அட அசடே!' என்றது ரங்க துரை உள்ளம்.

ஃ ஃ ஃ

கல்லூரி திறந்தாகி விட்டது. ரங்கதுரை சென்னை சென்றான். நண்பர்கள் சந்தித்தனர். ஒரு வரை ஒருவர் அன்போடு தழுவிக் கொண்டனர். சங்கரன் மிகவும் தீவிரமாக நாத்திகப் பிரசாரத்






"அறுபதுக்கு அறுபது"

தொன்று தொட்டு நடந்து வருவது. மகிழ்வு தருவது. இது எதை உணர்த்துகின்றது ? பல வருட உழைப்பிற்குப்பின் மீண்டும் வாழ்வு புதுமலர்ச்சி காண்பதைத்தானே! ஆழ்ந்த தத்துவம் இருக்கிறது இதில்: ஆசைக்குமுறல் இல்லாத, ஆர்வக் கொந்தளிப்பு இல்லாத. உங்களுடைய கடமைகள் எல்லாம் முடிந்த 'ஆன்றவிந்தடங்கிய' நிலையில் வாழ்வு மலர்வதாகப் பொருள் அதற்கு !

ஆனால் இன்று? அறுபதாண்டு நிறைவு விழா வெறும் சடங்குமட்டுமன்று. ஒரு முதுமைக்கால ஆயுள் இன்சூரன்ஸ் பாலிசியினை நீங்கள் எடுத்திருப்பின் அது அமைதியைக் குறிக்கும் ஒன்றாக, பாதுகாப்பினை அறிவிக்கும் ஒன்றாக இருக்கும்.

வாழ்க பல்லாண்டு மகிழ்வோடு!

இளமைக்கும் முதுமைக்கும் அருமையானது
ஆயுள் இன்சூரன்சே!

EP/LIC/

தில் இறங்கி விட்டதை அறிந்து ரங்கதுரை வருந்தினான்.

ஒரு மாதத்திற்குப் பிறகு ஒரு நாள். ரங்கதுரைக்கு அவன் தகப்பனாரிடமிருந்து கடிதம் வந்திருந்தது. அதை அவன் படித்துக் கொண்டிருந்தபோது சங்கரன் அவன் அறைக்கு வந்தான்.

‘கடிதம் எங்கிருந்து? மிகவும் ஆழ்ந்து படிக்கிறாயே?’

‘என் தகப்பனார் எழுதியிருக்கிறார். மணியகாரர் மருமகளுக்குப் பேச வந்து விட்டதாம்! ஆச்சரியம் என்றால் இதுதான் ஆச்சரியம்!’

‘அட...உங்கள் ஊர் மாரியம்மன் சக்தியுள்ள தெய்வந்தான் அப்பா!... உம்... இன்னும் என்ன எழுதியிருக்கிறார்?’



‘கோமதிக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறதாம்.’

‘உம்; சாமியாவது, பூதமாவது! நினைப்பது ஒன்று, நடப்பது...’

‘இப்போது நீ என்னதான் சொல்கிறாய்? கடவுள் உண்டா இல்லையா?’

‘கடவுளாவது, கடலைக் காயாவது! எல்லாம் புரளி!’

‘உன்னை விசாரித்து எழுதியிருக்கிறார் என் தந்தை. இந்தா’

‘உன் கடிதத்தை நான் ஏன் பார்க்கவேணும்? வேண்டாம்.’

‘நமக்குள் என்ன அப்பா?... இந்தா; படித்துப் பார்.’

கடிதத்தைப் பலவந்தமாக அவன் கையில் திணித்தான் ரங்கதுரை.

‘...உன் நண்பன் சங்கரனுக்கு இந்த விவரம் கூறு. கோமதியும் அவனை விரும்புவதாக ஜாடையில் அறிந்து உன் அம்மா பேசிப் பார்த்தாளாம். விருப்பந்தானும். உன் நண்பனின் கருத்தை அறிந்து எழுதினால் அடுத்த மாதமே திருமணத்தை நடத்தி விடலாம்’

‘டேய் பழி! என்னை ஒரு விநாடியில் கலங்க வைத்துவிட்டாயே!’ என்று ரங்கதுரையின் முதுகில் தட்டினான் சங்கரன்.

‘அவளுக்குப் பேசும் சக்தி இல்லை என்றதும் நீதான் உளறி அடித்துக் கொண்டு ஓடி வந்து விட்டாயே!’

‘நான் அதற்காக ஓடி வரவில்லையடா. ‘பெண்ணுக்காகக் கொள்கையில் மாறினாய். ஏமாந்தாய்’ என்று நீ இடித்துரைப்பாயே என்றுதான் ஓடி வந்தேன். உடனே உன் அப்பாவுக்குப் பதில் எழுது.’

‘உனக்குச் சம்மதம் என்று தானே!... ஆனால்... கடவுள்?’

‘அதெல்லாம் சும்மா; கட்சிக்காக, பேருக்காக. கடவுள் உண்டு. உண்டு, உண்டு! தயவு செய்து உடனே பதில் எழுது!’

‘போடா பச்சோந்தி! உன்னைப் போல் பத்துப் பேர் இருந்தால் எந்தக் கட்சியும் நிலைக்காது; எந்தக் கொள்கையும் நிலைக்காது!’ என்ற ரங்கதுரை உடனேயே தன் தந்தைக்குக் கடிதம் எழுதலானான்; சங்கரன் இன்ப நினைவிலே முழுகிப் போனான்.





# குடும்ப பாரதம்

எஸ். பெருமாள்

‘என்ன மாமி? சௌக்கியமா? குழந்தைகளெல்லாம் சௌக்கியம் தானே?’

‘ஏதோ இருக்கேண்டியம்மா...பிரசவம் ஆனதிலேருந்தே உடம்புக்கு ஒண்ணு மாத்தி ஒண்ணுதான். மூணு மாசம் தானேடி ஆறது? இத்தனை நாளா ஆகாரம் வேறே ஒண்ணுமில்லே. வெறும் பால்தான். ஏதோ புண்ணியத்துக்கு நம்மை வச்சுக் காப்பாத்தறவாளுக்கு நாம தொந்தரவு கொடுக்கறதுக்கும் மனசாகல்லே. என்ன செய்யறது? வேற ஒண்ணும் சாப்பிடவும் முடியல்லே. நமக்கு வேணுங்கறதை வெளியிலே போய்ச்சாப்பிடலாம்னுக்கூட ஒடம்புக்கு ஆகலே. அவா தர்ற ஆகாரமோ வாய்க்குப் போதல்லே. இத்தனை நாளான்னு ஆம் நான் மட்டும்தான். இப்போ என்னோட மூணு கொழந்தைகள் வேறே. நான் பால் சாப்பிட்டாக்கூட, மூணுக்கும் போயிடறது. மூத்த பையன்... சொல்லிமுடியாது. ரெண்டாவது பொண்ணு...அவ ஒண்ணும் அடம் பிடிக்கறதில்லே. மூணாவதும் பையன் தான்...அவன் சதா விளையாட்டுத்தான். அப்புறம்...இதைச் சொல்ல மறந்துட்டேனே...அவா அப்பா இன்னும் வந்து குழந்தைகள் மொகத்தைப் பார்க்கல்லே. இத்தனைக்கும் எங்க வீட்டிலேயிருந்து பத்தாவது வீட்டிலேதான் இருக்கார் அவர். அவராத்தான் வந்து பார்க்கல்லே. நான்தான் போய்க் கூப்பிட்டேன். ரெண்டு மாசத்துக்கு முன்னாடி வந்தார். எங்க வீட்டிலே இருக்காரே பெரியவர், அவர்தான், ‘எங்களவரை’ வீட்டுக்குள்ளே வரப்படாதுன்னுட்டார். பாவம்! மனசொடிஞ்சுப் போனவர்தான். நானும் கொழந்தைகளைக்கொண்டு காண்பிக்கலாம்னா வழியில்லே. அந்த வீட்டுப் பெரியவரோடே குழந்தைகள், என் குழந்தைகளைச் சுத்திண்டே இருக்கிறதுகள். வெளியிலே எடுத்துண்டே வர முடியறதில்லே. பாலும் பழமுமா என்ன தான் அவர்கள் கொடுத்தாலும் நமக்கு மனசே ஆகல்லே. எங்கே வெளியிலே போனாலும் என்னைத் தனியா விட்டுட்டுக்கூடப் போயிடறா. என்னண்டை அவ்வளவு நம்பிக்கை அவர்களுக்கு. அவர்களுக்குத் தெரியாம என் ‘அவரை’ அழைச்சிண்டு வரதுக்கும் பிடிக்கல்லே. அவர்களுக்குத் துரோகம் பண்றதுன்னு...அப்புறம் நாம் என்ன ஜன்மம் எடுத்தென்ன? ஐயய்யோ... நாழியாயிட்டுதேடிம்மா... என் குழந்தைகள் கத்தஆரம்பிச்சிடும்.. அந்தாத்துப் பெரியவர், ‘இந்தப் பெரிய பூனை எங்கே தொலைஞ்சுது...இந்தப் பூனைக்குட்டிகளெல்லாம் அலறிச் சாகறதுகளேன்னு சத்தம் போடுவார். நான் வரட்டுமா?’



158452
600 008


மர்ம உலகம்
கதைச்சித்திரம்: 10
மறுபடி கண் விழித்துப் பார்த்த போது நான் கூடாரத்தில் இருந்தேன்! சுற்றிலும் சில ஆட்கள் நின்று கொண்டிருந்தார்கள்.
நான் எப்படி இங்கு வந்தேன்?
படகில் சென்று கொண்டிருந்த எங்களை நீங்கள் உயிர் ஊசலாடும் நிலையில் கூப்பிட்டீர்கள்
ங்குமுக வாசலை நோக்கி ஓடும் பொழுதே நினைவு இழந்து வந்தேன்.
அருகே வந்து பார்த்ததும் அதற்குள் நாங்கள் நினைவு இழந்து கடலில் மூழ்கிக் கொண்டிருந்தீர்கள்.
நாங்கள் எல்லோரும் சேர்ந்து உங்களைப் படகில் ஏற்றி சிகிச்சை செய்து மூர்ச்சை தெளிவித்தோம். ஜாக்கிரதையாகக் கூடாரத்தில் கொண்டு வந்து சேர்த்தோம். உங்களுடன் வந்த எல்லோரும் மாயமாய் மறைந்து விட்டார்கள். இனி இங்கிருப்பது உங்களுக்கும் ஆபத்து. உடனே கப்பல் ஏறி உங்கள் நாட்டிற்குப் போய் விடுங்கள்!


இது தான் நடந்த கதை சேகர்! அப்பாவைக் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கையில் தான் நான் இன்னும் உயிரோடிருக்கிறேன்!
ராணி சொன்ன வரலாற்றைச் சுத்தக் கட்டுக்கதை என்றே எண்ணினான் சேகர்.
ராணிக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது! அவள் அறியாமல் அந்த பைல்களைப் பார்க்க வேண்டும்!
நினைத்தபடி ராணிக்குத் தெரியாமல் பைல்களை எடுத்து மறைத்துக் கொண்டான் சேகர்.
நீ முதலில் ஓய்வு எடுத்துக் கொண்டு தூங்கு. பிறகு பேசிக் கொள்ளலாம்
பைல்களைப் படித்தவாறு சேகர் தூக்கத்தில் ஆழ்ந்தான். கண் விழித்தபோது பின் இரவு நேரம்
இரத்த நிறத்தில் கதிரவன் உதயமானான்!
சேகர் அலறியடித்துக் கொண்டு ராணி அறைக்கு ஓடிப்போய் பார்த்தான். அங்கே ... ராணி ஒடுங்கியவாறு திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தாள்.
தொடரும்

# சந்தாதாரர்களுக்கு

## அறிவிப்பு

★

சுதேசமித்திரன்

# தீபாவளி மலர்

## 1961

## விலை ரூ. 3-00

மித்திரன் நேயர்களுக்கென்றே வழக்கம் போல் இவ்வாண்டும் தீபாவளி மலர் வெளியிடப்படும். பிரபல எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகள், நாடகங்கள், பல வர்ணப் படங்கள், ஆர்ட் காகிதத்தில் அழகிய மூவர்ண ஓவியங்கள், புகைப் படங்கள் முதலியவற்றுடன் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டுவரும் இம் மலரின் விலை ரூ. 3—00 தான். ஆகவே மலர் விரும்புவோர் 25-10-61க்குள் முன் பணம் செலுத்தி காப்பிகளுக்கு ஆர்டர் செய்யக் கோருகிறோம்.

**மலரின் விலை சந்தாத் தொகையில் ஈடு செய்யப்படமாட்டாது.**

மேலும், வழக்கம்போல் அவ்வாரத்திய இதழும் வெளியிடப்படும்.

**மானேஜர்.**



# நல்வாழ்வு போகுமடி

## 7. சந்திப்பு

பெண் வீட்டில் பெரியவர்கள் இல்லை யென்ற காரணத்தினால் திருமணம் மணமகன் இல்லத்திலேயே நடப்பதென முடிவாகியது. கல்யாண வேலைகள் தலைக்கு மேல் கிடந்தாலும் பிள்ளையின் தாயார் பார்வதம் இரண்டு நாளைக்கொருமுறை பெண்ணை வந்து பார்த்துப் போகத் தவற மாட்டாள். ஒவ்வொருமுறை வரும்போதும் கிராமத்திலிருந்து யாராவது இரண்டொரு உறவுக்காரர்களையும் அழைத்து வரத் தவற மாட்டாள்.

'இது என் சின்ன மாமியார்' என்று ஒரு அம்மையாரை அழைத்துக்கொண்டு வந்து நிற்பாள் ஒரு சமயம். பின்னொரு சமயம் 'இதுதான் என் பிள்ளையின் பெரிய பாட்டியார். இது எனது நடு அண்ணனின் சம்சாரம்' என்று ஒவ்வொருவராக அழைத்து வந்து காண்பிக்கும் போது படித்த பெண்ணை ராதாவிற்கு என்னவோ போலிருக்கும். சந்தையில்



கோமதி சுப்பிரமணியம்

ஆடு மாடு பார்க்க வருகிறாப் போலல்லவா ஆயிரம் முறை வருகிறார்கள் என்று மனத்திற்குள் சலித்துக்கொள்வாள். ஆனாலும் வந்தவர்களை உபசரித்து மனம் கோணாமல் நடந்து கௌரவமாக அனுப்பி வைப்பாள்.

இப்படி ஒரு வாரத்திற்குள்ளாகப் பலமுறை நடந்துவிட்டது. நாலாவது முறையாகப் பர்வதம் நாலைந்து பெண்களை அழைத்து வந்து காண்பித்துச் சென்ற போது ராதாவின் பொறுமை எல்லை மீறிவிடும் போலிருந்தது.

வந்தவர்கள் சென்ற பின்பு அண்ணனிடம் 'ஏன் அண்ணா! என்னை ஒருமுறை தாழங்குடி கிராமத்திற்கு அழைத்துப் போய் வந்துவிடேன்' என்று கூறவும் திடுக்கிட்டு விட்டான்.

'ஏனம்மா; அங்கே ஏதாவது உன் ஆராய்ச்சி பாக்கி இருக்கிறதோ...'

'அதெல்லாம் ஒன்றுமில்லை அண்ணா. என் மாமியாரின் சிரமத்தைச் சற்றுக் குறைக்கலாமென்றுதான். பாவம்; கிராமத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவராக அழைத்து வந்து காண்பிப்பதை விட நான் ஒருத்தி அங்கே போய் வந்துவிடலாமல்லவா?'

'அடபாவிப் பெண்ணே. இதிலிருந்தே அளவிட்டுக் கொள்ளலாமே உன் மாமியாருக்கு உன் மீது எத்தனை அன்பு என்பதை. உம்; அவருக்கு முன்னதாக நீயே கிராமத்திற்குப் போகத் துடிக்கிறாயே. இன்னும் ஒரு வாரம்...ஒரே வாரம் மாமியும் மருமகளும் பொறுத்துக் கொள்ளுங்கள்' என்று குறும்பாகப் பரிகசித்தான் சேது.

'போ...அண்ணா' என்று முகத்தைச் சிடுக்கிக் கொள்வதைத் தவிர அவளால் வேறு என்ன சொல்ல முடியும்.

சேதுவின் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிரண்டையும் சின்னஞ்சிறு வயதில் அனாதையாக விட்டுச் செல்ல நேர்ந்த குறையைத் தவிர அந்தக் குழந்தைகளின் வாழ்க்கைக்கு வேண்டிய வசதியை நிலமாகவும் வீடாகவும் விட்டுச் சென்றிருந்தார்கள். அவர்களை எடுத்து வளர்த்த பாட்டி குழந்தைகள் நலனில் கண்ணுங் கருத்துமாய் இருந்து வளர்த்தது போலவே, ராதாவின் தாயார் தன்னிடம் ஒப்படைத்திருந்த நகைகளைத் தன் உயிரினும் மேலாகக் காத்து வந்தாள். தனக்குச் சாவு நெருங்கிவிட்டதை உணர்ந்த தருணம், மூத்தவனை சேதுவிடம் அந்த நகைகளின் பொறுப்பைச் சுமத்தி, ராதாவின் கல்யாணத்தை முடித்து வைக்கும் பொறுப்பு உன்வசம் என்றுகூறிச் சென்ற பாட்டியை நினைத்துக் கொண்ட பொழுது நன்றிப் பெருக்கால் சேதுவின் நெஞ்சு நிறைந்தது.

அந்த நகைகளையெல்லாம் அப்படி அப்படியே தங்கைக்கென எடுத்துக் கொடுத்துவிட்டான். தன் பங்குக்கென எதுவும் எடுத்துக்கொள்ளாததோடு, தன் உழைப்பிலிருந்து தங்கைக்குத் தன் அன்பளிப்பாக நெக்லஸ் வாங்கி வந்திருந்தான். அவளாக எதுவும் கேட்கவில்லை. அவனாகவே தங்கையின் தங்கநிறக் கழுத்தை அழகுபடுத்த வாங்கிக் கொடுத்தான்.

'பிழைக்கத் தெரியாத பிள்ளை அண்ணா நீ. அடுத்த வீடு போகிறவளுக்கு அத்தனையும் அள்ளிக் கொடுத்துவிட்டு உனக்கென்ன செய்ய உத்தேசம்' என்பாள்.

'அந்தக் கவலை என்னைப் படைத்தவனுக்கு; எனக்கல்ல. என்னுடைய கவலையெல்லாம் என் செல்லத் தங்கச்சியின் கல்யாணம் சிறப்புற நடக்கவேண்டும்; பின்னர் அவள் வாழ்வு சீரும் சிறப்புமாய்த் திகழவேண்டும்; அங்கே அன்பும், அமைதியும் போட்டியிட்டு நிலவவேண்டும். இது ஒன்றுதான் என் ஆசை, என் கனவு, என் லட்சியம்' என்று அடுக்குவான்.

பிள்ளை வீட்டிலும், பெண் வீட்டிலுமாக இரண்டு உறவுமுறை கொண்டாடியதாலோ என்னவோ ராசாத்தியின் பெருமை பிடிபடாததாயிருந்தது. தம்பியும் தாயாரும் கல்யாண சம்பந்தமாக எந்த யோசனையையும் வீட்டுக்குப் பெரியவள் என்பதற்காக ராசாத்தியையும் அவள் கணவனையும் கலந்தே செய்வார்கள்.

சேதுவின் வீட்டிலும் உறவினர் என்று சொல்லிக்கொள்ள வேறு யாருமே இல்லாததால் எந்த யோசனைக்கும் ராசாத்தி அண்ணியையே கலந்துகொள்வான். அவளாகவே இழுத்துப் போட்டுக்கொண்டு செய்கிற உதவிகளும் உண்டு. பெண்ணுக்கு வேண்டிய துணிமணிகள் வாங்குவதும், பாத்திர பண்டங்கள், நகைகள் மாற்றிக் கொடுப்பதும் ராசாத்தியினுடையதே.

கல்யாண ஜவுளிகள் தேர்ந்தெடுக்க சேதுவையும் அழைத்துப்போக வந்திருந்தான் கண்ணப்பன். போகுமுன் தங்கையிடம் என்ன மாதிரியில் புடவை வேண்டும்; கலர் என்னவென்றெல்லாம் கேட்டான். ராதை வெட்கத்தினால் எதுவுமே பேசவில்லை.

'அட நீ வாய்யா. உடையத்தக்காரன் மாப்பிள்ளைபிள்ளையாண்டான்வந்திருக்கான். அவன் பார்த்தெடுப்பான். நீயும் நானும் ஒப்புக்குத்தானே? வா போகலாம்' என்று கையைப் பிடித்திழுத்தான் கண்ணப்பன்.

இதற்குமுன் எத்தனையோ முறை சங்கர் தன் அக்காவின் வீட்டிற்கு வந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது அவன் வந்திருப்பதைக் கேள்விப்பட்டு ராதையின் மனம் குறுகுறுத்தது. அவனைக் காணக் கண்ணும் மனமும் துடித்தன.

அண்ணனை வழியனுப்பிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கச் சென்றாள் ராதை. வழக்கமாகச் செய்யும் அன்றாட வேலைதான். ஆனாலும் இப்பொழுது ஒழுங்காய்ச் செய்ய முடியவில்லை. எடுத்த வேலையை குறித்த நேரத்தில் செய்து முடிப்பதில்லை. எதிலும் தயக்கம், குழப்பம். இன்பதுன்ப நினைவுகள் எப்பொழுதும் அவள் மனத்தைச் சுற்றிக் கொண்டேயிருந்தன. 'தன்னைப் பிரிந்து அண்ணனின் எதிர்காலம் எப்படியெப்படி இருக்குமோ? எங்கெல்லாம் செல்வானோ? மீண்டும் எப்பொழுது காண முடியுமோ?' இது போன்ற நினைவுகள் அவள் மனத்திடைக் குழப்பும். 'இன்னும் நாலு நாள்; அதன் பின்பு அண்ணனுக்குச் சமைத்துக் கொடுப்பவர்கள் யார்? அவன் தேவை அறிந்து செய்து கொடுப்பவர்கள் யார்?'

இதே சிந்தனையில் வெளியே ஆள்வந்து நிற்பதைக் கவனிக்கவில்லை. 'மிஸ்டர் சேது' என்ற குரலைக் கேட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். யாரோ முன் பின் தெரியாத வாலிபன் நின்று கொண்டிருந்தான்.

'நீங்கள் யார்? அண்ணா இல்லையே. வெளியே போயிருக்கிறார். உங்களுக்கு என்ன வேண்டும்?'

'சும்மா பார்த்துப் போக வந்தேன். தாழங்குடியிலிருந்து வருகிறேன்' என்றதும் எங்கிருந்து வந்தது அத்தனை பவ்யம் அவளுக்கு! தலையைச் சற்று உள்ளே இழுத்துக்கொண்டாள்.

'எங்கே போயிருக்கிறாரென்று தெரியுமா?' என்றான் வந்தவன்.

போயிருக்குமிடம் அவளுக்குத் தெரியும். ஆனால் சொல்ல விரும்பவில்லையோ அல்லது வெட்கமோ; என்னவோ தெரியவில்லை, 'தெரியாது; ஆனால் சற்று நேரத்தில் 'திரும்பிவிடுவதாகச் சொன்னார். நீங்கள் சற்றுக் காத்திருந்தால் பார்த்துப் போகலாம்' என்றாள்.

'எனக்குத் தங்க நேரமில்லை. மாப்பிள்ளைப் பையனோடு வந்தேன் ஜவுளி எடுக்க. இவரையும் பார்த்துப் போகலாம் என்று வந்தேன். நான் வருகிறேன்' என்றவன் கிளம்பினான்.

அண்ணாவும் அங்கேதான் போயிருக்கிறார் என்று சொல்ல நினைத்தவள் நிறுத்திக்கொண்டாள். இரண்டெட்டு எடுத்து வைத்தவன் என்ன நினைத்தானோ சற்று நின்று 'கொஞ்சம் தாகத்திற்குத் தருகிறீர்களா?' என்றான்.

குவளையில் தண்ணீரைக் கொண்டு வந்தவள் கீழே வைத்துவிட்டுப் பணிவுடன் திரும்பினாள். பார்த்த கண்கள் பார்த்ததுபோல் நின்றவன் எதுவும் பேசாது தண்ணீரை எடுத்துக் குடித்துவிட்டு 'வருகிறேன்' என்று கூறிப் போய்விட்டான்.



'அண்ணாவிடம் யார் வந்ததாகச் சொல்லவேண்டும்?' தயக்கத்துடன் கேட்டு வைத்தாள்.

'நானே அவரை நேரில் சந்தித்துக்கொள்ளுகிறேன்' என்று கூறிப் போய்விட்டான்.

ஜவுளி மூட்டைகள் ராதையின் பரிசீலனைக்காக வந்தபோது கூடவே ராசாத்தியும் வந்திருந்தாள். பரிசீலனைப் பொறுப்பைத் தான் ஏற்றுக்கொள்ள ராதை சம்மதிக்கவில்லை. 'உங்களுக்குப் பிடித்ததை எடுத்துக்கொள்ளுங்கள். எனக்கு என்ன தெரியும்?' என்றுகூறித் தப்பித்துக்கொண்டாள்.

'சரி, உனக்கு ஒன்றுமே தெரிய வேண்டாம்' என்று கூறியவள் காதருகே வந்து, 'அதுதான் போகட்டும்; சற்றுமுன் வந்தானே என் தம்பி. அவனைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? அவனைப் பிடித்திருக்கிறதா? அதையாவது சொல்லேன்' என்று கிசுகிசுத்தாள். ராதையின் உடம்பு முழுவதும் ஒருமுறை குப்பென்று வியர்த்துக் கொட்டியது.

'அவர்...அ...வ...ர்...' என்று தடுமாறினாள்.

'அவனேதான். இதோ பார்; உன்னை வந்து பார்த்துவிட்டு உன் செண்பகநிற மேனிக்கு இந்த நீலப்புடவைதான் உகந்ததெனத் தேர்ந்தெடுத்துக் கொடுத்திருக்கிறான். உனக்குத் திருப்திதானே...' என்று சரிகை பளபளத்த அந்த நீலப்புடவையை அவள் கையில் கொடுத்தாள். ராதையின் மனம் கையிலிருந்த நீலப்புடவையின் மீதில்லை. சற்றுமுன் வந்து நாடகமாடிச் சென்ற உருவத்தின்மீது பதிந்திருந்தது. தன் மனத்தில் பதிந்த அந்த திவ்ய ரூபத்திற்குத் தன் இதயத்தில் கோவில் எழுப்பி மானஸ பூஜை செய்ய முனைந்துவிட்ட அவள் கண்களுக்கு எதிரேயிருந்த நீலப்புடவையும் அதைக் கொடுத்த ராசாத்தியும்கூட ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை.

'கற்பனை பலமா இருக்கோ' என்று குறும்பாகக் கூறினாள் ராசாத்தி. நிற்கநிலை கொள்ளாமல் உள்ளே ஓடிவிட்டாள் ராதை.



## 8. பூரிப்பு

உள்ளமெல்லாம் உவகை பொங்க மணப்பந்தலில் அங்குமிங்கும் ஓடியாடினான் சேது. தன் வாழ்நாளிலேயே செய்ய வேண்டிய முக்கிய கடமையொன்றைச் செய்து முடித்துவிட்ட பெருமிதம் அவன் விழிகளில் தேங்கி நின்றது.

மதனும் ரதியும்போல் காட்சியளித்த மணமக்களைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போனாள் பிள்ளையைப் பெற்றவள். ஆசீர்வாதத்திற்காகத் தன் காலில் விழுந்த மணப்பெண்ணை உச்சி முதல் உள்ளங்கால்வரை உற்று நோக்கினாள். அந்த ஒருகணத்தில் மகனின் முறைப் பெண்கள் அறுவரையும் கற்பனையில் அருகருகாக நிறுத்திப் பார்த்தது அந்தத் தாயின் மனம். தன் கண்ணெதிரே காணும் காட்சிக்கொப்பாகக் கற்பனைக் காட்சி எதுவுமே ஈடுகொடுக்க முடியாததாகக் கண்டபோது அவள் நெஞ்சம் பேருவகை பெற்றது. அழகும் அடக்கமும் நிறைந்த அந்தப் பெண் அன்புடையவளாகவும் இருப்பாளானால் தானும் தன் மகனும் செய்த தவம் வேறெவருமே செய்திருக்க முடியாதென்றெல்லாம் எண்ணினாள்.

வாத்தியங்கள் முழங்கின; மாங்கல்யம் கழுத்தில் ஏறியது. ராதையின் கழுத்தில் மூன்று முடிச்சுகள் விழுந்தபோது சேதுவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. பெரியதோர் பொறுப்பைச் செய்து முடித்த நிறைவு பொங்கியது.

உள்ளத்தில் பகையிருந்தாலும் உதட்டளவில் உறவு கொண்டாடிக்கொண்டு தாழங்குடி கிராமமே திரண்டு வந்திருந்தது திருமண விழாவிற்கு. ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக்

கொண்ட மாமா அத்தைமார் குடும்பங்களும் வந்து கலந்திருந்தன. ஒருவேளை ஏகமாய் அனைவரும் தோற்றதில் அவர்களுள் எழுந்த ஒற்றுமையோ என்னவோ? எதுவாயிருந்தால் என்ன? நல்ல காரியத்தில் விட்டுக் கொடுக்காமல் நடந்து கொள்வது கிராமத்துப் பண்பாட்டின் சிறப்பாகத்தான் கொள்ள வேண்டும். அவர்கள் ஒவ்வொரு பேச்சிலும் பார்வையிலும் அடிபட்டதென்ன? மனத்தில் எழுந்த எண்ணங்கள் யாவை? இதை அறிந்துகொள்ள முடியாதவகையிலேயே ஒவ்வொருவரும் நடந்துகொண்டனர்.

மணமகள் தங்கள் கிராமத்தின் எல்லைக்குஅப்பால் இருந்து வந்தவள் என்பதையே மறந்து ஒவ்வொருவரும் என் மகள், என் மருமகள் என்று உறவு கொண்டாடிக் கொண்டு ராதையைச் சுற்றிச் சுற்றி வருவதைக்கண்டு சேதுவின் மனம் பெருமிதம் கொண்டது. தாய் இல்லாத பெண் என்ற குறையே தோன்றாதபடி ஒவ்வொருவரும் அன்பும் ஆசையுமாக மணப்பெண்ணை அலங்கரிப்பதுவும் சீராட்டுவதும் கண்டு உள்ளம் பூரித்துப் போனான். இத்தகைய பெருந்தன்மை நிறைந்த மக்களிடையே வாழப்போகும் தங்கையின் அதிர்ஷ்டத்தை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டான். அத்தனையும் சம்பிரதாயப் போர்வைக்குள்ளே பொதிந்த வேஷம் என்பதை அவன் தெரிந்து கொள்ளவில்லை.

மாங்கல்யதாரணம் முடிந்து பெண்ணையும் பிள்ளையையும் தனித்தனியாக அழைத்துச் சென்றதின் பின்பு தாம்பூலம் வழங்கல் நடந்தது. பெண் கொடுத்தவன் என்ற சம்பிரதாயம் பேசிக் கால்மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கவில்லை சேது. அவனும் தாம்பூலத் தட்டை எடுத்துக்கொண்டு தங்கையின் நல்வாழ்வுக்கு ஆசீர்வதித்த அத்தனை பெரியோர்களின் மனமும் இனிக்கக் கற்கண்டும் தாம்பூலமும் வழங்கினான். சந்தனத்தை அள்ளி அள்ளி இறைத்துக் குழந்தைபோல் தன் உள்ளக் களிப்பின் எதிரொலியை எங்கும் வாரியிறைத்தான்.

சந்தியாபுரத்திலிருந்து தொழிலாளிகள், முதலாளிகள் அத்தனைபேருமே சேதுவின் அழைப்பிற்கிணங்கி, வந்து கௌரவித்தனர். நலங்கு நடந்தபோது சேது அடித்த கொட்டத்தில் மணப்பந்தலே கலகலப்படைந்தது. அத்தனையும் அவன் மனத்தில் பொங்கும் ஆனந்த அலைகளின் ஆர்ப்பரிப்பு.

இரவு ஊர்வலம் புறப்பட்டது. ரதத்தைப்போல் பூவால் ஜோடித்த காரில் பிள்ளையும் பெண்ணும் பொற்சிலைபோல் அமர்ந்திருந்தனர். ஊர்வலத்தில் மணமக்கள் அருகில் அமர்ந்து செல்ல அடிபிடி போட்டு இடம் பிடித்துக்கொண்ட குழந்தைகள் வெற்றியின் பெருமிதமாய் அமர்ந்திருந்தனர். நகரத்திலிருந்து வரவழைக்கப்பட்ட நாதசுர வித்துவான் கானமழையைப் பொழிந்து முன்னால் சென்று கொண்டிருந்தார். கௌரவ மனிதர்கள் முன்னால் செல்ல அவர்களுக்கும் முன்னால் பாண்டு வாத்தியத்தின் முழக்கம் சென்று கொண்டிருந்தது. புஷ்ப ரதத்தின் இருபுறமும் கியாஸ்லைட்டுகள் மணமக்களின் உருவத்திற்கு ஒளி கொடுத்துக் கொண்டிருந்தன.

கண்ணப்பனும் சேதுவும் பன்னீர்செம்பும் சந்தனமும் ஏந்தி





அருகருகாகச் சென்றுகொண்டிருந்தார்கள்.

கிராமத்தின் வழக்கத்தையொட்டிப் பந்துக்கள் வீடுகளில் பெண்ணையும் பிள்ளையையும் இறக்கிப் பாலும் பழமும் கொடுத்து மரியாதை செய்து அனுப்பினார்கள். சேதுவிற்கு இது வேடிக்கையான அனுபவமாக இருந்தது. அடிக்கடி காரினின்றும் இறங்கி ஏறிச் செல்வதை விடப் பெண்ணையும் பிள்ளையையும் நடத்தியே ஊர்வலமாக அழைத்துச் சென்று விடலாமே என்று வேடிக்கையாகப் பேசினான்.

'இன்றைக்கு ஒருநாள் மணமக்களைத் தங்கள் இஷ்டத்திற்கு ஆட்டிவைக்கும் உரிமை கிராமத்தவர்களுக்கு உண்டு. இதில் தலையிட உனக்கு உரிமை கிடையாது தெரியுமா?'

இப்படி வேடிக்கையும் விளையாட்டுமாய் ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. சேதுவின் மனத்தில் விநோதமான ஒரு ஆசை. சங்கரனின் வாழ்க்கையில் குறுக்கிட்ட நவநீதம் என்னும் பெண் யார்? அவள் வீடு எது? இதை அறிந்துகொள்ள அவன் மனம் துடித்தது.

ஊர்வலம் தங்கித் தங்கிச் சென்ற ஒவ்வொரு வீட்டையும் பற்றி அறிமுகம் செய்து வந்தான் கண்ணப்பன்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. ஊர்வலத்தின் ஆரம்பத்தில் உற்சாகமாகப் புறப்பட்ட அனைவருமே இப்பொழுது நித்திராதேவியின் அன்பணைப்புக்கு சிறிது சிறிதாக ஆளாகி வந்தார்கள். காரை ஓட்டிச் செல்பவனுக்குக்கூட சற்றுக் கிறக்கம் கண்டது. மணமக்கள் இடையிடையே தூக்கத்தால் ஆடிவிழத் தலைப்பட்டனர். அவ்வப்போது பக்கத்திலிருப்பவர்கள் பூப்பந்தில் பன்னீர் நனைத்து மணமக்கள் கையில் மாற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தனர். அதிகத் தூக்கம் கண்ணைச் சுழற்றுதிருக்க பன்னீர்ப்பூப்பந்தைக் கண்ணில் ஒற்றி ஒற்றி தூக்கத்தை விரட்டிக்கொண்டிருந்தார்கள்.

வீடு நெருங்கிக் கொண்டிருந்தது. இதுவரை அடக்கிவந்த தன் ஆவலைக் கேட்டே விடுவதென்று துணிந்தேவிட்டான். 'ஊர்வலம் அந்தப் பெண் நவநீதத்தின்

வீட்டிற்குப் போகவில்லையா?' என்று கேட்டே விட்டான்.

'போகமுடியாது. அவர்கள் இங்கில்லை.'

'ஏன்...இந்தக் கல்யாணத்தில் கலந்துகொள்ள மனமில்லாமல் எங்காவது மறைந்து கொண்டார்களா?'

'அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அந்தப் பெண் நவநீதம் 'அத்தான் வேறு பெண்ணை மணந்து கொள்ளுகிறான்' என்ற அதிர்ச்சியில் பைத்தியமாகிவிட்டாள்.'

'என்ன?'

'ஆம்; பைத்தியமான தன் மகளை இங்கே வைத்துக்கொண்டிருந்தால் ஏதாவது குழப்பம் நிகழ்ந்துவிடுமென்று பயந்து அடுத்த தெருவிலுள்ள மற்றொரு உறவினர் வீட்டில் கொண்டு வைத்திருக்கிறார்கள். இதுதான் நவநீதத்தின் வீடு' என்று சுட்டிக் காட்டினான். கல்யாண வீட்டை அடுத்திருந்த அந்த வீடு பூட்டிக்கிடந்தது.

சேதுவின் மனம் வேதனையால் நிறைந்தது. சற்றுமுன் பூரணச் சந்திரனின் பொலிவை உமிழ்ந்த முகம் இப்பொழுது கவலையென்னும் கருமேகம் சூழ இருள் மூடியது. அநியாயமாக ஒரு பெண்ணின் வாழ்விற்குத் தானும் தங்கையும் எமனாய் முளைத்துவிட்டோமா என்ற எண்ணம் நெஞ்சைச் சுழற்றியது. இருளடர்ந்திருந்த அவன் முகத்தைக்கண்டு துணுக்குற்ற கண்ணப்பன் அவனிடம் இந்தச் சேதியைச் சொல்லியே இருக்கக்கூடாதோ என்று நினைத்தான்.

'உலகத்தில் இதுமாதிரி சம்பவங்கள் நடப்பது சகஜம் சேது. எல்லாம் அவரவர் விதிப்படி நடக்கும். இதற்காக நாம் குழம்பிக்கொண்டிருக்கமுடியுமா? நாம் நமது வழியில் செல்வோம் வா' என்று அவன் கையைப்பற்றி இழுத்துச் சென்றான்.

அப்போதைக்கு ஒன்றும் நினைக்காதவனைப்போல் நடந்துகொண்டான். ஆனால் அவன் மனமோ, கண்ணப்பன் சொன்னதிலுள்ள பயங்கரத்தை எண்ணியெண்ணிச் செத்துக்கொண்டிருந்தது.

## 9. வேதனை

சுற்றிலும் வயலும் வரப்பும் நிறைந்த தாழங்குடி கிராமம் பார்ப்பதற்குக் குளுமையும் இனிமையும் அளித்தது. சமுத்திரமோ என்று தோன்றும் அகண்ட ஏரிநீரில் மாலை நேரத்து இளந்தென்றல் மோதி மெல்லிய அலைகள் எழும்பி நின்ற காட்சியை ரசித்து நின்றான் சேது.

தாழங்குடியில் தங்கியிருந்த நான்கு நாட்களும் மாலை நேரத்தில் ஏரிக்கரையின் இயற்கை அழகைப் பருக வந்துவிடுவான்.

மறுநாள் சந்தியாபுரம் திரும்புவதாக இருந்தார்கள். வீட்டில் வேலைகள் இருந்ததால் கண்ணப்பன் அவனோடு ஏரிக்கரை வரவில்லை. மாலைநேரத்தின் அமைதியிலே தனிமையில் அமர்ந்து தங்கையின் வருங்கால வாழ்வின் சிந்தனையிலே தன்னை மறந்து லயித்திருந்தான்.

ஏரியின் உட்புறம் பெண்களின் பேச்சுக் குரல் கேட்டது.

'ம்...என்ன இருந்தாலும் பர்வதம் அதிர்ஷ்டக்காரிதான். கிராமத்திலே வேலை பார்க்கும் பிள்ளைக்கு நகரத்துப் பெண் அதுவும் சீர்செனத்தியோடு வந்த யோகத்தைப் பாரேன்...' என்றாள் ஒரு பெண்.

இதற்குப் பதில் அளிப்பதைப் போல் மற்றொரு பெண் சொன்னாள்.

'ஆமாம் குழந்தையக்கா. நானும் அதைத்தான் நினைத்தேன். நாமெல்லாம் பர்வதத்தக்காளின் அதிர்ஷ்டத்தைக்கண்டு சந்தோஷப்படுகிறோம். ஆனால் அன்றைக்கு ரங்கம்மா என்ன சொன்னாள் தெரியுமா?'

'பொறாமை புடிச்சது. அவ பொண்ணைக் கட்டிக்கொள்ளவில்லையென்ற காய்மகாரம். இந்தக் கெட்ட மனசு இருப்பதாலேதானே இவபொண்ணு பைத்தியம் புடிச்சு அலையுது.'

ஊரார் பெற்ற பெண்ணை எத்தனை சுலபமாய் ஏசுகிறது இந்த நாக்கு என்று துணுக்குற்றது சேதுவின் மனம். மேலும் தொடர்ந்து அவர்கள் பேச்சைக் கேட்க விரும்பாவிட்டாலும் பேச்சு தானாகக் காதில் விழுந்தது.

'பெண்ணுக்குப் பெத்தவளா, பொறந்தவளா அண்ணன் தம்பி அக்கா தங்கை உற்றார் உறவு நாதி ஏதும் உண்டா? எங்கேயோ கிடந்த அனாதைபோல அண்ணன் ஒருத்தன்...! இப்படி எத்தனை ஆங்காரமாகச் சொன்னாள் தெரியுமா?' என்று ரங்கம்மாவின் மீதுள்ள ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டாள் ஏரிக்கரைப் பெண்.

இதைக் கேட்டபோது சேதுவின் உள்ளமெல்லாம் நடுங்கியது. அவன் செல்வமாய் வளர்த்த தங்கை எத்தகைய பயங்கரத்தின் நடுவில் சிக்கிக்கொண்டு விட்டாள் என்பதை நினைத்துக் கலங்கினான்.

நடந்தது நடந்துவிட்டது. இனி அவரவர் விதிப்பயன் என்று விதியின்மீது பழிபோடு




வதைத் தவிர வேறொன்றும் செய்யும் நிலையிலில்லை.

பேச்சின் அதிர்ச்சியிலே பின்னால் வந்து நின்ற கண்ணப்பனைக் கவனிக்கவில்லை சேது.

'இனிது இனிது ஏகாந்தம் இனிது என்று இங்கே தனிமையில் என்ன செய்து கொண்டிருக்கிறாய் சேது? உனக்காக வீட்டில் எத்தனை பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள் தெரியுமா?'

ஏகாந்தம் இனிமையைத் தரவில்லை. இதயத்தைச் சுட்டுப் பொசுக்கிக்கொண்டிருக்கிறதென்பதை கண்ணப்பன் எங்கே கண்டான்.

மௌனமாக எழுந்து நடந்தனர் இருவரும்.

வீட்டின் முன்முகப்பில் பலர் கூட்டமாய் இருப்பதைக்கண்டு என்னவோ ஏதோ என்று திடுக்கிட்டுவிட்டான் சேது.

'என்னப்பா? என்ன நடந்தது? ஏன் இத்தனை கூட்டம்?' என்று பதறிப் போய்க் கேட்டான்.

'ஒன்றும் நடக்கவில்லை. நீ வெளியே புறப்படும்போதே உன்னிடம் சொல்லி அனுப்பியதை

மறந்துவிட்டாயா. நாளை நாம் சந்தியாபுரம் திரும்புவதால் இன்றைக்குக் கோவிலுக்குச் சென்று திரும்பிவிட மாமி நாள் பார்த்திருக்கிறார்கள். எல்லோருமே உனக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறார்கள்' என்று சொன்னபோதுதான் அவன் மறதியை உணர முடிந்தது. வீட்டினின்றும் புறப்படும்பொழுதே கண்ணப்பன் சொன்னதை மறந்துவிட்டத் தன் செயலுக்காகத் தலை குனிந்தான்.

முதன் முதலில் தம்பதிகளை கோவிலுக்கு அழைத்துச் செல்வதற்குக்கூட கிராமமே கூடி வந்திருந்தது.

சங்கர் வயதில் சிறியவனாக இருந்தாலும் கிராம முன்சீப்பு என்ற மரியாதை கொடுக்கத் தவறவில்லை கிராம மக்கள்.

முன்னேற்பாடாகவே சொல்லி அனுப்பியிருந்ததால் அன்று கோவிலில் விசேஷ அலங்காரம். சின்னஞ் சிறிய கோவில்தான். ஆனாலும் அழகாக அடக்கமாகச் சின்னஞ்சிறிய குங்குமச்சிமிழ் போல் அமைந்திருந்தது.

அவர்கள் வாசற்படியில் வரும்போதே மேளதாளத்துடன் எதிர்கொண்டு வரவேற்றார் கோவில் தர்மகர்த்தா. பின்னர் வழக்கமான அபிஷேக ஆராதனைகள் முடித்து மாலை மரியாதை செய்து பிரசாதம் வழங்கினர்.

பூஜைக்குப் பின்னால், வந்திருந்தவர்கள் வரிசையாக முன் மண்டபத்தில் அமர்ந்திருந்தனர். இலை போடுவதைக் கண்டு அதிசயித்தான் சேது.

'சாப்பாடு இன்றைக்கு எல்லோருக்குமே இங்கேயேதானா?' என்றபோது கண்ணப்பன் சிரித்துக்கொண்டான்.

'சாப்பாடு இல்லை, பிரசாதம்தான்' என்று சொன்னான் கண்ணப்பன்.

ஆனால் படைக்கப்பட்ட பிரசாதத்தைச் சாப்பிடவே மூன்று நான்கு வயிறு வேண்டும். சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, வெண்பொங்கல், மிளகு சம்பா இத்தனையும் பரிமாறினார்கள். மிளகு வடை, பழ வகைகள் வழங்கப்பட்டது. வேண்டியவர்கள் வேண்டியமட்டும் வாங்கிச் சாப்பிடலாம் என்றார்கள்.

சேதுவிற்கு இனிமேல் வயிற்றில் இடம் இல்லை. போதுமென்று எழுந்துவிட்டான். கிராமத்தார்கள் மனம் குளிரக் குளிரச் சாப்பிடும் அழகைக் காணுவதே அவனுக்கு ஆனந்தமாயிருந்தது. தங்கையின் பக்கம் திரும்பினான். அத்தனைக் கூட்டத்திலும் வைத்த கண் வாங்காமல் தன் கணவன் சாப்பிடும் அழகைக் கண்டு களித்துக்கொண்டிருப்பதைக் கண்டு உள்ளுக்குள்ளேயே சிரித்துக்கொண்டான்.

மாலையும் கழுத்துமாய் வீடு திரும்பும் தம்பதிகளைக் கண்டு பூரித்து நின்றது அவன் மனம்.

மணமக்கள் பர்வதத்தம்மா காலில் விழுந்து வணங்கியபோது சேதுவும் தன் தாயை வணங்குவதுபோன்ற எண்ணத்துடன் அவளை வணங்கி எழுந்தான்.

'அடுத்த முறை கோவிலுக்குச் செல்லும்போது சேதுத் தம்பி தம்பதி சமேதராய் போக வேண்டும்' என்று பெரியவர் ஆசீர்வதித்தபோது கூடியிருந்தவர்கள் ஆனந்த ஆரவாரம் செய்தார்கள்.

மறு தினம் தங்கையிடம் பிரியா விடை பெற்றுப் பிரிந்து சென்றான் சேது. மனமெல்லாம் தங்கையைச் சுற்றி நின்றது. உருவம் சந்தியாபுரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

[அடுத்த இதழில் முடியும்]




கருணாகரன்

இரவின் அமைதியான சூழ்நிலையிலே, வானத்திலே ஒளி பரப்பி ஏகபோகமாக ஆட்சி புரியும் வெண்ணிலவு. அந்த நிலவுடன் நீலவானிலே ஆடிக்களிக்கும் முகிற்கூட்டம். இந்தக் களியாட்டத்தை வேடிக்கைப் பார்த்த வண்ணம் வீற்றிருக்கும் தாரகைக் கூட்டங்கள். இயற்கையை, மனிதன் பார்த்து ஆனந்தம் கொள்ளவேண்டும் என்ற ஒரே நினைப்பில்தான் அவனைப் படைத்தாரோ ஆண்டவன் என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் ஒளியற்ற ஊனக்கண்களைப் படைத்தவருக்கோ உலகமே சூனியம். இன்பதுன்பங்களை ஒன்றெனக்கருதும் ஞானியர் நிலைபோல், இருளும் ஒளியும் அவர்களுக்கு ஒன்றுதான்.

அவள்...அவள் கட்டிலின் விளிம்பில் சாய்ந்தவண்ணம் அமர்ந்திருந்தாள். அவளும் என்னைப்போன்றுதான் உள்ளத்துள் வேதனையை அடக்கி அடக்கி குமைந்து கொண்டிருக்கிறாள் போலும். 'மாலதி...' என்றேன் மெதுவாக.

'யாரது...! நீங்களா?'

'ஆமாம். நீ இன்னுமா தூங்கவில்லை?' வறண்ட புன்னகை அவள் உதடுகளில் தோன்றியது.

'வேலையில்லாத் தொழிலாளிக்கு ஓய்வு எதற்கு?' அவள் வேதனையுடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

'பைத்தியக்காரி! இதென்ன பேச்சு?'

'என்னால்...என்னால் உங்கள் வாழ்க்கையே பாழாகிவிட்டது... அதை நினைக்கும் பொழுது...'

'மாலதி! நான் போய்விடட்டுமா?'

'இல்லை...வேண்டாம்.'

'நீ இப்படி எல்லாம் பேசினால் எனக்கு வருத்தமாக இருக்கும் என்று தெரியுமல்லவா?'

'இனிமேல் இல்லை. என்னைத் தயவுசெய்து மன்னித்துவிடுங்கள்.'

அவள் முகத்தை நிமிர்த்தி கண்ணீரை உரிமையுடன் துடைத்தேன்.

'மனத்தைப் போட்டு குழப்பிக் கொள்ளாமல் தூங்கு மாலதி. நாளை டாக்டர் மதன்மோஹனிடம் உன்னை அழைத்து வருவதாகக் கூறி இருக்கிறேன்.'

எப்படியாவது அவள் கண்களைக் குணப்படுத்திவிட முடியும் என்ற நம்பிக்கையில்தான் நான் அப்படிக் கூறினேன்.

## மாலதி

எனக்கு நம்பிக்கை என்றோ போய்விட்டது. ஆயினும் அவருடைய ஆவலைக் கெடுப்பானேன் என்ற உணர்வுதான் என்னைப் பணியவைத்தது. டாக்டர் மதன் மோஹன் என்ன பதிலளித்திருப்பார் என்பது எனக்குத் தெரியாதா?

ஆனால்...என் நினைவிலே பதிந்துப்போய்விட்ட அந்தப் பசுமையான நாட்களைமட்டும் என்னால் மறக்கவே முடியவில்லை...கல்லூரியில் சுற்றுப்பிரயாணத்திற்கென்று மாமல்லபுரம் சென்றோம். அ ப் பொ ழு து தான்...அவர்... அவரை... சந்தித்தேன்... அவரும் எங்களைப்போல்தான் பொழுது போக்குக்காகத் தன் நண்பர்கள் சிலருடன் வந்திருந்தார். அவர் ஒரு டாக்டராம்.

அறிமுகத்திற்குப்பின் எங்கள் அன்பு வளர்ந்தது அவர் மாமாவின் விருப்பத்திற்கு எதிராக. தம் மகள் ரேவதியைத்தான் அவர் மணக்க வேண்டுமென்பது மாமாவின் விருப்பமாம்.

அவர் எனக்காகத் தன் மாமாவிடம் வாதாடினார். வளர்த்தவரைப் பகைத்துக் கொண்டார். எங்கள் திருமணம் யாதொரு ஆடம்பரமும் இன்றி நடந்தேறியது. ஆனால்...என்ன பயன்? இறுதியில் கண்டதெல்லாம் இரண்டு வருட வாழ்க்கை. விதி விபத்தின் வடிவிலே வந்து என்னுடன் விளையாடிவிட்டது. திருச்சிக்கு வேலை விஷயமாக அவர் சென்றபொழுது நானும் உடன் சென்றேன். திரும்புகையில் எங்கள் கார் விபத்துக்குள்ளாகியது. நல்ல வேளை! அவர்...காயங்களுடன் தப்பினார். நான்...நான் பார்வையை இழந்துவிட்ட பாவியானேன்.

ஆயின் அவர் அணுவளவும் மாறவில்லை. குரலிலே கனிவும் பேச்சிலே அன்பும் கலந்து நிற்க என் பழைய கருணாகரனாகவே இருந்தார். இவ்வளவும் நான் சந்தோஷமாக இருப்பதற்காகத்தான் இருக்கவேண்டும். அவர் உள்ளத்தினடியிலே விழுந்துவிட்ட வேதனை எனும் வித்து முளைவிட்டு, செடியாகி, இன்று மரமாக நிற்பது எனக்கா தெரியாது? சமத்துவ நிலையிலே நின்று பேசும் துணிவு என்னிடம் இல்லை. இனி அவரிடமிருந்து அன்பைவிட இரக்கத்தைத்தான் அதிகமாக எதிர்பார்க்கலாம்.

இது நானாகவே என் உள்ளத்திற்குக் கற்றுக் கொடுத்த பாடமாக இருக்கலாம். ஆனால் நான் நினைத்ததிலும் ஓரளவுக்கு உண்மை இருக்கத்தான் செய்தது என்பதை என்னால் உணர முடிந்தது. என் மன உளைச்சல் சில சமயங்களில் வார்த்தைகளாக வெடித்துவிடும். அப்பொழுதெல்லாம் அவர்... 'வீண் சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காதே மாலதி! அவை மனிதனையே கொன்றுவிடும் ஆற்றல் படைத்தவை' என்பார்.



ஓய்வு நேரத்தை எல்லாம் என்னுடன் கழிப்பார். அன்றாடம் தினசரிகளில் வெளியாகும் செய்திகளைப் படித்துக் காட்டி அவற்றைப்பற்றி எல்லாம் என்னுடன் விவாதிப்பார். அன்றாடம் தன்னிடம் சிகிச்சைக்காக வரும்நோயாளிகளைப்பற்றி விளக்கிக் கூறுவார்.

இறுதியில் 'அத்தான்! உங்கள் அன்பு இதுபோல் மாறாமல் இருக்குமானால் என் வாழ்நாள் முழுவதையுமே, நான் இப்படியே கழித்துவிட ஆசைப்படுகிறேன்'



என்று நான் சொல்லுவேன். அதற்குப் பதிலாக 'ஐயோ! அசட்டுப்பெண்ணே!' என்று அவர் அன்பு பொங்கக் கூறும் பொழுது என் உள்ளம் ஆனந்தக் கண்ணீர் வடிக்கும்.

என் ஆனந்தம் நிலைக்கவில்லை. என் மன அமைதியே குலைந்து விட்டது ரேவதியின் குறுக்கீட்டினால்.

## ரேவதி

நான் ஒன்றும் குறுக்கிட்டு அவள் வாழ்க்கையைக் கெடுக்கவில்லை. மாலதி...அவள்தான்... எனக்கும் கருணாகரனுக்குமிடையே நீக்கமுடியாத திரையை சிருஷ்டித்து விட்டவள்.

அவருக்கு எப்பொழுதுமே என்னைக்கண்டால் அலட்சியம். அதுவும் அந்த மாயக்காரி விரித்த வலையில் வீழ்ந்துவிட்ட பிறகு...கேட்க வேண்டுமா? அவளுக்காக, சிறுவயது முதல் எடுத்து வளர்த்து கல்வியறிவூட்டிய என் தந்தையின் அன்பைக்கூட இழக்கத் துணிந்தார்.

அவள் என்னைவிட அழகிதான். ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்காக அவர் நன்றி மறந்து எங்கள் உறவை அடியோடு உதறிவிடத் துணிந்ததை என்னால் பொறுக்கவே முடியவில்லை. அவளின் அந்தச் செய்கை கடவுளுக்கே பொறுக்கவில்லை போலிருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் நேர்ந்த விபத்தில் அவள் பார்வையை இழந்துவிட்டதாகக் கேள்வியுற்றேன். இப்பொழுதாவது கருணாகரன் தன் தவறை உணர்ந்தாரா என்று அறிந்து கொள்ள என் உள்ளம் துடித்தது.

அவரைப் பார்க்கும் வாய்ப்பு இவ்வளவு விரைவில் எனக்குக் கிட்டுமென்று நான் நினைக்கவில்லை. என் தந்தை வயிற்று நோயால் அவதிப்பட்டபொழுது அவரை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டியதாயிற்று. பின்னர் தான் தெரிந்தது அங்குதான் கருணாகரனும் வேலை பார்க்கிறார் என்று.

களை சொட்டும் அதே முகம் தான். ஆனால் அதில் உற்சாகமோ மலர்ச்சியோ இல்லை. என்னைக் கண்டதும் 'ரேவதியா?' என்றார் உணர்ச்சியில்லாமல்.



'ஆமாம் ரேவதியேதான். உங்கள் மனைவி செளக்கியமா?' என்றேன் சிரித்தவண்ணம்.

'ம்...'

'நடந்தது நடந்துவிட்டது. நீங்கள் அன்றே சற்று சிந்தித்திருந்தால்...'

'நான் உன்னைப்போன்று அறிவாளி இல்லை ரேவதி!' பட்டென்று பதிலுரைத்து விட்டு நடந்தார் அவர். உண்மையைச் சொன்னால் கோபம் வாராதா?

என்னால் துக்கத்தை அடக்கவே முடியவில்லை. அன்னையை இழந்த என்னை அன்னையும் தந்தையுமாக இருந்து வளர்த்தவர் அவர் தானே. 'டாக்டர்...அப்பா...பிழைத்து...' பேசமுடியாமல் திணறிய என்னை கருணாகரன் தேற்றினார்.

'என்ன ரேவதி இது? படித்தவள். நீயே இப்படி தைரியத்தைக்



கைவிடலாமா? விரைவில் குணமாகிவிடும்' அவர் குரலில் பரிவு மிதந்தது.

'எனக்கு ரொம்பப் பயமாக இருக்கிறது...' என் அச்சம் அவருக்குப் புரிந்திருக்க வேண்டும்.

'இதோ பார்! கவலைப்படாமல் இரு. அப்பாவுக்குக் குணமாகும் வரை...உனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் என் வீட்டில் வந்து இருக்கலாம்...'

முதலில் அவர் கூறியதை வெறும் வாய் வார்த்தையாகவே கருதினேன். ஆனால் சொன்னதை இவ்வளவு விரைவில் நிறைவேற்றுவார் என்று நான் நினைக்கவே இல்லை.

## மாலதி

நிறைவேறிவிட்டது! விதியின் திட்டம் எதுவாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும்.

'மாலதி! யார் வந்திருக்கிறார்கள் சொல்லு பார்க்கலாம்' மாலை வீடு திரும்பியவரின் குரல் வழக்கத்தைவிட உற்சாகமாகவே ஒலித்தது.

'தெரியவில்லையே...' என்றேன் மெதுவாக. கூட வந்தவள் கலகலவென்று நகைத்தாள். 'ரேவதி வந்திருக்கிறாள் மாலா...!'

'அப்படியா? சந்தோஷம்!' என்றேன் வேதனையை அடக்கிக் கொண்டு.

சற்று நேரத்திற்கெல்லாம் அவர்கள் திரும்பி வந்தார்கள்.

'ஏன் டாக்டர்...ஏதாவது படம் பார்த்துவிட்டு வரலாமா?' இது ரேவதியின் குரல்.

'வந்து...' அவர் தயங்கினார்.

'போய் வாருங்களேன் அத்தான்' என்று நான் உபசாரத்துக்குக் கூறியதும் அடேயப்பா! 'சரி' என்று உடனே எப்படிக் கிளம்பி விட்டார்!

அவள் வந்ததிலிருந்து என் வாழ்க்கை எந்திரமாகிவிட்டது. அவரைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. அவர் நிலையிலிருந்திருந்தால் நானே இப்படித்தான் நடந்துகொண்டிருப்பேன். ஆனால் அவளெதிரில் அவர் என்னை அலட்சியப்படுத்துவதை ஏனோ என்னால் பொறுக்க முடியவில்லை. என் உள்ளம் வேதனையில் வெதும்பியது.

அந்த வேதனையை விலக்கி எறிந்துவிட்டு உண்மையை ஆராய்ந்து பார்க்கும் ஞானோதயம் என்னுள் பிறக்காமலில்லை. 'எப்படியோ! அவர் சந்தோஷமாக இருந்தால் சரிதான். இன்னமும் அவர் எனக்காக வாழவேண்டும் என்று நினைப்பது சுயநலமல்லவா?' நான் ஏற்றுக்கொள்ள வேண்டிய முடிவு எனக்குத் தெரிந்துவிட்டது. அதன்பின் என் உள்ளத்தில் நிறைந்த அமைதி எனக்கே ஆச்சரியத்தை அளித்தது.

### கருணாகரன்

மாமாவின் நோய் அவ்வளவு விரைவிலேயே குணமாகிவிட்டது உண்மையிலேயே ஆச்சரியப்படக்கூடிய விஷயம்தான். அதற்குள் ரேவதி என்னைப் படுத்தியபாடு! அப்பப்பா! தாயில்லாப் பெண் என்ற அனுதாபமே என்னுள் மேலோங்கி நின்றது. அவளுக்கு ஆறுதலாக இருக்கட்டும் என்று என் வீட்டிற்கு அழைத்துச் சென்றேன். ஆனால் மாலதி என்னைத் தவறாக நினைத்து விடுவாளோ என்று பயமாக இருந்தது.

மாமாவின் நோய் அவரை முற்றிலும் புதியவராக்கிவிட்டது. அவர் என்னைப் பழைய பாசத்துடனும் பரிவுடனும் நடத்தினார். மாமா மறந்துவிட்டாலும் ரேவதி கடந்துபோன சம்பவங்களை மறக்கவில்லை என்பதை அவள் பேச்சிலிருந்து புரிந்து கொண்டேன். அறுந்துபோன உறவு புதிப்பிக்கப்பட்டு விட்டபின் ரேவதி என்னைப் பார்க்க அடிக்கடி என் வீட்டுக்கு வந்து போனாள். நான் அதை விரும்பவில்லை என்பதை சூசகமாகத் தெரிவித்தும் அவள் புரிந்து கொள்ளாதவள்போல் நடித்தாள்.

அன்று நான் எதை நினைத்துப் பயந்தேனோ அது நடந்துவிட்டது. நான் வீட்டிலில்லாத சமயம் ரேவதி என்னைத் தேடி வந்திருக்கிறாள். தனிமையில் இருக்கும் மாலதியைக்கண்டதும் பழைய சம்பவங்கள் நினைவுக்கு வந்து அவள் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டிருக்கவேண்டும். நல்லவேளை! நான் இன்னும் சற்று நேரம் தாமதித்து வந்திருந்தால் என்ன நடந்திருக்குமோ!

'உன்னுடன் அவர் எப்படி சந்தோஷமாக வாழமுடியும்...' நான் உள்ளே நுழைந்தபொழுது ரேவதி காரமாகப் பேசிக்கொண்டிருந்தது என் செவிகளில் விழுந்தது.

'ரேவதி...! இப்படிச் செய்ய வேண்டுமென்று நீ எத்தனை நாளாகக் காத்திருந்தாய்?' என்று அதட்டினேன். அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

'இல்லை அத்தான். அவள் கேட்பது நியாயமானது' மாலதி குறுக்கிட்டாள்.

'மாலதி! நீ பேசாமல் இருக்கப் போகிறாயா இல்லையா? ரேவதி! நீ போகலாம். நான் உன்னை இப்படிச் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். என்னை வளர்த்து கல்வியறிவு புகட்டியதற்காக என்னால் இயன்ற நன்றிக் கடனை ஆற்றிவிட்டேன். நீ தயவுசெய்து போய்விடு' உணர்ச்சி வெறியில் கூவிய என்னை அலட்சியமாகப் பார்த்துவிட்டு வெளியே நடந்தாள் ரேவதி.

### மாலதி

கதையை நானே முடித்து விடுகிறேன். அதன் பிறகு அவர் என் கைகளை முரட்டுத்தனமாகப் பிடித்துக்கொண்டார். 'ரேவதியுடன் நான் சிரித்துப் பேசியதை எல்லாம் வைத்துக்கொண்டு நான் அவளுடன் உல்லாச வாழ்வு வாழவேண்டும் என்று விரும்புவதாகக் கற்பனை செய்து விட்டாய். அப்படித்தானே? நான் உன்னை அலட்சியப்படுத்துவதாக நினைத்துவிட்டாய். அப்படித்தானே? இதோ பார். அஸ்திவாரமின்றி எழும் எண்ணங்களை எல்லாம் உடைத்தெறிந்துவிட்டு என்னைப் பார். அப்பொழுதுதான் உனக்கு என் உள்ளம் புரியும். என்னால் ஒருத்தியைத் தான் நேசிக்க முடியும். ஒருத்தியைத்தான் மணக்க முடியும். அன்பு கடைத் தெருவில் விற்கும் பொருளல்ல; இஷ்டம்போல் மாற்றிக்கொள்ள. இப்பொழுதாவது என்னைப் புரிந்து கொண்டாயா மாலதி?' என்றார்.

'அத்தான்! நீங்கள் தெய்வம். என்னை மன்னித்துவிடுங்கள்' நான் அவர் கால்களில் விழுந்து கதறினேன். எனக்குள் அவரை நன்கு பார்க்கக்கூடிய ஒளி பிறந்து விட்டது. புறக்கண்களால் அல்ல; அகக் கண்களால். அவர் உள்ளத் தூய்மையை, பரிசுத்தமான அப்பெனும் உணர்வை நான் நன்றாகப் பார்த்தேன். என் உள்ளத்திலே இது நாள் வரை கவிந்திருந்த இருள் கழுவப்பெற்று புனித ஒளிபெற்று சுடர் விட்டது. அந்த ஒளியை எனக்குள் ஏற்றி வைத்த என் தெய்வத்தைக் கை எடுத்துக் கும்பிட்டேன். அவர் கண்களினின்று சிந்திய கண்ணீர்த் துளிகள் என் மீது விழுந்து சிதறின. விலை மதிக்க முடியாத அன்பின் சின்னமான அக்கண்ணீர்த் துளிகள் இருண்டு போகவிருந்த என் வாழ்க்கையில் ஒளியின் உதயத்தை எனக்குக் காட்டிக் கொடுத்தன!






உயர்திரு வகுப்பு வாத்தியார் 'பிரப்பம்பழம்' அவர்களுக்கு,

சரஸ்வதி பூசைக்கு வைத்திருக்கும் புத்தகங்களை எல்லாம் இன்று வெள்ளிக்கிழமையாதலால் வீட்டில் எடுக்கவில்லை, தவிர சனி, ஞாயிறு லீவு ஆகிவிடுகிறது. ஆகையால் இன்று லீவு கொடுத்துவிடவும், திங்கட்கிழமை பள்ளிக்கூடம் வந்து சேருகிறேன்.

இப்படிக்கு,

உங்கள் கீழ்ப்படிந்த மாணவன், வாண்டுவாசு.



'சித்ரா'

# னக்கதவு

சரளா தன்னைச் சுற்றிலும் பார்வையைப் படர விட்டாள். என்ன அலங்கோலம்! மேடையில், சமைத்த பாத்திரங்கள் அனைத்தும் மூடியும் மூடாமலும் கறி நறுக்கிய கூளம், கிடந்தன. கீழே காய் கூடை, தேங்காய்த் துருவி என்று பண்டங்கள் ஒருபுறம் இறைந்து கிடக்க, மற்றொரு பக்கம் சாப்பிட்ட எச்சில் தட்டுக்களும் எடுக்கப்படாமல் ஒரே பற்றும் பசையுமாக அசங்கியமான காட்சி. இவ்வளவையும் ஒழித்து உரிய இடங்களில் வைத்து அறையைச் சுத்தம் செய்தாக வேண்டும் என்ற நினைப்பே அவளுக்குப் பிரமிப்பூட்டுவதாக இருந்தது. தாய் சொல்லைக் கேளாமல் அவள் முன் நிற்கத் தயங்கும் குழந்தை போல் அந்த அறையிலிருக்கவே கூசியவளாக மெல்ல நழுவி, படுக்கையறைக்குள் புகுந்தாள் சரளா. அங்கும் அமளிக்குக் குறைவில்லை. மூலைக்கு மூலை துணியும் மணியும் பத்திரிகையுமாகச் சிதறிக் கிடந்தன. அவள் எதையும் பாராதவளாகப் படுக்கையில் சாய்ந்தாள்.

'குழந்தை எங்கு போய்விட்டாள் அதற்குள்?' இந்த நினைவு எழவே, ஜன்னலருகில் சென்று 'நளினி நளினி..' என்று கூவினாள். எதிர் 'பிளாக்'கிலிருந்து கதவைத் திறந்து தலையை நீட்டிய லலிதா, 'இங்குதான் விளையாடிக் கொண்டிருக்கிறாள், எங்கள் சுசியுடன்' என்று செய்தி அறிவித்தாள்.

டுப் போனாள். போகிறவள் சும்மா போகாமல் 'என்னம்மா நான்கு நாள் ஜுரமடித்த மாதிரி இருக்கிறாய்' என்று அனுகூலமாகக் கேட்டுவிட்டுப் போனாள். சரளாவுக்கு ஒரு உண்மை அப்போதுதான் பளிச்சிட்டது. காலையிலிருந்தே கண்களில் எரிச்சல், கைகால் எல்லாம் கடுப்பு வலி; விழிகள் தெறித்து விடும்போல் மண்டையிடி! அவசரம் அவசரமாகத் தர்மாமீட்டரை எடுத்து உதறவும் மறந்தவளாக வைத்துப் பார்த்தாள். நூற்றிரண்டு 'டிகிரி' காட்டியது! எப்போதோ குழந்தை

'கழுதை.. வர வர வீட்டிலேயே கால் நிற்பதில்லை' என்று முணுமுணுத்த போதிலும், கவலையின்றித் தான் படுத்துத் தூங்குவதற்குப் பங்கம் ஏற்படாது என்கிற வரையில் உள்ளூர நிம்மதியே. படுக்கையில் படுத்துப் போர்வையைக் கழுத்து வரையில் இழுத்து விட்டுக்கொண்டு கண்களை மூடினாள். ஆனால், ஏனோ தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு பார்த்தாள். ஊஹூம்..இமையோடு இமை பொருந்தினால் தானே?

வேலைக்காரி வந்தாள். நான்கும் கிடக்க நடுவில் பெருக்கினேனும் என்று பெயர் செய்துவிட்

நளினிக்கு வந்திருந்த ஜுரம் அது!

❖ ❖ ❖

உடைகளைக் களைந்தபடியே வீட்டின் நிலையை ஆராய்ந்தான் வாசு. கணவனின் வருகை கண்டு சரளா எழுந்து விடவில்லை. அலட்டிக் கொள்ளவுமில்லை. அவனும் அதைப் பற்றிக் கவலைப்படாதவனாக வீட்டு வேலைகளைத் தானே ஏற்றுச் செய்யவாரம்பித்தான்.

அவன் வந்ததுமே சொல்லி வைத்தாற்போல் நளினியும் வீட்டினுள் வந்தாள். தந்தை கொடுத்த பாலைக் குடித்துவிட்டு ஆயிரம் சேதிகளை

ணம் அவன் பின்னோடு நடந்தாள் குழந்தை.

'கொயிலா' அடுப்பைப் பற்ற வைத்து, குக்கர் பாத்திரத்தை ஏற்றிவிட்டு வந்தவன் 'லெட்டர் ஏதாவது வந்ததா சரளா?' என்று கேட்டுக்கொண்டே கடியாரக் கூண்டிலிருந்த கடிதத்தை எடுத்துப் பிரித்தான்.

அவளை 'ஏன் படுத்திருக்கிறாய்?' என்று அன்பாக ஒரு வார்த்தை கேட்க வேண்டுமே. கிடையாது! அவ்வளவு அலட்சியம்! சரளா பொங்கிப் பொருமினாள்.

என்றைக்குமே அவள் இப்படியா இருந்தாள்? நளினி பிறக்கும் வரையில், ஏன் அப்புறமும் கூட சிட்டுக் குருவியின் சுறுசுறுப்புடன் இயங்கியவள்தான். நளினியின் மழலை மாறுவதற்குள்ளாகவே அடுத்தடுத்துத் தொடர்ந்த இரண்டு குறைப் பிரசவங்கள் அவள் பொலிவைக் குலைத்து, சக்தியை உறிஞ்சி விட்டன. அப்புறம் உடம்பு தேறவேயில்லை. எவ்வளவோ மருந்து மாயம் எல்லாம் பார்த்தாகிவிட்டது. பயனில்லை. நினைத்தால் டாக்டர்தான். மருந்துதான்...

'சுகுணா எழுதியிருக்கிறாள்.' கடிதத்தை மடித்து உறையிலிட்ட வண்ணம் வாசு மொழிந்தான்.

'யார்..உங்கள் அத்தைப் பெண் சுகுணாவா?'

'அவளேதான். இங்கு ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினி வேலைக்கு மனுப் போட்டிருந்தாளாம். வரச்சொல்லிக் கடிதம்வந்ததாம். அதற்காக நாளை வருகிறாள். முடிந்தால் ஹௌராவுக்கு வரும்படி எழுதியிருக்கிறாள்.'

'உபாத்தியாயினி வேலைக்கு இவ்வளவு தூரம் கல்கத்தா தேடியா வரவேண்டும்? சென்னையில் இல்லாத வேலையாக்கும்?'

வாசு பதிலே சொல்லவில்லை.

சரளாவின் கல்யாணத்திற்கு இந்த சுகுணா வந்திருந்தாள். கைம்மை நிலையிலும் மாறாத அழகும் கலகலப்பான சுபாவமும் அமையப் பெற்ற அந்தப் பெண், எல்லோர் கவனத்தையும் ஈர்த்தது இன்னமுங்கூடச் சரளாவுக்கு மறக்கவில்லை!

வாசுவும் சுகுணாவும் சின்ன வயதிலிருந்தே ஒன்றாய்ப் பழகியவர்கள். சுகுணா பிறந்தபோதே அவள் வாசுவிற்குத்தான் என்று பெரியவர்கள் முடிபோட்டு வைத்தனர். வாசுவின் படிப்பு முடிவுற்றதும் சுகுணாவின் தந்தை கல்யாணப் பேச்சை எடுத்தார். அப்போதுதான் வாசுவைப் பெற்றவர் யாரும் எதிர்பாராத வகையில் தன் பிள்ளைக்குப் பெரிய இடங்களிலிருந்து பெண் வருவதாகவும் சுகுணாவை மருமகளாக்கிக் கொள்ள விரும்பவில்லை என்றும் நிர்த்தாட்சண்யமாக மறுத்துவிட்டார். சுகுணாவின் தந்தை வெகுண்டார். அவருடைய கோபம் வீம்பாக உருவெடுத்து, அதே வருஷம் வாசுவைவிட ஒரு படி மேலான மாப்பிள்ளையைத் தேடிச் சுகுணாவை வாழ்க்கைப்படுத்த உதவியது. ஆனால், பாழும் விதி ஓராண்டு காலம்கூட அவளைச் சுகப்பட விடவில்லை. ஜுரம் என்று மூன்றே நாள் படுத்தவன்தான். அவளுடைய மங்கலத்தைப் பறித்துக்கொண்டு போய் விட்டான். அப்புறம் ஏற்கெனவே பாதியில் நிறுத்தியிருந்த கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தாள் சுகுணா.

இந்தச் செய்திகளையெல்லாம் சரளா பெண்மைக்கே உரித்தானதொரு ஆவலுடன் வாசுவிடம் கேட்டு அறிந்து வைத்திருந்தாள்.

'தான் இன்று இருக்குமிடத்தில் இருக்க வேண்டியவள். வாசுவை மணந்திருந்தால் சகல விதத்திலும் அவனுக்கேற்ற இல்லாளாக விளங்கியிருப்பாள். அவனும் சுகப்பட்டிருப்பான். அவள் வாழ்வும் மலர்ந்திருக்கும். அப்படிப்பட்டவள், பறித்துப் புழுதியில் எறியப்பட்ட மலராக இப்போது வருகிறாள். ஒரு கூரையின் கீழ் இருக்கையில், அவனுக்கோ அவளுக்கோ மன நெகிழ்ச்சிகள் எழாமலிருக்குமா? சலனம் முளைக்காது என்பது என்ன நிச்சயம்?' உடல் சோர்ந்திருந்த நிலையிலும் மனம் மட்டும் விமான வேகத்தில் பறந்தது சரளாவுக்கு.

வாசு நளினியுடன் ஸ்டேஷனுக்குச் சென்ற பிறகே சரளா படுக்கையை விட்டு எழுந்தாள். உள்ளே எல்லாம் தாறுமாறாகக் கிடந்தன. மூலையில் ஹோட்டலிலிருந்து வந்த எடுப்புச் சாப்பாடு கவனிப்பாரற்றுச் சில்லிட்டுக் கொண்டிருந்தது.

சரளா பல்லைக் கடித்துக் கொண்டு எல்லாவற்றையும் ஒதுக்கி ஒழுங்குபடுத்தினாள். அடுப்பைப் பற்ற வைத்து வருகிறவளுக்குக் குளிக்க வெந்நீர் தயாரித்தாள். மின் அடுப்பில் பெரிய பாத்திரத்தில் தண்ணீரை வைத்து, அதனுள் சாப்பாட்டு அடுக்கைப் பொருத்தினாள். தலையை வாரி முடிந்து பொட்டு வைத்துக் கொள்கையிலேயே வாயிலில் வண்டி வந்து நின்றது.

'என்ன மன்னி..உடம்பு எப்படி இருக்கிறது? அத்தான் சொன்னான், நேற்றெல்லாம் எழுந்திருக்கவே இல்லையாமே' என்று கலகலவென்று சோழிப் பெட்டி குலுங்கினாற் போல் சுகுணா விசாரித்தபடி நுழைகையில், தன் மனப் பாங்கை எண்ணிச் சரளாவுக்கே எப்படியோ இருந்தது.

சுகுணாவை அழைத்து வந்த பிறகு வாசு



காரியாலயம் சென்று விட்டான்.

மாலையில் வீடே ஒரு புதிய மெருகுடன் பிரகாசித்ததாக வாசுவுக்குத் தோற்றியது. வெகு நாள் அந்த வீட்டில் வேலை செய்து பழக்கப்பட்டவளின் நிதானத்துடன் புடவைக் கொசுவத்தைத் தூக்கிச் செருகிக் கொண்டு, சுகுணா ஓடி ஓடி வேலை செய்தாள். சரளாவும்கூட வீட்டுக்கு வந்தவளை முழுக்க வேலை செய்ய விட்டுப் படுத்திருக்க வெட்கியோ என்னவோ கூடமாட உதவியாக இருந்தாள். உடம்பு வாதனைகூட சற்றே குறைந்தாற் போலிருந்தது அவளுக்கு.

ஃ ஃ ஃ

மறுநாள் பவானிப்பூரிலிருந்து சுகுணாவின் மைத்துனன் வந்து அவளைப் பாலகஞ்சிலிருந்த பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் சென்றான். அவன் மூலமாகத்தான் அந்த உத்தியோகத்திற்கு அவள் முயற்சி செய்திருந்தாள்.

'என்ன சரளா..விருந்தாளி வந்திருக்கிறாள் போலிருக்கே' என்று வாசு காரியாலயம் சென்ற பிறகு குசலம் விசாரித்தபடி வந்தாள் லலிதா. கணவனை அனுப்பிவிட்டுப் பிறர் வீட்டு வம்புக்கு அலைபவள் என்கிற நினைப்பில் சாதாரண நாட்களில் அவளை மதித்து முகம் கொடுத்துப் பேசக் கூடியவளல்ல சரளா. ஆனால், இன்று நெஞ்சில் பாரமாக அழுத்திய சுமையை யாரிடமேனும் அவிழ்க்காவிட்டால் அவளுக்குத் தலை வெடித்து விடும் போலிருந்தது.

'ஆமாம்..நானிருக்கும் நிலையில் என் வீட்டுக் காரியமே பெரும்பாடாயிருக்கிறது. இதில்அதிதி உபசாரம் வேறு' என்று வெடித்தாள் சரளா.

'உத்தியோகம் தேடி வந்திருக்கிறாள் என்றால், இங்கேதான் இருப்பாள் என்று சொல்லு.'

'அது என்ன செய்வாளோ, எனக்கு ஒன்றும் தெரியாது', சரளாவின் குரலில் அலுப்பு வழிந்தது.

'ஆயிரமே உறவு முறை என்றாலும் அவளை நீ வைத்துக் கொள்வது உசிதமாகப் படவில்லை. நீயோ பொழுது விடிந்தால் பொழுது போனால் நோய் நொடி என்று படுத்து விடுகிறாய். அவளைப் பார்த்ததுமே எனக்குக் கவலை என்றது. அப்படியொரு பட்டுச் சிவப்பை நம்மவர்களில் நான் கண்டதேயில்லையடி!' என்று சரளாவின் மனக் கனலை உணர்ந்து ஊதினாள் லலிதா.

'அதே கவலைதான் எனக்கும் லலி. அத்தைப் பெண் என்பதோடு அறியாப் பிராயத்திலிருந்தே பழகியவர்கள். இவள் பிறந்ததுமே இவருக்குத்தான் என்று நிச்சயிக்கப் பட்டிருந்ததாம்...'

'அது என்ன விஷயம்...' ஆவலோடு காதைத் தீட்டிக்கொண்டு கேட்ட லலிதாவிடம் சரளா அனைத்தையும் விவரித்தாள். கண் இமைக்காமல் கேட்டுவிட்டு 'பழைய கதை இப்படியெல்லாம் இருக்க, நீ கொஞ்சமும் இடம் கொடுக்காதே சரளா. அப்புறம் 'அம்மா ஐயா' வென்பதில் பிரயோஜனமில்லை. வேலையாயிற்று என்றால் தனி இடம் பார்த்துக் கொண்டு போகட்டுமே' என்றாள். அவள் உரையேற்றிக் கொண்டிருக்கையிலேயே சுகுணா வந்து விட பேச்சு 'தடக்'கென்று நின்றது. தங்கள் பேச்சு அவளுக்கு எவ்வளவு தூரம் எட்டியிருக்குமோ என்கிற கவலை சரளாவைப் புழுவாகக் குடைந்தது.

அவள் சந்தேகம் ஊர்ஜிதப்படும் வகையில் மறுநாள் பள்ளிக்குக் கிளம்பிய சுகுணா, மைத்துனனை டாக்சி பிடித்து வரச் செய்து, பெட்டி படுக்கையுடன் புறப்பட்டாள். வாசு வியப்பில் விக்கித்து விட்டான்.

'இது என்ன சுகுணா..இங்கு இருப்பதில் உனக்கு என்ன அசௌகரியம்? திடீரென்று இப்படிப் புறப்பட்டால் என்ன அர்த்தமாம்' என்று கேள்விகளை அடுக்கினான்.

சுகுணா கலகலவென்று நகைத்தாள்.

'இன்னமும் பழைய அத்தானாகத்தானிருக்கிறாய். மாறுதலே இல்லை. 'சூ' என்பதற்குள் மூக்குச் சிவப்பதைப் பாரேன்' என்று கூறி, மைத்துனன் பக்கம் பார்த்து 'அவருக்கு ஏற்கனவே நான் அங்கு வந்து இறங்கவில்லை என்று கோபம். இரண்டு நாட்கள் அவர்களுடன் தங்க வேண்டாமா? அப்புறம் பள்ளிக்கூடம் திறந்து விட்டால் எப்போதாவதுதானே எல்லோரையும் பார்க்க வர முடியும்?'

'ஏன்? நீ என்ன பள்ளிக்கூடத்தோடு ஐக்கியமாகி விடுவதாக எண்ணமா? இங்குதானே இருக்கப் போகிறாய்?' என்றான் வாசு கோபம் தணியாத குரலில்.

'கேளுங்கள் நன்றாக' என்று அவனைத் தாண்டினான் சுகுணாவின் மைத்துனன் மூர்த்தி.

'இல்லை அத்தான்..எனக்கும் உங்களுடன் எல்லாம் இருக்க வேண்டும் என்ற ஆசைதான். ஆனால், பஸ் பிடித்து டிராம் பிடித்துப் போய் வருவதிலேயே பாதிப் பொழுது போய்விடுமே!




மேலும் ஒழிந்த நேரத்தில் எம். ஏ.க்குப் படிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது எல்லாவற்றையும் உத்தேசித்துத்தான் சக ஆசிரியைகளுடன் பள்ளிக்கு அருகில் அவர்கள் எடுத்திருக்கும் விடுதியிலேயே தங்குவது என்று தீர்மானித்து விட்டேன்.

'அப்புறம் நான் சொல்லுவதற்குத்தான் என்ன இருக்கிறது? போய் வா' என்று கரகரத்த குரலில் விடை கொடுத்தான் வாசு.

டாக்சி மறைந்ததுமே சரளா 'நல்லதாயிற்று என்று விடுங்கள். நாம் என்னதான் களங்கமின்றிப் பழகினாலும் பார்க்கிறவர்கள் நாலு தினுசாகப் பேசக் கூடும் பாருங்கள்' என்றாள்.

'சட்...என்ன உளறுகிறாய்? சுகுணா என் உடன்பிறவாத சகோதரி. குழந்தைப் பருவத்திலிருந்தே பழகிய எங்கள் உள்ளங்களில் வளர்ந்திருந்த சகோதர பாசத்தை உணராமல் பெரி

வர்கள் எங்களை மணப் பிணைப்பில் ஈடுபடுத்த நினைத்தது எங்களுக்கு வெறுப்பை ஊட்டியது. சுகுணாவின் யோசனையுடன், அவளை ஏற்க வேண்டாமென்று அப்பாவை அப்போது தூண்டி விட்டவன் நான்! அப்படிப்பட்ட புனிதமான உறவுக்கும் களங்கம் கற்பிப்பவர்கள் உண்டென்றால், அவர்கள் அபிப்பிராயங்களை மதிக்கக் கூடியவன் நானல்ல சரளா. தெரிந்துகொள்.' உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளைச் சிந்திய வாசுவை வியப்புடன் நோக்கினாள் சரளா.

'ஏதோ தெரியாமல் நான்பேசி விட்டேன்..' என்று தழுதழுத்த குரலில் அவள் கூறுகையில், தன் அறியாமைக்காக மானசீகமாகச் சுகுணாவிடம் மன்னிப்புக் கோரியதை அவன் எப்படி அறிவான்?

இரண்டு நாட்கள் கழித்து வாசுவுக்கு சுகுணாவின் தந்தையிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. வாசு வீட்டிலிருக்கவில்லை. சரளாதான் பிரித்துப் படித்தாள். கடிதத்தில் கண்டிருந்த ஒரு செய்தி அவளை நிலைகுலையச் செய்து விட்டது. உள்ளங் காலிலிருந்து உச்சந்தலைவரை குலுக்கி எடுத்த பச்சாத்தாப உணர்ச்சியினின்று மீளாதவளாக மீண்டும் மீண்டும் அந்தப் பகுதியைப் படித்தாள்.

'உனக்குத் தெரியுமோ தெரியாதோ போன வருஷம் சுகுணா 'நிமோனியா' ஜுரத்தில் ஒரு மாதம் படுத்த படுக்கையாயிருந்தாள். பிழைத்துப் புனர் ஜன்மம் எடுத்தது உன் அத்தை செய்த பாக்கியமே. ஆனாலும் அப்போதே டாக்டர் இதயம் மிகவும் பலவீனப் பட்டிருப்பதாயும் சிறு அதிர்ச்சியும் கூடாது என்றும் எச்சரித்தார். அவள் எங்கள் பேச்சைக் கேட்கக் கூடிய பெண்ணா? வேலை தேடி அவ்வளவு தூரம் போக வேண்டாம் என்று சொன்னோம். அவள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. 'இந்த உடம்பைப் போர்த்திப் பாதுகாத்து என்ன ஆக வேண்டும் அப்பா' என்று என்னையே மடக்குகிறாள். பழைய சம்பவங்களை நினைவூட்டும் இந்தச் சூழல் அவளுக்குப் பிடிக்கவில்லை. வாஸ்தவமே. ஆனால் அந்த ஊர் வெயிலும் குளிரும் அவளுக்கு ஒத்து வரவேண்டுமே! சதா உன் அத்தைக்கு இதே கவலைதான். நான்குமாதங்களுக்கு முன்புகூட ஒரு 'அடாக்' வந்து இதோஅதோ என்று பயமுறுத்தினாள். ஏதோ, நீயேனும் அங்கு இருக்கிறாய், கவனித்துக் கொள்வாய் என்கிற ஒரே ஆறுதல்தான்...'

இரண்டு சொட்டுக் கண்ணீர் கடிதத்தைக் கறைப்படுத்தியது. அத்துடன் சரளாவின் சோர்வும் பலவீனமுங் கூடக் கரைந்தோடி விட்டனவோ? உடல் பூப்பந்து போல் லேசாகி விட்டிருந்தது! மனம் சலனமின்றித் தவழும் ஓடை நீராகத் தெளிவு பெற்றிருந்தது!

கவனிப்பாரின்றிக் காற்றில் அலைந்த ஜன்னல் கதவை இழுத்துக் கொக்கியோடு பிணைத்தாள் சரளா.

களைத்து வீடு திரும்பிய வாசுவுக்கு மனைவி என்றுமில்லாத புதுமையாக அன்று மலர்ந்த முகமும் மணக்கும் காப்பியுமாக வரவேற்றது பெரும் வியப்பாயிருந்தது.

★

# திருவருளை வேண்டுவோம்!

ராஜேந்திரன்

பொல்லாக்கல் லாமை பொறுமையின்மை போக்கிச்
செல்லா செல்வமருள் சிந்தா மணிக்குவையே,
எங்குச் சென்றாலு மின்பச் சிறப்புடனே
சங்க நிதியருள் சங்கத் தனிநிதியே,
திங்கள் மிலைந்த சிவனார் திருமடியில்
மங்கையுமை கண்குளிர வந்துலவும் வான்குருத்தே,
தென்றல் கவரியிடச் செஞ்சாந்து மலர்சொரிய
வென்றி முனிமடியில் வீற்றிருக்கும் மெல்லியளே,
நாட்டும் புகழ்மிகு ஞானசம் பந்தனிட்ட
ஏட்டிற் றவழ்ந்தெதிரே யேறு மிளங்கொடியே
வஞ்சச் சமணரெல்லாம் வான்கழுவின் மேலேற
மஞ்சத்தீ யேறி மகிழ்ந்திருந்த மங்கையே
கம்பன ளித்தவெள்ளைச் சிலம்பிரண்டுக் காசைகொண்டு
செம்பொற் சிலம்பொன் றீந்தவளே எந்தாய்நீ
மின்ன லிடையாளோ வேத மொழியாளோ
சொன்ன சிவகலைக்குச் சோதியாய் நின்றாளோ!
மூச்சங்க வாழ்வும் முடிமன்னர் காவலுமற்று
அச்சத்தின் மேலும் அயற்பழியும் ஆயிற்றே?
உள்ளம் கவலற்க வுண்கண் பணியற்க
மங்கா நிதியளிக்கும் வாழ்வே, நின்னை
நெஞ்சத் திருந்து நினைத்த வரங்கொடுத்து
நல்வித்தை யீந்தருள திருவருளை வேண்டுவமே!




சாதாரணமாகத் தேவராஜனுக்குத் தலைவலி என்றால் யாரும் கவலைப்படமாட்டார்கள். 'தலைவலிதானே!' என்று அலட்சியமாகச் சென்றுகொண்டேயிருப்பார்கள். ஆனால் எழுத்தாளர் மாரீசனுக்குத் தலைவலி என்றால் போதும். தமிழ்நாட்டு வாசக உலகின் லட்சக்கணக்கான அன்பர்களின் 'கியூவை' அவர் வீட்டு வாசலில் ஆளுக்கொரு அமிர்தாஞ்சனம் பாட்டிலுடன் பார்க்கலாம். 'மாரீச'னின் பேனாவில் என்ன மாயம் இருந்ததோ? மனுஷன் அப்படி எழுதினான். எழுத்தா அது? தமிழ்நாட்டு வாசக உலகையே பைத்தியமாய் அடித்துவிட்டது அவர் நடை. மாரீசனின் சிறு கதைகள் வராத வார, மாதப் பத்திரிகைகளே தமிழ்நாட்டில் கிடையாது. ஒரு காலத்தில் மவுண்ட் ரோடு ரவுண்டானாவிலும், லஸ் கார்னரிலும் இருக்கும் பெரிய பத்திரிகைக் கடைகளில் வாயில் தெரியாவண்ணம் தொங்கும் சஞ்சிகைகள் அனைத்திலும் தம் கதைகள் வந்தால் எப்படி இருக்கும் என்று அவர் ஏங்கிப் பெருமூச்சுவிட்ட காலம் உண்டு. அன்று அது கனவு. இன்று நனவாகிவிட்டது.

அடையாற்றில் கடற்கரையை அடுத்தாற்போல் சின்னஞ் சிறிய குச்சு வீடு. வீட்டைச் சுற்றிலும் சிறிய தோட்டம். வீட்டின் எதிரே சற்றுத் தொலைவில் அலை பாயும் கடல். 'மாரீச'னுக்கு வேறு என்ன வேண்டும்? தன்னுடைய வீட்டின் முன்புற அறையில் இருக்கும் அகலமான மேசையின்முன் உட்கார்ந்து, ஊதுவத்தியைக் கொளுத்தி வைத்துவிட்டுப் பேனாவை எடுத்துவிட்டார் என்றால், அவ்வளவுதான். அவர் சஞ்சரிக்கும் உலகமே தனி.

இன்று தமிழ்நாட்டுப் பிரபல பத்திரிகைகள் எல்லாம் அவர் எதை கிறுக்கினாலும் அட்டைப் படத்துடன் பிரசுரிக்கின்றன. அவர் காதல் கதை எழுதினால் 'ஆகா! என்ன சிருங்காரம்' என்று மயங்குகிறார்கள். சோகக் கதை எழுதினால் கண்ணீர் ஆறாய்ப் பெருகும்படி அழுகிறார்கள். ஹாஸ்யக் கதை எழுதினால் விலாவைப் பிடித்துக்கொண்டு வயிறு வலிக்கச் சிரிக்கிறார்கள். அந்த உலகில் இருக்கும் பெரிய பெரிய 'ஜாம்பவான்'களால் கூட முடியாத இந்த அரிய புகழை அவரால் எப்படி அடைய முடிந்தது?

வாசகர்களின் கவனத்தில் அடிக்கடி தென்படுவது போல் இருப்பது ஒரு தனி விளம்பரம். அதை எப்படிச் செய்வது? தேவராஜனுக்கு 'ஐடியா' தோன்றிவிட்டது. அது தோன்றிய மறுநாளிலிருந்து தமிழ்நாட்டுத் தினப் பத்திரிகைகள், வார, மாத இதழ்கள் எல்லாவற்றிலும் ஆசிரியர் பகுதி அல்லது 'நேயர் தபால்' பகுதியில் எதையாவது தாக்கி அல்லது கடிந்து 'மாரீசன்' என்ற புனைப் பெயரில் காரசாரமான கடிதங்கள் வெளியாகின. தாக்கி எழுதினால்தான் வாசகர்களின் நினைவில் பெயர் தங்கியிருக்கும் என்ற அரிய தத்துவத்தைக் கடைப்பிடித்தவன் அவன்தான். நாளடைவில் மாரீசனின் பெயர் தமிழ்நாட்டில் சர்வசாதாரணமாய் அடிபடத் தொடங்கியது. பின்பு தேவராஜன் தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர்களுக்கு அவர்களது அவ்வப்போது பிரசுரமான கதையை வானளாவப் புகழ்ந்து, புதுமைப் பித்தனின் மறுபிறவி நீங்களேதான் என்றெல்லாம் கடிதங்கள் எழுதினான். கேவலம், எழுத்தாளனைவிட இந்தப் புகழ்ச்சிக்கு அடிமையாகும் ஆத்மா வேறு யார்? இரண்டு நாட்களுக்குப் பின்பு ஒரு கதையை எடுத்துக்கொண்டு அவர்கள் வீட்டிற்கே போவான். அங்குச் சென்று தன்னைத்தானே 'மாரீசன்' என்று அறிமுகப்படுத்திக்கொள்வான். அவர் அவனுக்குக் காப்பிக் கொடுத்து உபசரித்துவிட்டுத் தமிழ் இலக்கியத்தைப் பற்றி ஓயாமல் ஒரு மணி நேரம் 'போர்' அடிப்பார். துளி முகத்தை சிணுங்குவானா தேவராஜன்? மூச்! மிகப் பொறுமையோடு அதைக் கேட்டுக்கொண்டு இருந்துவிட்டுப் பின்பு ஆயிரம் கூழைக் கும்பிடுகளுடன் 'இதை, அப்படியே, ஒரு செகண்ட், ஒரு கிளான்ஸ் 'உங்க' கண்ணாலே பார்க்கணுமே' என்று கதையை நீட்டுவான். அவர்




"யாரய்யா நீர்! போர்டுலே—'அவுட்'—வெளியேன்னு போட்டிருக்கே; பார்க்கல்லியா?"

"பார்த்தேன். அந்த போர்டு பில் பணத்தை வாங்கிட்டுப் போகத்தான் வந்திருக்கேன்."

அதை மேலெழுந்த வாரியாய்ப் பார்த்துவிட்டு, 'பேஷ்! ரொம்ப நன்னா எழுதியிருக்கேள். எக்ஸிகியூஷன்தான் ஒரு மாதிரியா இருக்கு. பரவாயில்லை. போகப் போகச் சரியாகிவிடும். இருந்தாலும் உங்கள் கதாநாயகி காச நோயால் கஷ்டப்படுவதை என்னால் தாள முடியவில்லை. அவள் வியாதியைச் சொஸ்தப்படுத்திவிடுங்கள். இல்லை கொன்றுவிடுங்கள். ஒரே வரியில் காரியம் முடிந்துவிடும்' என்று கோடி காட்டுவார்.

தேவராஜனுக்கு இது போதாதா? வீட்டிற்கு வந்ததும் அன்று இரவே அவன் படைத்த கதாநாயகிக்கு விஷம் கொடுத்தோ, தூக்கில் மாட்டியோ, கத்தியால் ஒரே குத்தாய்க் குத்திக் கொன்றோ மறுநாளே அந்த ஆசிரியர் வீட்டிற்கு எடுத்துச் செல்வான். (கதாநாயகியை அல்ல; கதையை.) அவர் மறுமுறை அதைப் பார்த்துவிட்டு 'ஆகா! நான் சொன்னபடியே ரொம்ப நன்னாய்க் கொன்றிருக்கிறீர்களே?' என்பார். மறுவாரத்திலேயே அவர் சிபாரிசுடன் பத்திரிகையில் பிரசுரமாகும். தேவராஜனைக் கட்டிப் பிடிக்க முடியாது.

தேவராஜனுக்கு மலையான சொத்து இருந்தது. அடிக்கடி கதாசிரியர்கள், எழுத்தாளர்கள் இவர்களுக்குத் தன் வீட்டில் விருந்து கொடுப்பான். பின்பு கேட்பானேன்? மாரீசன் எல்லாப் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் மிக நெருங்கியவனாகி விட்டான். பின்புதான் தேவராஜனின் கதைகள் எல்லாப் பத்திரிகைகளிலும் சரமாரியாய் வர ஆரம்பித்தன.

தேவராஜன் பி. ஏ. படித்தவன். அவனுக்கொன்றும் தொலையாத வயசில்லை. இருந்திருந்து இன்றைக்கெல்லாம் இருபத்தியாறு வயதிருக்கும். இந்தச் சமயத்தில்தான் அவனுக்குத் திருமணம் நடந்தது. அவனுக்குப் பெண்ணைக் கொடுத்தவர் அவன் எழுத்தாளன், புகழ் வாய்ந்தவன் என்பதற்காகக் கொடுக்கவில்லை. அவன் சொத்தை நம்பித்தான் கொடுத்தார். அந்தச் சொத்தில் கால் பகுதிக்குமேல் மேல்நாட்டுப் புத்தகங்களாக மாறி அவன் கதைகளுக்குப் 'பிளாட்' கொடுத்துக் கொண்டிருந்தது. எல்லாப் பத்திரிகைகளிலும் அவன் திருமணப் போட்டோ வந்தது. 'பிரபல எழுத்தாளர் திருமணம்' என்று பத்திரிகைகள் அமர்க்களப் படுத்தியிருந்தன.

மாரீசனின் மனைவியின் பெயர் அஞ்சுகம். என்ன, பெயர் ஒரு மாதிரியாய் இருக்கிறதே என்று பார்க்கிறீர்களா? நீங்கள் நினைப்பது நூற்றுக்கு நூறு சதவிகிதம் சரி. அஞ்சுகம் வேறு யாருமல்ல. தேவராஜனின் சொந்த மாமாவின் பெண். முறைக்காரி. எங்கோ கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள். தேவராஜனின் மாமாவுக்குத் தன்னுடைய 'மருமவப் புள்ளை' பெரிய எழுத்தாளனாக இருப்பதில் தலைகால் தெரியாத சந்தோஷம்தான். ஆனால் தேவராஜன் மட்டும் எழுத்தாளனாக இருந்தும் சொத்து பத்து ஒன்றுமில்லாமல் எங்காவது காரியாலயம் ஒன்றில் ஆபீஸ் பைல்களுடன் மல்லுக்கு நிற்பவனாக இருந்திருந்தால் நிச்சயம் அவன் பக்கம்கூடத் திரும்பிப் பார்த்திருக்க மாட்டார்.

அம்மன் கோயில் சிலை என்ற உபமானம் அஞ்சுகத்துக்கு மிக்கப் பொருத்தம். அவள் அப்படிப்பட்ட கறுப்பு. ஆனால் அதில் நாவல் பழத்தின் மினுமினுப்பு. அவள் அங்கங்கள் ஒவ்வொன்றிலும் கடைசல் பிடித்தது போல் ஒரு உறுதி, திண்மை, கிராமிய மண். கழனியிலும் கொட்டிலிலும் மாறி மாறி வேலை செய்து இறுகி வஜ்ரம் பாய்ந்த கட்டை. தேவராஜனுக்கு அவனையறியாத மதமதப்பு ஒன்று அவனுள்ளே தினவெடுத்தது. மாலை ஓய்வாய் உட்கார்ந்திருந்தபோது மாமனிடம் அவளைப் பற்றி விசாரித்தான்.

'ஏன் மாமா? யார் அந்தப் பொண்ணு?'

'அட பயித்தியக்காரப் புள்ளையே! அவளை அடையாளம் தெரியலியா உனக்கு? அவதான் 'உன்' அஞ்சுகம்.'

'அஞ்சுகமா அது?' என்று சற்று உரக்கவே கேட்டுவிட்டான்.

'ஆமாம்! ஏன் மாமா? அஞ்சுகத்திற்குத் தங்கை ஒன்று இல்லே?'

'யாரு? பங்கஜத்தைச் சொல்றியா? ஆமா, தேவு! அதுகூடப் பட்டணத்துலே காலேசிலே படிக்குது. உன்னை வந்து பார்க்கணும் பார்க்கணும்னு அடிக்கடி. காயிதத்திலே எளுதும். அம்புட்டுதான். அடுத்த மாசத்திலே இங்கே வருதே அது லீவுக்கு.'

'ஓ!'

தேவராஜன் அந்த 'ஓவோடு' நிறுத்திக்கொண்டான். மாமா உடனே உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தார்.

'தே...அஞ்சுவம், மருமவப் புள்ளைக்குக் காப்பி கொண்டா.'

சற்று நேரத்திற்கெல்லாம் அஞ்சுகம் வந்தாள் காபியோடு. அவள் நடையில் ஒரு நிதானம். அவள் கிராமியக் கட்டுடலைக் காணும்போது, காயுமில்லாமல் கனியுமில்லாமல் இருக்கும் நல்ல கொழுமையான கொய்யாவைக் கடித்துக் குதற வேண்டும் என்று ஊறும் தினவுதான் அவனுக்கு உண்டாயிற்று. பின்பு அஞ்சுகம் அடிக்கடி அவன் எதிரே வரத் தலைப்பட்டாள். காலைப் பலகாரம் சாப்பிட ஆரம்பிப்பது முதல் இரவு பால் சாப்பிடும்வரை அஞ்சுகத்தின் பணிவிடைகள்தாம். ஆவுடையப்பப் பிள்ளை மிகவும் கெட்டிக்காரர். அடுத்த மாதமே அவர் வீட்டில் கெட்டி மேளம் கொட்டச் செய்து விட்டார். அஞ்சுகம் 'மிசிஸ் மாரீசன்' ஆனாள்.

தேவராஜன் மனப்போக்கே அலாதியானது. திருமணம் முடிந்தவுடனே மனைவியை



அழைத்து வந்து குடும்பம் நடத்திவிட்டால் துய்க்கும் இன்பம் உடனே மறைந்துவிடுமாம். தலைவனும் தலைவியும் பிரிந்து இருந்து அப்பிரிவுத் துயர் இருவரையும் நன்றாய் வாட்டு வாட்டு என்று வாட்டி வறுத்தெடுத்த பின்பு அனுபவிக்கும் இன்பமே இன்பம் என்றெண்ணினான் அவன். சங்க இலக்கியம் பயின்றவனாயிற்றே? சும்மாவா?

இப்பொழுது 'மாரீசனின்' தலைவலிக்குக் காரணம் வேறொன்றுமில்லை. திருமணமான புதிதில் காதலர்கள் அசட்டுப் பிசட்டென்று கடிதம் எழுதிக் கொள்வது வழக்கம்தானே? அதுவும் தேவராஜனைப் போன்ற இலக்கியப் புழுவிற்கு, எழுத்தாளனுக்குக் கேட்க வேண்டுமா?

அஞ்சுகத்திற்கு முதலில் ஒரு கடிதம் எழுதினான். கடிதமா அது? அது ஒரு சிறிய குறுநாவல். சுமார் எண்பது பக்கங்களுக்கு வரிந்து தள்ளியிருந்தான். ஒவ்வொரு பக்கத்திலும் சிருங்கார ரஸத்தை அவுன்ஸ் அவுன்ஸாக அள்ளி ஊற்றியிருந்தான். அதில் அவன் அஞ்சுகத்திற்குப் பக்கத்திற்குப் பத்தாயிரம் முத்தங்கள் கொடுத்திருப்பான்.



அவளை அழைத்துக்கொண்டு, வானில், விண்மீன்கள் ஜாஜ்வல்யமாய் ஜ்வலிக்கும் கந்தர்வ உலகில், மஞ்சள் கதிர் நிலவில் மூழ்கியபடி மேகத் திட்டில் மிதந்தான். எப்பொழுதும் வீசிக்கொண்டேயிருக்கும் தென்றலையும், மெல்ல ஒலிக்கும் இசையையும் உடைய ஒரு ஸ்வப்ன உலகைச் சிருஷ்டித்து அதற்கு அவளை ராணியாக்கிக் காதல் கீதம் பாடியிருந்தான்.

அந்தக் கடிதம் போய் ஒரு வாரம் ஆயிற்று. பத்துநாள் ஆயிற்று. பதிலே வரவில்லை. மனம் வெந்த தேவராஜன் இன்னொரு சிறிய குறுநாவலை எழுதி அனுப்பினான். அதில் சோகரசத்தைப் பிழிந்து ஊற்றி அனுப்பியிருந்தான். பக்கம் பக்கமாகப் பிரிவுத் துயர் தாளாத தலைவன் அரற்றும் அரற்றல், அவன் படர் மெலிந்திரங்கல், கண் விதுப்பழிதல்,



நினைந்தவர் புலம்பல் என்று அழுது தீர்த்திருந்தான். வரிக்கு வரி பாலைக்கலி, திருக்குறள், சிலப்பதிகாரம், அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை என்று மேற்கோள்களை பிட்டுப் பிட்டுத் தூவியிருந்தான்.

அந்தக் கடிதமும் போயிற்று. அதற்கும் முதலில் பதிலே வரவில்லை. ஆனால் திடீரென்று ஒரு கடிதம் வந்தது. அதில்,

**அன்புள்ள அத்தானுக்கு,**

அஞ்சுகம் எளுதிக்கிட்டது. நீங்க ஏன் ஒரு மாசமா காயிதமே எளுதல்லே? அப்பாரு ரொம்பக் கவலைப்படுறாரு. நீங்க ஒடம்பு ஒண்ணுமில்லாம சொகமா இருக்கீங்களா? இருபது நாளைக்கு முந்தி ரெண்டு பெரிய காயிதக் கட்டு எம் பேரு போட்டு வந்திச்சு. அதிலே எனக்கு ஒண்ணுமே புரியலே. அப்பாருக்கும் வெளங்கல்லே. நீங்க ஒடனே பதில் போடறது.

இப்படிக்கு,

அஞ்சுகம் அக்கா சொல்படி

அம்மாக்கண்ணு

கடிதம் சின்னஞ் சிறிய பிஞ்சுக் கைகளால் எழுதப்பட்டிருந்தது. அம்மாக்கண்ணுவைத் தேவராஜனுக்குத் தெரியும். ஆரம்பப் பாடசாலையில் படிக்கும் அடுத்த வீட்டுச் சிறுமி அவள். அஞ்சுகம் சொன்னதை அப்படியே எழுதியிருக்கிறாள். இப்படிப்பட்ட கடிதத்தையா 'மாரீசன்' எதிர்பார்த்தான்?

ஒரு வாரத்திற்குப் பின்பு அவனுக்கு இன்னொரு கடிதம் வந்தது. அது முத்து முத்தாகக் குண்டு மல்லிகைச் சரம் கோர்த்தது போல் இருந்தது.



**அன்புள்ள அத்தானுக்கு,**

அநேக வணக்கம். முதன் முதல் என் கடிதத்தைக் காணும் உங்களுக்கு மலைப்பாய் இருக்கும். இப்பொழுதுதான் நான் வெளிநாடு சுற்றுப் பயணம் முடிந்து வந்தேன். நான்கு நாட்களுக்கு முன் கிராமத்திற்குச் சென்றேன். அக்கா என்னிடம் இரண்டு பெரிய காகிதக் கட்டுக்களைக் கொடுத்துப் படித்து விஷயம் என்னவென்று சொல்லும்படிக் கேட்டாள்.

அவை நீங்கள் எழுதிய கடிதங்களா? அம்மா! முதல் கடிதத்தைப் படித்தபோது நான் என்னையே மறந்து விட்டேன். எங்கோ விண்ணில் நீந்தினேன். நீங்கள் என் சகோதரியை மனத்தில் கொண்டுதான் எழுதியிருக்கிறீர்கள். ஆனால் எத்தனைச் சுவையுடன் எழுதியிருக்கிறீர்கள்? காலம் காலமாய் வைத்துப் போற்றப்பட வேண்டிய இலக்கியச் செல்வம். எனக்கு எவராவது இது போல் கடிதம் எழுதியிருந்தால் அவருக்கு இலக்கியத்தில் நோபல் பரிசு கொடுக்கச் சொல்லியிருப்பேன். அந்த இரண்டாவது கடிதத்தைப் படித்து விட்டு, அத்தான், நம்பினால் நம்புங்கள்; நம்பாவிட்டால் போங்கள்! என் தலையணை நனைந்து, கண்கள் சிவந்து, முகம் வீங்குமளவிற்கு அழுது விட்டேன். அப்படி ஒரு சோக இழை அந்தக் கடிதத்தினூடே! ஆனால் அத்தான்! என்ன செய்வது? அக்காவுக்கு இதையெல்லாம் புரிந்து கொண்டு ரசிக்கும் அளவுக்கு ஆற்றலோ, இலக்கிய உணர்ச்சியோ இல்லையே! என்ன செய்வது? உங்களை எண்ணி மிகவும் பரிதாபப் படுகிறேன். அதே நேரத்தில் என் அக்காவின் அதிர்ஷ்டத்தை எண்ணி வியக்கிறேன். அடுத்த வாரம் உங்களை வீட்டில் சந்திக்கிறேன்.

இப்படிக்கு

பங்கஜம்

இந்தக் கடிதத்தைப் படித்த தேவராஜன் ஆழ்ந்த பெருமூச்சு ஒன்றை விட்டான். தன் வாழ்க்கையே பாழாகி விட்டது போலவும், தன் மனைவியைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் அவசரம் காட்டி விட்டதாகவும் எண்ணி மருகினான். அதற்கு அடுத்து வெளி வந்த அவன் சிறு கதை ஒன்று சோகக் கதைகளில் முதலிடம் பெற்றது.

அடுத்த வாரம் மாலை தோட்டத்தில் பரந்திருந்த பச்சைப் புல் வெளியில் ஒரு டீப்பாய், இரண்டு பிரம்பு நாற்காலிகள், ஒரு கட்டுப் புத்தகங்கள் இவற்றோடு அமர்ந்திருந்தான் தேவராஜன். ஒரு பிரும்மாண்டமான புத்தகத்தை விரித்து அதில் மூழ்கியிருந்தான் அவன். திடீரென்று அவன் நாசியில் ஜாதி மல்லிகையின் மணம் கும்மென்று வீசியது. மெல்ல வளையல் ஒலி எழுந்தது. நிமிர்ந்து பார்த்தான். எதிரே...

சந்தனச் சிற்பமொன்று இளம் ரோஜாவின் சிவப்பைப் பூசிக் கொண்டு நின்றது. 'மாரீசன்' திகைத்தான்.

'அத்தான்!' சகோட யாழின் நரம்புகளை மெல்ல யாரோ வருடினாற் போல் இருந்தது.

'நீங்கள்..நீங்..நீ!'

---

**நவராத்திரி விழா அழைப்பிதழ்!**




அன்புடையீர்,

சரஸ்வதி பூசையன்று கொலுவுக்கு வருபவர்களுக்காக ஒரு படி எள்ளு சிம்பி[illegible] செய்திருக்கிறோம். வெற்றிலைப்பாக்குத் தேங்காய் கிடையாது. சிம்பிலிதான் [illegible]க்கப்படும். ஆகையால் அனைவரும் வந்திருந்து விழாவை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்

**சச்சுசுந்தரேஷ்**

'நான்தான் பங்கஜம் அத்தான். முதன் முதல் என்னை இப்பொழுதுதானே பார்க்கிறீர்கள்.'

'பங்கஜம்!' பெரு வியப்புடன் ஒரு முறை உரக்கக் கூவியே விட்டான். பிறகு 'உட்கார்! உட்கார்!' என்று உபசரித்தான்.

அவள் ஐந்தே நிமிடத்தில் ஆயிரம் விஷயங்களை அவனோடு பேசினாள். தன்னுடைய சுற்றுப் பிரயாணம், பிரபல எழுத்தாளர் 'மாரீசன்' தன்னுடைய சொந்த அத்தான் என்பதால் சிநேகிதகளிடம் அவளுக்கு இருந்த செல்வாக்கு, தான் படித்த புத்தகங்கள், அவளுடைய கலாரசனையையும், அறிவையும் கண்டு சினிமாவில் நடிக்க அழைக்கும் டைரக்டர் காந்தாராம், இப்படிப்பேசிக் கொண்டே போனாள்.

போதாததற்கு அவனுடைய அந்த இரண்டுக் கடிதங்களைப் பற்றி மறுபடியும் வானளாவப் புகழ்ந்தாள் அவள்.

ஆ! என்ன சரளமாக ஆங்கிலம் பேசுகிறாள் அவள்!

'அத்தான்! உங்கள் சொந்த லைப்ரரியை நான் பார்க்க வேண்டுமே!'

'ஓ! அதற்கென்ன தாராளமாய்!'

அவனுடைய நூல் நிலையத்தில் சுமார் அரை மணி நேரம் 'ஆகா, ஊகு' என்று புகழ்ந்தபடி புத்தகங்களைப் புரட்டினாள்.

'அத்தான்! நான் படிக்கவேண்டிய புத்தகங்கள் நிறைய வைத்திருக்கிறீர்களே!'

'ஏன்? எடுத்துக் கொண்டு போய்ப் படியேன்!'

'அடிக்கடி வந்து எடுத்துப் போகிறேன்.'

'ஓ! தாராளமாய்!'



தேவராஜன் கள் மாந்திய கடுவன் போல் அவள்பின்னே சுற்றினான். பின்பு பங்கஜம் அடிக்கடி அடையாறில் இருக்கும் அவன் வீடான 'ஜெயிலரூம்'ஸிற்கு வரத் தொடங்கினாள். பின்பு அவள் வேண்டுகோளின்படி ஒரு முறை அவர்கள் ஹாஸ்டல் தினத்தில் 'இலக்கியமும் காதலும்' என்ற பொருள்பற்றிச் சொற்பொழிவு செய்தான். மாரீசன் பேச்சைப் பிரபல பத்திரிகைகள் பல வெளியிட்டன.

ஒவ்வொரு முறையும் அவள் அவன் வீட்டிற்கு வரும்போது இலக்கியத்தில் புதுப் புது சந்தேகங்களோடு வருவாள். மாரீசன் அவளுக்குப் பல புத்தகங்களிலிருந்து பற்பல புதுப் புது விளக்கங்கள் கொடுப்பான். அவளைத் தன்னோடு அழைத்துச் சென்று பல கதாசிரியர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் அறிமுகப்படுத்தி வைத்தான்.

அடிக்கடி அவர்கள் இருவரும் மகாபலிபுரம் சென்று இயற்கைக் காட்சிகளில் தங்களை இழந்து நின்றார்கள். அப்போதெல்லாம் அவர்கள் வாயில் ஷெல்லி, கீட்ஸ், கெதே, வோர்ட்ஸ்வொர்த், ஷேக்ஸ்பியர், மில்டன், தாந்தே இவர்கள்தான் இருந்தார்கள். பூரண நிலவொளியில் கடற்கரையில் நேரம் போவது தெரியாமல் இலக்கியச் சர்ச்சையில் மூழ்கி இருப்பார்கள். அடிக்கடி ஆங்கிலப் படங்களுக்கும் போய் வந்தார்கள். நாட்கள் பறந்துகொண்டிருந்தன. மாதங்கள் வந்து கொண்டு இருந்தன. ஒரு நாள் இரவு.

கடற்கரையில் பால் நிலவு உலகையே வெள்ளிக் குழம்பாய் அடித்திருந்தது. தூய பால் நிற மணல் வெளியில் தேவராஜனும் பங்கஜமும் உட்கார்ந்திருந்தார்கள். அந்தச் சுற்றுப்புறச் சூழ்நிலை போதை வெறியை ஏற்றியது. தேவராஜனுக்கு நிலை கொள்ளவில்லை.

'பங்கஜம்!'

'உம்...'

'நிலவைப் பார்த்தாயா?'

'ஆமாம்! ரொம்பப் பிரமாதமாயிருக்கிறது!'

'பிரமாதமா? பங்கஜம்! இதே மாதிரி நிலவு தான் அன்றும். என்று? அது நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு. அமிர்த தாரை போல் நிலவு பொழிந்துகொண்டிருக்கிறது. மரம் செடி கொடிகளெல்லாம் நிலவு மழையில் நனைந்து கொண்டிருந்தன. கோட்டையினுள் அந்தப் புரத்தின் ஜன்னலின் ஊடே விழியைப் பதித்தவாறு மஞ்சள் நிலவின் தங்கக் கதிர்கள் அவள் பட்டுக் கண்களில் இழைய நின்று கொண்டிருந்தாள் ஜூலியட். அவள் விழிகள் ரோமியோ வருவானோ மாட்டானோ என்று ஏங்கிக் கிடந்தன. கடைசியில் அவன் வந்தான். அவனைக் கண்ட ஜூலியட் வில்லிலிருந்து புறப்படும் அம்பு போல் பாய்ந்து அவனை இறுகக் கட்டித் தழுவி உதடுகள்...'

'அத்தான்! அத்தான்! என்ன இது?'

'ஆ! பங்கஜம்! அத்தான் என்று தேனூறும் உன் தித்திக்கும் அதரங்களால் கூப்பிடும் போதெல்லாம் நான் எல்லையில்லாத வான வெளியில் 'ஜிவ்' என்று சிறகடித்துப் பறக்கிறேன். உன் பிறை நிலவு நெற்றியும், போதையூட்டும் உன் செவி தடவும் விழிகளும், நீண்ட நெடு நாசியும், உருண்டு திரண்ட உன் அங்கங்களும்




என்ன அண்ணே!
ஒண்ணுமில்லே! சும்மா கொலு சவாரி!

பங்கஜம்! என்னை வெறியனாக்கி விடும்போல் இருக்கிறதே..'

'அத்தான்! என்ன பிதற்றல் இது?'

'பிதற்றல் இல்லை பங்கஜம். பிரேம கீதம். ஏன் தயக்கம்? வா. இந்தத்தரித்திரம்பிடித்த உலகை விட்டு அதோ அந்த மேகத் திட்டில் ஏறிப் பறப்போம். விண்மீனைப் பறித்து விளையாடுவோம்!'

தேவராஜனின் கரம் பங்கஜத்தின் மெல்லிய இடுப்பை வளைத்தது.

'விடுங்கள்! என்ன பிதற்றல் இதெல்லாம்? நிலவைக் கண்டதும் பைத்தியம் பிடித்து விட்டதா?'

'இதற்கு நீ என்ன பெயர் கொடுத்தாலும் சரி பங்கஜம். இன்று வரை இதை உன்னிடம் சொல்ல எனக்குத் தைரியம் வரவில்லை. இன்று சொல்கிறேன். உன்னைக் கண்டதிலிருந்து..'

'போதும் நிறுத்துங்கள். நீங்கள் என் அக்காவின் கணவர். அதை நினைவில் வைத்திருங்கள். உங்களை நம்பி உங்கள் கையால் மூன்று முடிச்சுப் போடக் கழுத்தை நீட்டியவள் அங்கே கிராமத்தில் ஆயிரம் இன்ப நினைவலைகளுடன் காத்திருக்கிறாள். அக்காவை விரும்பி மணந்தீர்கள். இன்று என்னைக் கண்டதும் காதல். நன்றாயிருக்கிறது உங்கள் போக்கு..'

'பங்கஜம்! நீயா இப்படிப் பேசுகிறாய்? இத்தனை நாள் நீ என்னுடன் பழகியது..'

'என்ன சொன்னீர்கள்? இத்தனை நாள் எப்படிப் பழகினேன்? நீங்கள் என் அக்காவின் கணவர் என்ற முறையிலும், நான் படித்த படிப்பு சொல்லித் தந்த தைரிய மனப்பான்மையுடன் உங்களோடு சகஜமாகப் பழகினேன். உங்களுடன் சினிமாவுக்கு வந்தேன். இலக்கியச் சர்ச்சைகள் புரிந்தேன். உங்களை அத்தான் என்று அழைத்து விட்டதால் உங்களைக் காதலித்தேன் என்று பொருளா? நீங்கள் பெரிய எழுத்தாளர். உங்களோடு நான் சகஜமாகப் பழகுவதையும் உங்களிடம் எனக்கு இருக்கும் செல்வாக்கையும் பார்த்துப் பலர் பொறாமையடைந்தார்கள். சிலர் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களை மேலும் மேலும் பொறாமைக்கும், ஆச்சரியத்திற்கும் ஆளாக்க வேண்டும் என்ற ஒரு விபரீத ஆசையில் நெருங்கிப் பழகினேன். அது தவறா? இந்த ஆண்கள் உலகமே தனி. ஒட்டிப் பழகாமல் இருந்தால் பட்டிக்காடு என்பது. நெருங்கிப் பழகினால் அவர்களுக்கு இந்த உறவைத் தவிர வேறொன்றும் தெரியாது. நானும் நல்ல குடியில் பிறந்தவள்தான் மிஸ்டர் மாரீசன்! வேறு யாரிடமும் நான் இவ்வளவு நெருங்கிப் பழகியதில்லை. இதை நினைவில் வைத்திருங்கள்...'

'பங்கஜம்!'

'வருகிறேன்! இன்னும் இரண்டே மாதத்தில் எனக்கும் என் கல்லூரி விரிவுரையாளர் ஒருவருக்கும் திருமணம். அக்காவுடன் வந்து சேருங்கள்.'

பங்கஜம் புயலைப் போலப் போய்விட்டாள். பால் போலிருந்த கடற்கரை எழுத்தாளர் மாரீசனுக்கு இருண்டுவிட்டது. எப்படியோ வீடு வந்துசேர்ந்தார். மறுநாள் அவருக்குக் கிராமத்திலிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது.

**அன்புள்ள அத்தானுக்கு,**

அஞ்சுகம் தெண்டனிட்டுச் சமர்ப்பித்தது. உங்களுக்குப் பட்டணத்துலே பொளுது ரொம்பக் குளுமையா போயிக்கிட்டு இருக்கும்னு நினைக்கிறேன். பங்கஜத்தோட படிக்கிற பொண்ணு இந்தக் கிராமத்துக்காரிதான். இங்கே வந்தப்போ எல்லாம் ரொம்ப வெவரமா சொன்னா.

அத்தான்! மொதல்லே அதைக் கேட்டப்போ என் மனசு ரொம்பச் சங்கடப்பட்டுச்சி. நீங்களும் பங்கஜமும் ரொம்ப 'இதா' பழகுறீங்களாம். ஆனா பெறவு என்னை நானே தேத்திக்கிட்டேன். நானு ஒரு படிக்காத மூடம். அப்பாரு என்னை நாலு எளுத்துப் படிக்கவுடாமே செய்துட்டாரு. அத்தோடு நான் கறுப்பி. ஆனா பங்கஜம் நல்லாப் படிச்சவ. செவப்பு. உங்க மனம் அவளை ஆசைப்படறது நியாயம் தான். நீங்க முதல்லே என்னைக் கட்டிக்கிறேன்னு சொன்னதும் தான் நீங்க எப்படிச் சம்மதிச்சீங்கன்னு ரொம்ப நாள் குளம்பிக்கிட்டேயிருந்தேன். ஏந்தா நீங்க என்னைக் கட்டிக்கிட்டீங்களோ?

ஒண்ணே ஒண்ணு சொல்றேன். தப்பா இருந்தா மன்னிச்சிடுங்க. நீங்க நிறைய எளுதிப் புகளோடு இருக்கிறதில்லே எனக்கு ரொம்பச் சந்தோசம் தான். ஆனா மத்தவங்க உங்களோடு எப்படிப் பளகினாலும் எனக்கு ஓங்க புகழ் முக்கியமில்லை. நீங்க சாதாரண ஆளா இருந்தாக்கூட நான் உங்க கால்லே வுளுந்துதான் கும்புடுவேன். நீங்க என் தெய்வம். ஆயுசு பரியந்தம் உங்க அடிமைதான் நானு.

இன்னும் ஒண்ணு சொல்றேன். கோவிச்சுக்காதீங்க. உங்களுக்குத் தெரியாததில்லே. கருங்கல் கறுப்பா இருக்கேன்னு யாரும் வுட்டுட்டுப் போயிடமாட்டாங்க. செலையாச் செஞ்சு கோயில்லே வச்சுக் கும்பிடுவாங்க. செங்கல்லு சேப்பா இருக்குன்னுட்டுச் செலை செஞ்சு வைக்க மாட்டாங்க.

தப்பு எதுனாச்சியும் இருந்தா மன்னிச்சிக்குங்க.

அக்கா அஞ்சுவம் சொல்படி,

அம்மாக்கண்ணு.

கடிதத்தை மடித்த மாரீசன் கேவிக் கேவி அழுதான். அவன் எழுத்தாளனாக ஆனதற்கு மூல காரணமாய் இருந்த அவனுடைய முதல் கதையில், 'அவள் கறுப்புதான். உண்மை. அதற்காக அவளிடம் குணமில்லை என்று கூறிவிட முடியுமா? அவள் நிறத்தைப் பார்த்துக் குணத்தை அளந்தால், அவன் முட்டாள் தனத்திற்கு அவள் என்ன செய்வாள்?' என்று ஓரிடத்தில் எழுதியிருந்தான். அந்தக் கருத்து, படிக்காத ஜடமான அந்தப் பட்டிக்காட்டு 'அம்மன் சிலைக்கு' எப்படித் தெரிந்தது?

யாரோ மாரீசன் மனத்தில் புகுந்து சவுக்கால் விளாசு விளாசு என்று வெளுத்துக் கட்டினார்கள். உண்மை அனுபவம் பெற, தன் குடிலில் விளக்கேற்றி வைக்க 'அம்மன் சிலையை' அழைத்து வர அடுத்த ரயிலில் புறப்பட்டான் மாரீசன்.

★




அன்புள்ள அம்மாவுக்கு,
கமலி வணக்கமுடன் எழுதியது:

உன் கடிதம் கிடைத்தது. நம்ம கோபு இப்படி ஆகிவிடுவான் என்று கனவில்கூட நினைக்கவில்லை என்று வருத்தப்பட்டுக்கொண்டு எழுதியிருக்கிறாய். கோபுவின் திருமணத்தைப் பற்றி எழுதுகையில், 'கோபு சின்னஞ்சிறு குழந்தையல்ல. வயது வந்த பிள்ளை. அத்துடன் படித்தவன். உலக ஞானம் தெரிந்தவன். அவன் இஷ்டத்திற்குத்தான் விட்டுவிடுவோமே' என்று எழுதியிருந்தாய். அதற்கு நான், 'திருமணம் என்பது இன்று நாளையுடன் தீர்ந்துவிடும் விவகாரமன்று. ஆயிரம் காலத்துப் பயிர் என்று சொல்வார்கள். இதைப்பற்றி முடிவு செய்வதற்குப் படிப்புமட்டும் போதாது. வாழ்க்கையின் அனுபவமும் வேண்டும்' என்று எழுதியிருந்தேனே, ஞாபகத்துக்கு வருகிறதா?

கடல் மாதிரி பங்களா. ஏராளமான பணம். அவருடைய பிரபஞ்சம் பூராவும் அந்த ஒரே பெண்தான். அவளை எத்தனை 'செல்லமாக' வளர்த்தாரோ? அவளுடைய திருமணத்தைப்பற்றி என்னென்ன கோட்டைகள் கட்டிக்கொண்டிருந்தாரோ, பாவம்! அந்த வக்கீலைப் பற்றித்தான் சொல்கிறேன்.

நம்மைத்தான் எடுத்துக்கொள்ளேன். வீடில்லையா? பெற்றோர்கள் இல்லையா? எல்லாம் கிடக்கத் திருநீர்மலையில் என்ன திருமணம் வேண்டிக் கிடக்கிறது? ஏதாவது பிரார்த்தனையா அல்லது செலவைப்பற்றி யோசனையா?

வர வரக் காலத்தின் போக்கு எப்படித்தான் மாறிக்கொண்டு வருகிறது, பார்த்தாயா? சொன்னால் இந்தக் காலத்துப் பசங்களுக்கு 'மூக்குக்குமேல் கோபம் வந்துவிடும். ஒரு குடும்பம் என்பது கணவன்–மனைவியோடுமட்டும் அடங்கிவிடும் விஷயமன்று. தாயார், தகப்பனார், உடன்பிறந்தவர்கள், குழந்தைகள், உறவினர்கள் எல்லாரையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருப்பதுதான் குடும்பம். முன்பெல்லாம் திருமணம் என்றால் பெண்ணையோ, பிள்ளையையோ வைத்திருப்பவர்கள், எவ்வளவு தூரம் யோசித்து ஒரு முடிவுக்கு வருவார்கள்? பரம்பரை, குணம், முன்பின் ஏற்பட்டுள்ள சம்பந்தம் இவற்றைத்தான் முதலில் கவனிப்பார்கள். இதற்கு அடுத்தபடிதான் பணம், பதவி எல்லாம். கூடியவரையில் முன்பின் தெரிந்த இடமாகவே, அதுவும் உறவினர்களாகவே பார்த்துத்தான் முடிப்பார்கள். இதற்குக் காரணம், பெண்ணுக்கோ, பிள்ளைக்கோ, தன் கணவன் அல்லது மனைவியோடுமட்டும் பிடிப்பு–அன்பு–என்பது நின்றுவிடாமல், அது மாமனார், மாமியாரிடமும் இருக்க வேண்டும் என்பதுதான். முன்பின் உறவு அல்லது தெரிந்த இடமாக இருந்தால்தான் இந்த நிலைமையை எதிர்பார்க்கலாம். இல்லையென்றால், மாமா சொல்கிறமாதிரி, கூலிக்கு ஒப்பாரி வைக்கிற கதையாகத்தான் முடியும். இரத்த சம்பந்தம் என்று இருந்தால் அதன் போக்கே வேறுதானே! 'கண்டதே காதல், கொண்டதே மோகம்' என்ற ரீதியில் நடக்கும் திருமணங்களெல்லாம் ஒரு தினுசுதான். ஆனால், இம்மாதிரி திருமணங்களுக்குத்தான் காலத்தின் போக்கில் அதிக வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. ஆகவே அதன் கைவரிசையை அது காட்டித்தானே விடும்!' என்கிறார் மாமா.

நாட்டிய ராணி நர்மதாவை–நம்ம கோபுவின் அகமுடையாளைத்தான் சொல்கிறேன்–அந்த வக்கீல் பாவம், எந்த மாதிரி வரனைப் பார்த்துத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தாரோ? அவளுடைய வருங்கால வாழ்க்கை எந்த ரீதியில் இருக்க வேண்டும் என்று கனவு கண்டுகொண்டிருந்தாரோ? எப்படியோ கோபுவுக்கும் அவளுக்கும் தொடர்பு ஏற்பட்டு, கோபுவைத்தான் திருமணம் செய்துகொள்வேன் என்று அவள் ஒரே பிடிவாதமாகச் சொல்லியிருக்கிறாள். இதில் வக்கீலுக்கு இஷ்டமில்லை. அவர், படிப்போடுமட்டுமில்லாமல் அந்தஸ்தைப்பற்றியும் யோசிப்பது இயற்கைதானே! ஆகவே, தந்தைக்கும் மகளுக்கும் இது விஷயமாகப் பலத்த போராட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் மகள், தன் முடிவைச் சிறிதும் தளர்த்த



வில்லை. வக்கீலும் பெரிய பிடிவாதக்காரர்போலிருக்கிறது. இந்த முடிவை நிறைவேற்றுவதானால், அந்தத் திருமணம் தன் வீட்டில் நடக்க வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டாராம். நம்ம குடும்பத்துக்கு ஏற்ற ஒரு பெண்ணைப் பார்த்து முடிக்க வேண்டும் என்று நாமும் சொல்லிக்கொண்டிருந்தோமா? எங்கே இந்தத் திருமணத்துக்கு நாம் குறுக்கே வந்து நின்றுவிடுவோமோ என்று நமக்குத் தெரியாமல், திருநீர்மலையில் திருமணத்தைச் செய்துகொண்டிருக்கிறார்கள்!

இதோ உங்கள் மூன்றாவது வீட்டில் சீரும் சிறப்புடனும் விளங்கிய ஒரு பெரிய குடும்பம் இப்படித்தான் ஒரு 'நொடியில்' கலகலத்துப் போய்விட்டது. அவர்களுக்கு ஒரே பிள்ளை. ஏராளமான சொத்து. நல்ல பரம்பரை. ஒரே பிள்ளை 'விவகார'மல்லவா? பிள்ளையை ரொம்பவும் செல்லமாக வளர்த்துவிட்டார்கள். அதாவது கண்டிக்க வேண்டிய சமயங்களில் அதைக் கண்டிக்காமல் அதன் போக்கிற்கு விட்டுவிட்டார்கள். நல்ல படிப்பு. 'பெரிய இடத்து'ப் பையனாகையால், தகுந்த சிபார்சின்பேரில் நல்ல உத்தியோகமும் கிடைத்துவிட்டது. திருமணம் செய்ய வேண்டிய கட்டம் வந்தது. எந்தப் பெண்ணைக் கொண்டு நிறுத்தினாலும், ஏதாவது ஒரு குறை சொல்லி அவற்றைக் 'கழித்து'க்கொண்டே வந்தான். கடைசியில் திடீரென்று ஒரு நாள், தனது பெற்றோர்களின் சம்மதத்தை எதிர்பாராமலே ஒரு பார்ஸிப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டுவிட்டான். அவ்வளவுதான்! பெற்றோர்களைப் பிரிந்து தனிக் குடித்தனமும் போய்விட்டான்.

பெற்றோர்கள் பாவம், என்னென்னவோ கோட்டைகள் கட்டிக்கொண்டிருந்தார்கள். ஒரு நொடியில் எல்லாம் தகர்ந்து தரைமட்டமாகிவிட்டது. இதில், பிள்ளையின் தகப்பனாருக்குச் சொல்லமுடியாத கஷ்டம். பாவம். இதே விசாரத்தில் பைத்தியம் பிடித்துவிட்டது அவருக்கு. தாயார், பாவம், காலையும் மாலையும் கோயிலைச் சுற்றிக்கொண்டும், மாதத்துக்கு ஒரு நகையாக அம்மனுக்குச் சமர்ப்பித்துக்கொண்டும் தான தருமங்கள் செய்துகொண்டும் இருக்கிறாள். தங்களுடைய பிரபஞ்சம் என்று கருதிய ஒரே மகனைக்கொண்டு எப்படியெல்லாமோ இருக்க வேண்டுமென்று 'இல்லாத' திட்டமெல்லாம் வகுத்துக்கொண்டிருக்கையில், அவன், இவர்கள் இஷ்டத்திற்கு விரோதமாக இப்படிச் செய்துவிட்டானென்றால், அவர்களுக்கு இனி வாழ்க்கை என்பது எப்படித்தான் இருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? அந்த வட்டாரத்திலேயே பல தலைமுறைகளாகச் சீரும் சிறப்புமாக இருந்து வந்த ஒரு குடும்பம் ஒரு 'நொடியில்' இப்படி ஆகிவிட்டது.

எதற்காகச் சொல்ல வந்தேனென்றால், தாடிக் கிழவர் சொல்கிற மாதிரி, சுதந்திரம் என்பது ஒவ்வொருவனுடையவும் பிறப்புரிமைதான். ஆனால், எதற்கும் விதிவிலக்கு என்று ஒன்று உண்டல்லவா? ஆண்களாகட்டும், பெண்களாகட்டும் எல்லாருக்கும் சுதந்திரத்தில் சம பங்கு உண்டு. ஆனால் 'சிறிசுகளை'மட்டும் அவற்றின் போக்குக்கு விட்டுவிடக் கூடாது. அவ்வப்பொழுது கொஞ்சம் கட்டுதிட்டங்கள் இருந்துகொண்டுதான் இருக்க வேண்டும். இல்லையென்றால், மனம்தானே! அது மிகவும் பலவீனம் வாய்ந்தது. எந்த வழியில் விட்டாலும் போய்விடக் கூடியது. அதிலும் சிறிசுகளாக இருந்தால் கேட்கவே வேண்டியதில்லை. நல்லது கெட்டதைச் சீர்தூக்கிப் பார்க்கும் அவகாசம் அந்த வயதில் ஏற்படாது. இதைச் சொன்னால் இதன் உட்கருத்து இந்தக் காலத்துப் பிள்ளைகள் சிலருக்கு அவ்வளவு சீக்கிரத்தில் புரியமாட்டேனென்கிறது. எதிர் வாதம் செய்கிறார்கள். பின்னிட்டுப் பச்சாத்தாபப்படுகிறார்கள். இவர்கள்மேலும் தவறு சொல்வதற்கில்லை. காலத்தின் போக்கு அப்படி ஆகிவிட்டது என்றால், அவர்கள்தான் என்ன செய்வார்கள் பாவம்! அதையும் சொல்ல வேண்டுமல்லவா?' என்கிறார் கிழவர்.

இந்தத் திருமண விஷயத்தில் நம்ம கோபுவைப் பிரமாதமான அதிர்ஷ்டசாலி என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள். ஒரு பிரபல நாட்டியக்காரி, அத்துடன் நல்ல படிப்பு, அழகு, எத்தனை செல்வச் சீமான்கள், பிரபல உத்தியோகஸ்தர்கள், நடிகர்கள் இவளைத் தங்கள் வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொள்ள ஒற்றைக் காலால் தவம் செய்தார்கள்! அப்படிப்பட்ட ஒருத்தி சாதாரண ஒரு பட்டதாரிக்குக் கிடைத்துவிட்டாளென்றால், அது அவனுடைய ஜன்மாந்திர சுகிர்தம் என்றுதான் சொல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள். உலகத்தின் திருஷ்டியில் அவர்கள் நினைப்பது என்னவோ சரியாக இருக்கலாம். ஆனால், நம்போன்ற குடும்பங்களுக்கு அது அவசியம்தானா? யானையைக் கட்டித் தீனி போட நம்மால் முடியுமா? இதனால் நம் குடும்பத்துக்கு சந்துஷ்டி ஏற்படுமா?' என்ற விஷயங்களை யோசிக்க வேண்டுமல்லவா?

இதெல்லாங்கூட எப்படியாவது இருக்கட்டும். அழைப்பு வந்துவிட்டதென்று, திருமணம் ஆனவுடனே, கலாசார கோஷ்டியொன்றுடன் நர்மதா வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணத்துக்குப் புறப்பட்டுவிட்டாளே! மாமனாருக்கு உடம்பு சுகவீனமாக இருக்கும் பொழுது, பொறுப்பு இல்லாமல் திடுதிப்பென்று இப்படிப் போய்விடலாமா? தான்மட்டும் போவதோடு நில்லாமல் கோபுவையும் அழைத்துக்கொண்டு போய்விட்டாளே! இந்த மாதிரி போகலாமா?—என்று நீ கேட்பாய். அந்தக் கலையில் தனக்கிருக்கும் புலமையைப் பரவச் செய்வதற்கு ஏற்படும் ஒரு வாய்ப்பை நழுவ விடுவதற்கு அவ்வளவு சுலபத்தில் மனது இடம் தந்துவிடுமா?

அதோ தெருவில் தபால்காரன் 'இவர்' பெயருக்கு வந்துள்ள ஒரு கடிதத்தைக் கொடுக்கிறான். அதைப் பிரித்துப் பார்த்தவர், 'ருஷ்யாவிலிருந்து நம் கோபு எழுதியிருக்கிறான்' என்று சொல்லிக்கொண்டே, உள்ளே வருகிறார். மற்றவை அடுத்த கடிதத்தில்.

உன் அன்புள்ள,

கமலி

★

---

## "என்ன விநோதம் பார்"



# இதோ யோசனை

**கோமதி ஸ்வாமிநாதன்**

அனபுடையீர்,

வணக்கம். தாங்கள் அனுப்பிய சிறுகதையை இன்று தங்களுக்கே திருப்பி அனுப்பியிருக்கிறோம். வெகு சிறந்த கதை. ஆனால் உங்கள் கதையை நாங்கள் வெளியிட்ட பிறகு அதைப் பார்த்து வாசகர்கள் அதே மாதிரி தரமான கதைதான் இனி பிரசுரிக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்தால் எங்களால் நிலைமையை எப்படிச் சமாளிக்கமுடியும்? சாதாரணமான கதைகள் ஏதும் இருந்தால் அனுப்பி வையுங்கள். பிரசுரிக்க முயற்சிக்கிறோம்.

158452

ஆசிரியர் 'ஆகாயக்கோட்டை'.

★

அன்புடையீர்,

வணக்கம். தாங்கள் அனுப்பிய நாவலைப் படித்தே பார்த்தோம். அச்சில் சுமார் நானூறு பக்கங்கள் வரலாம். எங்களுடைய பத்திரிகையில்தான் எந்த விஷயத்தையும் மூன்று பக்கங்களுக்கு மேல் போடுவதில்லையே! பரவாயில்லை. காதல் ரசம் சொட்ட புதிதாக மூன்றரைப் பக்கம் வரும்படி ஒரு நாவல் எழுதி அனுப்பி வையுங்கள். பரிசீலனை செய்கிறோம்.

ஆசிரியர் 'ஆகாயக்கோட்டை'.

★

போன்புடையீர்,

வணக்கம். தாங்கள் மனமுவந்து எங்களுக்கு அனுப்பிய நகைச்சுவை நாடகம் கிடைத்தது. அதை உங்களுக்குத் திருப்பி அனுப்புகிறோம். மேடைக்கு ஏற்றது. அச்சில் ஏறினால் அதன் சுவாரசியம் குறைந்துவிடாதோ?

ஆசிரியர் 'ஆகாயக்கோட்டை'.

★

ஆர்வமுள்ள அன்பருக்கு,

வணக்கம். தங்கள் கட்டுரை கண்டோம். வெகு பிரமாதம். சங்ககால இலக்கியத்தைத் தங்கமான முறையில் உருவாக்கியிருக்கிறீர்கள். இன்னும் நூறு வருடங்கள் போனால் உங்கள் கட்டுரையின் மதிப்பு மேலும் உயருமென்பது எங்கள் திடமான நம்பிக்கை. உங்கள் சந்ததிகளிடம் ஒப்படைத்து வைப்பீர்கள் என்று எண்ணி அதைத் திருப்பி அனுப்பியிருக்கிறோம்.

ஆசிரியர் 'ஆகாயக்கோட்டை'.

★

அன்புடையீர்,

தங்கள் கவிதை ஒன்று வரும் 'ஆகாயக்கோட்டை' இதழில் வெளியாக விருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவசரத் தேவைக்கு ஒரு பக்கத்தை நிரப்ப தங்கள் கவிதையின் முதற் பாதி உதவியது. இரண்டாவது பகுதி அடுத்த இதழில் வெளியாகும் என்று நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்களல்லவா? (பி. கு.) கவிதைகளுக்குச் சன்மானம் கிடையாது.

ஆசிரியர் 'ஆகாயக்கோட்டை'.

**(ஒரு ஆரம்ப எழுத்தாளர் பத்திரிகை ஆசிரியருக்கு அவருடைய உபயோகத்திற்காக எழுதி அனுப்பிய சில மாதிரிக் கடிதங்கள். 'பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்' என்ற ஒரே மாதிரி சீட்டுக்கள் நூற்றி ஒன்று கண்ட பிறகு அவர் கொடுத்த புது யோசனைகள் இவை.)**





## சென்னையில் நேருஜி

★

(மேல்) அடையாறு மருத்துவ மனைக்கு நன்கொடையளித்த சிவாஜி கணேசன் பிரதமருக்கு வணக்கம் கூறுகிறார். (நடு) ஆசிய தூரக் கிழக்கு நாடுகளை மோட்டார் பஸ் பிரயாணிகள் பற்றிய கருத்தரங்கில் நேருஜி. (கீழ்) பஞ்சாயத்து மாநாட்டில் பங்கு கொள்ளச் செல்கின்றார் நேருஜி.





Printed and Publis'ed by r. Rajagopalan for and on behalf the 'Sv adesamitran' Limited., at the 'swade amitran' Fress. Victory House' Mount Road. Madras.
[redacted]




இலங்கையில் கிடைக்குமிடம்: AVRA Ltd., Colombo.